www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20 JUDE

டிச.28,1997–ஜன.03,1998

11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 237

# களத்தில் தமிழ்க் கட்சிகள் இன்னுமொரு 'ஜயசிக்குறுய்'



## குட்டித் தேர்தலும் குத்துக் கரணங்களும்

## சுஷ்மிதா என் காதலி

## பிரபா–மற்றுமொரு கட்டுக்கதை



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## பிடில் வாசிக்கிறார்கள்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

ரோம் நகர்
பற்றி எரிந்து கொண்டிருக்க
பிடில் வாசித்தவன்
நீரோ மன்னன்!
அப்படியும் ஒரு மன்னன்
இருந்திருப்பானா?
என்ற ஆச்சரியம்
எப்போதாவது தோன்றியதுண்டு!
சமீப காலத்திய
நம் நாட்டு நடப்புகள்
அந்த ஆச்சரியத்தை
அடியோடு அழித்துவிட்டன!
தமிழர்கள்
கண்மூடித்தனமாக
கைது செய்யப்படுதல்!
விசாரணைகள் இன்றி
நீண்டகாலமாக
தடுத்து வைக்கப்படல்!
அகதி முகாம்களில்
ஆடுகள், மாடுகள்போல்
அடைத்து வைக்கப்படல்!
ஷெல் வீச்சுக்கள்
குண்டு வீச்சுக்கள்
மர்மக் குண்டு வெடிப்புகள்
காரணமான உயிரழிவுகள்!
தொடரும் யுத்தம்
உற்பத்தி செய்துவரும்
எண்ணற்ற அகதிகள்!
உண்ணாவிரதம்
இருந்த கைதிகள்
அதிகாரிகளால் தாக்கப்படல்!
இடமாற்றப்பட்ட
கைதிகள்
காடையர்களால் கொல்லப்படல்!
கடந்த காலத்தைவிட
இன்றைய சூழ்நிலை
தமிழ்பேசும் மக்களுக்கு
அவலங்கள் அதிகமாகிவிட்ட
சூழ்நிலையாகி இருக்கிறது!
கடந்த காலத்தில்
தமிழ் மக்கள்
போராடத் தொடங்கியது
நியாயம் என்பதை
இன்றைய ஜனாதிபதி
ஏற்றுக் கொள்கிறார்!
அது நியாயம் எனில்
இன்றும் போராட
அதைவிட ஆயிரம் மடங்கு
நியாயம் உள்ளது
என்பதையும்
ஜனாதிபதி அவர்கள்
கவனத்தில் கொள்ள வேண்டும்!
இனப் பிரச்சனைத் தீ
மேலும் உக்கிரத்துடன்
பரவிக் கொண்டிருப்பதையே
கண்டு கொண்டிருக்கிறோம்!
தீயின்
கொடும் நாக்குகள்
முன்பைவிட வேகமாக
தமிழ் பேசும் மக்களை
தீண்டித் தீய்க்கின்றன!
தீவைத்தது யார்?
என்று
ஆளும் தரப்பும்
எதிர்த்தரப்பும்
ஒருத்தரை ஒருத்தர்
குற்றம் சாட்டி கொள்கின்றன!
தீயை மூட்டியதும்
தீயை தணிக்காதிருந்ததும்
கடந்த கால ஆட்சியாளர்கள்
செய்த தவறு
என்கிறார் ஜனாதிபதி!
ஆம், உண்மைதான்!
அதனால்தானே
அவர்களையெல்லாம்
புறக்கணித்த மக்கள்
இன்றைய ஜனாதிபதிக்கு
வாக்களித்து வரவேற்பளித்தனர்!
ஆனால், இப்போதும்
கடந்த கால ஆட்சிபற்றியே
குறை கூறிக்கொண்டிருந்தால்
என்ன அர்த்தம்?
தீயைத் தணிக்க முயலாமல்
அதற்குரிய நடவடிக்கை
எதனையும் எடுக்காமல்,
"தீயை அணைத்தே தீருவோம்
தீயை அணைத்தே தீருவோம்"
என்று ஆட்சியாளர்கள்
கூவும் ஒலிமட்டும்
நம் செவியில் விழுகிறது!
ஆம், இதுவும்
ஒரு வகையான
பிடில் வாசித்தல்தான்!
தீ வளர்ந்து வருகிறது
அணைக்க முயலாமல்
திக்கெட்டும் கேட்கக்கூடியதாக
'தீயை அணைத்தே தீருவோம்!'
என முழங்குவதும்
பிடில் வாசித்தல்தான்!
தீப்பற்றி எரிகிறது
இலங்கைத் தீவு!
பிடில் வாசிக்கிறார்கள்
ஆட்சியாளர்களும்
அரசியல்வாதிகளும்!
என்று தணியும் தீ?
எவர் தணிப்பார்?"

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## சமாதானத்திற்காகப் பிரார்த்திப்போம்



மனுக்குலத்தை மீட்க, இறைவன் அன்று பெத்லகேமில் மனிதனாக அவதரித்தார்.

மார்கழிப் பனியில், மாட்டுத்தொழுவத்தில் கிறிஸ்து பிறந்தார். தம்மை பாவச்சேற்றிலிருந்து விடுவிக்க, உலக இரட்சகர் பிறந்தார் என்று மக்கள் பேரானந்தம் கொண்டனர்.

இயேசு கிறிஸ்து பிறந்த இந்த நாளைக் கொண்டாடும் நாங்கள்- புத்தாடைகள் அணிந்து, பட்டாசுகள் கொளுத்தி, சுவையான பட்சணங்கள், வாழ்த்து மடல்கள், ஆடம்பரமான கொண்டாட்டங்கள், களியாட்டங்களில் ஈடுபடுகிறோம்.

இந்தப் பரிசுத்தமான நாட்களில் நாம் இப்படியான களியாட்டங்களில் ஈடுபடுவதைக் குறைத்து, பிறர் மனதில் சந்தோஷத்தைக் கொடுக்கும் காரியங்களில் ஈடுபடவும்,

இன்று உலகெல்லாம் போர் மேகங்கள், இரத்தக்களரிகள், வன்முறைகள் எல்லாம் நீங்கி, எல்லாரும் ஒருவருக்கொருவர் அன்புடன் இருக்கவும், சமாதானம் தழைக்கவும் இறைவனைப் பிரார்த்திப்போமாக!

ஜி. டானியல்.

## இறந்தவர்களை ஏசக்கூடாது!

நம்மை விட்டும் சென்று விட்ட மனிதர்களைப் பற்றி குறைகூறிக் கொண்டிருப்பது கூடாது! அவர்கள் உண்மையில், தமது வாழ்நாளில் பாவங்களை செய்தவராக இருந்தாலும் சரியே!

ஏனெனில் அவர் செய்த பாவத்திற்குரிய தண்டனையை அல்லாஹ்விடத்தில் மரணத்தின் மூலம் பெறத் தொடங்கி விடுகிறார்.

எனவே அவரைப்பற்றி தேவையற்ற முறையில் குறை கூறுவதைத் தவிர்க்க வேண்டும்.

"இறந்தவர்களை ஏசாதீர்கள். ஏனெனில் அவர்கள் முற்படுத்திய தற்குரியதை பெற்று கொண்டார்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி)

எனவே நாம் மரணித்தவர்களின் பாவங்களைப் பற்றி பேசாமல், அவர் செய்த நன்மைகளை கூறுங்கள். ஏனெனில் நன்மைகளைப் பற்றிப் பேசுவதால் ஈடேற்றம் கிடைக்கக்கூடும்.

தொகுப்பு: எம்.எம்.எம்.ஸாகிர், சாய்ந்தமருது-10.

## கவிதைப் போட்டி இல.234

பரிசுக்குரிய கவிதை

### சாவடி



தாண்டும்போது
கவனம்;
தீண்டி
பின் தோண்டி
புதைத்துவிடுவார்கள்!!

எஸ்.பிரபா-பதுளை.

### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:

**நீதி**

நீங்கள் எடுத்தால்
பயிற்சியாம்;
நாங்கள் எடுத்தால்
ரெயினிங்கா?

இ.சுலோசனா-
மட்டக்களப்பு.

**ஆவியின் விளையாட்டு!**

விளையாட்டும், படிப்பும்
விழியிரெண்டு எனக்காத்த,
இளசுகளைக் கொன்று
இரத்தத்தை உறிஞ்சியோர்முன்,
பட்டழிந்தோர் ஆவிவந்து
விளையாடும் காட்சியிது
வயிறுவாய் பற்றுதம்மா!

கு.திருமால்- அமிர்தகழி, மட்டக்களப்பு.

**அநாகரிகம்**

பல்கலைக் கழகத்தில்
அறுபத்தைந்தாம்
கலையாக-ராக்கிங்
கலையை எப்போது
சேர்த்தார்?!

அ-அச்சுதன்-சேனையூர்-06, மூதூர்.

**எது?**

மிதி வெடியின் உந்துதலோ?
உடற் பயிற்சியின் கரிசனையோ?
அங்கவீனப் பயிற்சியா?
இல்லையேல் உடலின் உறுதியா?

வி.கமலதாசன்- பூவாலன் வீதி, பெரியநீலாவணை-02.

**நிழல் நிஜமாகுமா?**

போர் உரக்கும் பூமியின்
காரிருள் அகல்வதெப்போ?
கலங்காதிவர் கற்று, ஓய்வில்
களிப்புற விளையாடுவதுமெப்போ?

'மலையகன்'-தளதா வீதி, கண்டி.

**பயிற்சி**

பாய்ந்து பயிற்சி பெற்றாலும்
போட்டியில் சேரப்போவதில்லை!
கடைசியில் வேலிகளைத்
தாண்டிப் பாயத்தான் உதவும்!

ஞா.ஜெயக்காந்-பெரியநீலாவணை-02,
கல்முனை.

**மிகக் கவனம்**

அழகு மகள் மனம் பேரி
அழிபட்ட தேசமிது
கற்றுவந்த கிருசாந்தி
களைபப்பட்ட பூமியது
ஆருனக்கு கயிறு தந்து
ஆடச் சொன்னார் தாமரையே
பார்த்த கண்கள் பரபரக்கும்
வேண்டாம் நீ வீடேகு!

தர்ஷிக்கா கனகசிங்கம்-கல்லடி,
மட்டக்களப்பு.

**அன்றும் இன்றும்...**

சுழலும் கயிறும்
துள்ளும் வேகமும்-அன்று!
சுழலும் துப்பாக்கியும்
பதுங்கிப் பாய்தலும்-இன்று!!


அ.சந்தியாகோ- அசோகா
வித்தியாலயம், கண்டி.

**மீள முடியுமா?**

கரைசேர நீச்சலடிப்பதுவும்
தடுக்கி விழாமல் கயிறடிப்பதுவும்
போர்க்கால சூழ் நிலையில்
எத்தனை நாள் நீடிக்குமோ?

ம.திருவரசுராசா-தவசிகுளம், கண்டிவீதி,
வவுனியா.

## கவிதைப் போட்டி இல.237



**கவனியுங்கள்!** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 03.01.1998

**முகவரி:**
கவிதைப் போட்டி இல.237,
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல—1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை



பூலான்தேவி நாம் எதிர்பார்த்தது போன்றே தூள்கிளப்புகிறாள். ஆனாலும் அப்பாவி ஜனங்களை கொல்லாமல், குற்றம் செய்தவர்கள், உள்ளூர் கொடுமைக்காரர்கள் ஆகியோரை பழி தீர்த்திருக்கலாம்.

திருமதி பூ.உமாராணி, மன்னார்.

### ஆரம்பமே அசத்தல்

'மேக்கப் புன்னகை' பிரமாதம். சினிமா உலக நடப்புக்களையும் கதை ஓட்டத்துடன் அறியத் தருகிறார் பிரபாகர். 'இனி என் முறை' ஆரம்பமே அசத்தல். பாலகுமாரன் நாவல் என்றால் கேட்கவும் வேண்டுமோ?

கி.தவமலர், கொழும்பு-12.

### ஷெல்மழை

வன்னியில் மன்னகுள மோதல் நிலவரத்தை 'முரசு' எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருந்தது. அந்த மோதலில் ஆட்டிலெறி ஷெல்களை இருதரப்பும் உபயோகப்படுத்தவில்லை என்பது உண்மைதான். ஆனால் மோதல் முடிந்த பின்னர் மாலையில் படையினர் ஆட்டிலெறி ஷெல்களை ஏவினர். எங்கள் குடிமனைப் பகுதியிலும் ஷெல்கள் வீழ்ந்தன.

செல்வி இ.சுகிர்தா, மாங்குளம்.

### காணாமல் போனோர் பெயரால் பிரபலம்

அன்புள்ள முரசுக்கு;

'காணாமல் போனோர்' இன்னமும் உயிருடன் இருப்பதாகக் கூறி, அவர்தம் உறவினர்களை தமிழ்க் கட்சிகள் ஏமாற்றுவது உண்மை. தமிழ்க் கட்சிகள் மட்டுமன்றி, சில பிரமுகர்களும் தங்கள் பெயர்களை பிரபலப் படுத்த, அப்பாவி உறவினர்களை பகடைக்காய்களாக்கி வருகின்றனர்.

உங்கள் புருஷர்கள், உங்கள் பிள்ளைகள் உயிருடன் இல்லை என்று எடுத்த வீச்சில் கூறுவதும், அதனை அந்த உறவினர்கள் ஜீரணிப்பதும் கஷ்டம்தான். படிப்படியாக அந்த உண்மையை தெரியச் செய்திருக்கலாம். அதைவிடுத்து மேலும் மேலும் நம்பவைப்பதும், கண்டுபிடித்து தருகிறோம் என்ற பாணியில் தமிழ்க் கட்சிகளும், சில பிரமுகர்களும் அந்த உறவினர்களை தங்கள் பின்னால் அலைய வைப்பதும் பொல்லாத ஏமாற்று.

'முரசு' கூறும் கருத்துக்கள் பொய்த்தது அரிதிலும் அரிது. காணாமல்போனோரின் உறவினர்கள் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகப் போகின்றனர். ஏமாறப் போகின்றனர் என்று முரசின் கருத்தும் உண்மைதான் என்பதை ஒரு நாள் யாவரும் அறிவர்.

கே.விஜயசிங்கம், நாவடி, யாழ்ப்பாணம்.

### இடையே தொங்கும் கறுப்புத்திரை

உள்ளூராட்சித் தேர்தல் விடயத்தில் இராஜதந்திரியின் அலசல் சிறப்பாக இருந்தது. சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை யாழில் நிலவுவது ஜன நாயகமா? ஆயுத அதிகாரமா? என்பதை புட்டு வைத்தது. உலகின் கவனம் மறுபடி தமிழ் மக்கள் பக்கம் திரும்பும்போது, அதனைத் தடுக்க தொங்கவிடப்பட்டுள்ளது கறுப்புத் திரை! அந்தத் திரையில் யாழ் மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல் என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

ஆ.ராசலிங்கம், மட்டக்களப்பு.

### என்னாச்சு? மண்ணாச்சு!

அன்பு முரசே!

'ஐந்துக் கட்சிக் கூட்டு, ஐக்கியப்பட்டு தீர்வு முயற்சிகளில் முன்னெடுப்பு' என்றனரே. இன்று என்னாச்சு? தேர்தல் வந்ததும் ஒற்றுமை மண்ணாச்சு. பிரபாகரன் தடை செய்திருக்காவிட்டால், நாமும் வெளுத்து வாங்கியிருப்போம் என்பர். வெளுத்து வாங்கும் இலட்சணம்தான் தெரிகிறதே. அதனை உரிய தருணத்தில் தொட்டுக் காட்டிய இராஜதந்திரியாருக்கு சபாஷ்!

பி.கணேசநாதன், வவுனியா.

### முரசுக்கு மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை இடம்பிடித்தவர்கள்:

* மு.சரவணன், பசறை.
* சி.ஸ்ரீரவி, சிலாபம்.
* அமீன், மடவளை.
* ந.ரதீஸ்வரன், தம்பிலுவில்-02.
* ஆர்.குல்ஸ்னோபர், ஏறாவூர்-02.
* ஆர்.ஜெயராஜ், பொகவந்தலாவ.
* கே.கணேசமூர்த்தி, அலவத்துகொட.
* நூருள் அஸ்மியா, கம்பளை.
* மா.தேவராஜா, ஹொப்டன்.
* ஏ.செபஸ்தியன், உக்குவளை.
* ஆ.முகுந்தன், வெள்ளவத்தை.
* திருமதி ஜெ.ஜெகதீஸ்வரி, திருமலை.
* உ.யுவராணி, பிட்டகந்தை.
* எஸ். விக்டர் டி மெல், கொழும்பு-11.
* என்.நந்தகுமார், மன்னார்.
* எம்.ஷீலா, மன்ஹாசி.
* மாரிமுத்து சிவகுமார், ஹட்டன்.
* கே.சண்முகமூர்த்தி, கனடா.
* பவானி சச்சுதானந்தன், வத்தளை.
* செல்லையா சுதாஸ், பூண்டுலோயா.
* பே.கிறிஸ்ரி, மட்/தாண்டவன்வெளி.
* பி.ராதா, மன்னார்.
* ஏ. றினோஸியா, திஹாரிய.
* ஏ.எல்.எம்.றியாஸ்தீன், கல்முனை-05.
* எம்.ரி.எம்.அன்ஸார், ஏறாவூர்-03.
* எல்.ராஜக்குமார், புத்தளம்.
* தம்பாப்பிள்ளை விஜயராஜா, செங்கலடி.
* அ.அச்சுதன், சேனையூர்.
* எம்.அவுப், மாத்தளை.
* பரீட், காத்தான்குடி.
* ஞா.சிவகுமார், வீரவெட்டுவான்.
* ஸலீம் எம்.கடாபி, ஹொறவபொதானை.
* என்.எஸ்.ராஜா, முகத்துவாரம், மட்டக்களப்பு.
* ஜெ.சுதா, மட்டக்களப்பு.
* எஸ்.வித்யா, கொழும்பு-13.
* பி.எம்.ஹமீம், வாழைச்சேனை.
* எஸ்.காந்தன், மட்டக்களப்பு.
* ஏ.அனுசுயா, கொழும்பு-13.
* எம்.ஹாயாத், கல்முனை.
* என்.சாந்தினி, கல்லடி.
* எஸ்.டினேஸ், கண்டி.
* பி.அம்பிகாபதி, ஜெர்மன்.
* இர்பான்.என்.முஹமட்.
* ஏ.எம்.எஸ்.பர்னா, சாய்ந்தமருது-07.
* பொ.ரமேஷ், சம்மாந்துறை.
* வீரசிங்கம் ஸ்ரீதரன், மல்லிகைத்தீவு.
* எஸ்.ஏ.எம்.சிபால், வரக்காமுர.
* எம்.சாஜகான், புத்தளம்.
* மயில்வாகனம் நிருபன், கொழும்பு-06.

டயானாவின் கதை இதமான சோகம். அந்தக் கால படங்களும் அபூர்வம். கதை நடந்த கால கட்டத்திற்கு ஏற்ப படங்கள் பிரசுரமாவது பொருத்தமாய் உள்ளது. முரசின் பாணியே தனிதானே.

எம்.ஜபார்கான், கண்டி.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட
சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.



படிப்பகம்

www.padippakam.com

# போட்டியிடுவோருக்கு புலிகள் எச்சரிக்கை

## 'துரோகிகளாகவே கருதப்படுவார்கள்'

**யா**ழ் மாவட்டத்திலும், பச்சிலைப் பள்ளி பிரதேச சபையிலும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிட முன்வந்த வேட்பாளர்கள் சிலர் புலிகளால் எச்சரிக் கப்பட்டனர்.

புலிகளின் அனுமதியுடன் சுயேட்சைக் குழுவாகப் போட்டியிட விரும்பிய பிரமுகர் களுக்கும் புலிகள் அனுமதி கொடுக்க வில்லை.

யாழ் மாநகர சபை, பருத்தித்துறை நகரசபை, வல்வெட்டித்துறை நகரசபை போன்றவற்றில் சுயேட்சையாகப் போட்டி யிட முயற்சிகள் நடந்தன.

புலிகள் இயக்கத்தினரின் அனுமதி கிடைக்காமையால் சுயேட்சைக் குழுக்கள் தேர்தலில் போட்டியிடவில்லை. ஈ.பி.டி.பி. இயக்கத்தில் இருந்து விலக்கப்பட்டோர் மட்டுமே இரண்டு உள்ளூராட்சி சபைக ளில் புளொட் ஆதரவுடன் போட்டியிடுகின்ற னர். எனினும் புளொட் இயக்கத்தினரும் அந்த இரு சபைகளிலும் போட்டியிடு கின்றனர்.

உள்ளூரில் மக்களின் நன்மதிப்பு பெற்ற கட்சிசாராத பிரமுகர்கள் எவரும் இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டி யிடவில்லை.

தேர்தலில் போட்டியிடக்கூடும் என பெயர் அடிபட்ட சில பிரமுகர்களது வீடு களுக்கு இரவோடு இரவாகச் சென்று புலிகள் எச்சரித்துள்ளனர்.

"இத் தேர்தலில் போட்டியிடுவோர் அனைவரும் துரோகிகளாகவே கருதப்படு வர்" என்று கூறப்பட்டதாம்.

சம்பந்தப்பட்டவர்களுக்கு தகவல் அனுப்பி குறிப்பிட்ட பகுதிக்கு நேரில் அழைத் தும் எச்சரித்து அனுப்பினராம்.

இதனால் இயக்கங்களின் பட்டியலில் போட்டியிட முன்வந்த சில பிரமுகர்களும் கடைசி நேரத்தில் தலைமறைவாகிவிட்டன ராம்.

1989ல் யாழ் மாவட்டத்தில் பாராளு மன்ற தேர்தலில் ஈரோஸ் சுயேட்சைக் குழு போட்டியிட்டது. புலிகளின் ஆதர வாளர்களும் அக் குழுவில் போட்டியிட்ட னர். புலிகளின் அனுமதி கிடைத்த பின்னரே போட்டியிட்டனர்.

தற்போது உள்ளூராட்சித் தேர்தலிலும் அவ்வாறு சுயேட்சையாகப் போட்டியிட புலிகள் சம்மதிக்கலாம் என்று கருதப் பட்டது. அதனால்தான் தொடர்பு கொண்டு பார்த்தனராம். பதில் சாதகமாக இல்லாமை யால்தான் போட்டியிடாமல் இருந்து விட்டனர்.

# யாழில் உலக சாதனைத் தேர்தல்

## போலி முகவரிகள்! போலியான பெயர்கள்!

* வேட்பாளர்கள் பலர் யாழ் குடாநாட்டில் இல்லை. எங்கிருக்கிறார்கள் எனவும் தெரியாது. அப்படியான நபர்கள் உள்ளார்களா என்பதும் தெரியாது. எனினும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.
* யாழ் குடாநாட்டிலேயே இல்லாத முகவரிகளும் வேட்பு மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.
* தலைமை வேட்பாளர்களைத் தவிர, ஏனைய வேட்பாளர் பலரை பொதுமக்களுக்கு தெரியாது.
* உலகில் இதுவரை நடைபெற்ற தேர்தல்களில், முகம் தெரியாத, முகவரி தெரியாத வேட்பாளர்கள் பெரும் எண்ணிக்கையில் போட்டியிடும் முதலாவது தேர்தல் இதுதான். இது ஒரு உலக சாதனையாகும்.

**யா**ழ் மாவட்டத்திலும், பச்சிலைப் பள்ளியிலும் நடைபெறும் உள்ளூராட்சி சபைகளுக்கு வேட்பு மனுத்தாக்கல் முடிந்து விட்டது. 23.12.97 அன்றுடன் வேட்பு மனுத் தாக்கல் பூர்த்தியாகிவிட்டது.

எதிர்வரும் ஜனவரி 29ம் திகதி உள்ளூ ராட்சித் தேர்தல் நடைபெற உள்ளது. 23.12.97 அன்று வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்ட போது பல்வேறு குளறுபடிகள் நடந்துள்ளன.

கூட்டணியினரின் வேட்பு மனுவில் காணப்பட்ட குளறுபடி அம்பலமாகியதால் அவர்களால் போட்டியிட முடியவில்லை. அதே சமயம் தற்போது போட்டியிடும் கட்சி களது வேட்பு மனுக்களிலும் பல்வேறு குளறு படிகள் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அந்த குளறுபடிகளை சுட்டிக் காட்ட எவரும் முன்வராமையால் அவர்களது வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டுவிட்டன.

வேட்பு மனுத்தாக்கல் செய்ய ஒருவார காலம் கொடுக்கப்பட்டிருந்தது. எனினும் கடைசி நாள் வரை வேட்பாளர் தேடும் வேட்டையில் சில கட்சிகள் ஈடுபட்டிருந்தன.

கடைசி நேரத்தில் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தால் குளறு படிகளை சுட்டிக் காட்ட அவகாசம் இருக்காது என்று கருதியும் சில கட்சிகள் தாமதித்ததாக கூறப்படுகிறது.

### படிவத்தை நிரப்புதல்

தற்போதைய தேர்தல் முறைப்படி கட்சி சார்பாகவோ, அல்லது சுயேட்சைக் குழு சார்பாகவோ போட்டியிடுவோரின் விபரங் கள் அடங்கிய வேட்பு மனுக்கள்தான் சமர்ப்பிக் கப்படும். அக் கட்சியின் தலைமை வேட்பாளரோ, அல்லது சுயேட்சைக் குழு தலைவரோ தனியாகச் சென்றுகூட வேட்பு மனுக்களை சமர்ப்பிக்கலாம்.

முன்னைய முறைப்படி என்றால், யார் போட்டியிடுகிறாரோ, அவர் நேரில் சென்று தனக்கான வேட்பு மனுவை சமர்ப்பிக்க வேண்டும்.

தற்போதைய தேர்தல் முறைதான் சில தமிழ்க் கட்சிகளுக்கு பெரிதும் உதவியுள்ளது. வேட்பு மனுப்பத்திரத்தில் தங்களுக்கு பிடித்த மான பெயர்களையும், தெரிந்த முகவரிகளை யும் போட்டு நிரப்பிவிட்டனராம்.

உதாரணமாக ரெலோ சமர்ப்பித்த வேட்பு மனுவில் பச்சிலைப் பள்ளி முதலாம் வட்டாரம், இரண்டாம் வட்டாரம் என்றெல்லாம் முகவரிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. பச்சிலைப் பள்ளியில் அப்படியான வட்டாரங்களோ, முகவரியோ கிடையாதாம். இதுபோன்றே,பலருடைய பெயர் களும் கற்பனையே என்று கருதப்படுகிறது.

### வழக்கு தொடுக்கலாம்

இதில் உள்ள பிரச்சனை என்னவெ னில், வேட்பு மனுத்தாக்கல் செய்யும்போது குளறுபடிகள் கண்டுபிடிக்கப்படாவிட்டால், இனிமேல் தேர்தல் முடிந்தபின்னர் வழக்குத் தாக்கல் செய்யலாம்.

போட்டியிடும் சபைகள் அனைத்திலும் வெற்றி பெறப் போவதில்லை. ஆனால் சகல சபைகளிலும் போட்டியிட்டோம் என்று பெயர் வரட்டும் என்ற நிலையில்தான் சில கட்சிகள் வேட்புமனுக்களை நிரப்பிக் கொடுத்துள்ளனவாம்.

போலியான பெயருடையவர்கள் தப்பித் தவறி வெற்றி பெற்றால்கூட, அவர்கள் ராஜினாமா செய்து விட்டனர் என்று கட்சிச் செயலாளர் அறிவிக்கலாம். அறிவித்துவிட்டு வேறு ஆட்களை போட்டு நிரப்பலாம்.

ஆதாரபூர்வமாக கண்டுபிடித்து வழக்குத் தொடுத்தால் மட்டுமே, குறிப்பிட்ட கட்சிகள் பெறும் ஆசனங்கள் செல்லுபடியற்றதாகும்.

இந்த ஜனநாயகக் கேலிக்கூத்தை அம்பலப் படுத்த வழக்குத் தொடுப்பது பற்றி கொழும்பில் சிலர் யோசித்து வருகிறார்களாம். அவ்வாறு வழக்குத் தொடுக்கப்பட்டால் பல தில்லுமுல்லு கள் அம்பலமாகும் என்று கூறப்படுகிறது.

# யாழில் கூட்டணியின் 'பேபி பிரிகேட்'

## மோசடி அம்பலம்! மனு நிராகரிப்பு!

**இ**யக்கங்கள் ஆயுதம் ஏந்தி இளை ஞர்களின் வாழ்க்கையை சீரழித்துவிட்டன. சிறு பிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராது என்று கூட்டணியினர் கூறிவந்தது தெரிந்ததே. ஆனால் யாழ் தேர்தலில் சிறு வயதினரை தேர்தலில் நிறுத்த முற்பட்டு கையும் களவுமாக பிடிபட்டனர் கூட்டணி யினர்.

யாழ் மாவட்ட உள்ளூராட்சி தேர்தலில் யாழ் மாநகர சபை மற்றும் வலிகாமம் வடக்கு பிரதேச சபை ஆகியவற்றில் மட்டுமே கூட்டணியினர் வேட்பு மனுத் தாக்கல் செய் தனர்.

ஏனைய சபைகளில் போட்டியிட ஆட்கள் இன்மையால்தான் இரு சபைகளில் மட்டும் போட்டியிட முன்வந்தனர்.

இரு சபைகளில் போட்டியிடக்கூட ஆட்கள் இல்லாத நிலையில் 16, 17 வயது கொண்ட பையன்களை பிடித்து வேட்பாளர் களாக நியமித்தனர்.

கூட்டணியினர் வேட்பு மனுத்தாக்கல் செய்த போது, அவர்களது பட்டியலில் சிறுபையன்கள் போட்டியிடுவதை ஈ.பி.டி.பி. யினர் கண்டறிந்து ஆட்சேபனை கிளப்பினர். அதனையடுத்து இரு சபைகளுக்கும் போட்டி யிட கூட்டணி சமர்ப்பித்த வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

தேர்தலில் ஆயுத அச்சுறுத்தல் உள்ள தாக கூட்டணியினர் முன்பு அறிக்கை விட்டி ருந்தனர். அவ்வாறு இருந்தும் சிறு பையன் களை பலிகொடுக்க எப்படித் துணிந்தனர்? என்று தெரியவில்லை.

'இயக்கங்களை 'பேபி பிரிகேட்' என்று கூட்டணியினர் முன்னர் கூறியதுண்டு. யாழ் தேர்தலில் பேபி பிரிகேட்டை நிறுத்த அதே கூட்டணியினர் முற்பட்டுவிட்டனரே' என்று இயக்க வட்டாரங்கள் கேலி செய்கின்றன.

தேர்தல் சட்டப்படி தேர்தலில் போட்டி யிட தகுதியில்லாத வயதினரை போட்டியிட வைக்க முயன்றது மோசடிக்கு ஒப்பான தாகும். பழம்பெரும் கட்சி ஒன்று இப்படி யான மோசடியில் ஈடுபட்டது இதுவே முதற்தடவையாகும். 'சுதந்திரமான தேர்தல் பற்றி இனிமேல் கூட்டணியினர் பேசினால் அது கேலிக் கூத்தாக இருக்கும்' என்றும் கூறப்படுகிறது.

## புளொட்டுக்கு பதிலடி

**வ**வுனியாவில் புலிகள் இயக்க கப்டன் ஒருவர் புளொட் இயக்கத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அந்த சம்பவத்திற்கு பதிலடியாக புளொட் இயக்க உறுப்பினர் ஒருவர் வவுனியாவில் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். 20.12.97 அன்று மாலை 6.30 மணியளவில் புளொட் இயக்க உறுப்பினர் புலிகளின் பிஸ்டல் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

## "மன்னகுளத்தில் பலியான படையினர் அமெரிக்காவால் பயிற்றப்பட்டவர்கள்"

**வ**ன்னியில் மன்னகுளம் பகுதியில் டிசம்பர் 4ம் திகதி புலிகள் நடத்திய தாக்கு தலின்போது 15ற்கு மேற்பட்ட விசேஷ கொமாண்டோக்கள் பலியாகினர் என்ற செய்தி யாவரும் அறிந்ததே. இவர்கள் அனைவரும் அமெரிக்க 'கிறீன் பேரட்' போர்ப் பயிற்சியாளர் களால் பயிற்றப்பட்டவர்கள் என்ற செய்தி, இப்பொழுது வெளியாகியுள்ளது. 21ம் திகதி வெளியான 'சண்டே ரைம்ஸ்'பத்திரிகை முன் பக்கத்தில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப் பொன்றில் இத்தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டையில் ஒக்டோபர் மாதம் போயா தினத்தன்று கலதாரி ஹொட்ட லின் பின்புறம் புலிகளால் குண்டு வெடிக்க வைக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்த ஹொட் டலில் தங்கியிருந்த அமெரிக்க 'கிறீன் பேரட்' பயிற்சியாளர்கள் அமெரிக்கா திரும்பி விட்டதாகச் செய்திகள் வெளியாகின. அதன் பின்னரும் இதே பிரிவைச் சேர்ந்த பயிற்சி யாளர்கள் இங்கு வந்து-பகிரங்கமாக அறிவிக் கப்படாத- ஓர் இடத்தில் சிறிலங்கா படை யினருக்குப் பயிற்சி அளித்துவிட்டு நாடு திரும்பியிருப்பதாகவும் தெரிய வருகிறது.

அமெரிக்க இராணுவப் பயிற்சியாளர்கள் கடந்த 1996ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் அடிக்கடி இங்கு வந்து, கடலிலும் தரையிலும் போரிடுவதற்குரிய நவீன யுத்திகளைப் பயிற்று வித்து வருகின்றனர். ஒக்டோபர் மாதம் 8ம் திகதி எல்.ரி.ரி.ஈ.இயக்கத்தை அமெரிக்க அர சாங்கம் 'ஒரு பயங்கரவாத இயக்கம்' என்று பிரகடனப்படுத்தியதும் குறிப்பிடத்தக்கது.

# மலையக தாக்குதல்

## மறைமுக உரிமை கோரல்

**ம**லையகப் பகுதிகளில் மின்மாற்றிகள் குண்டுவைத்து தகர்க்கப்பட்டு வருகின்றன. இச் சம்பவங்கள் மேலும் தொடர்வதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

இக் குண்டுவெடிப்புக்கள் தொடர்பாக புலிகள் உத்தியோகபூர்வமாக கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.

புலிகளின் செய்தி அறிக்கையில் பின் வருமாறு தெரிவிக்கப்பட்டது: "மலையகத்தில் சிறிலங்கா பாதுகாப்பு படையின் கண் காணிப்பு அதிகப்படுத்தப்பட்டுள்ளது. சிறி லங்காவுக்கு அன்னியச் செலாவணியை ஈட்டிக் கொடுக்கும் தேயிலை உற்பத்தியை புலிகள் குறிவைத்துள்ளதாக அச்சம் ஏற்பட் டுள்ளதை அடுத்தே பாதுகாப்பு பலப்படுத் தப்பட்டுள்ளது.

அண்மையில் மலையகத்தில் நடத்தப் பட்ட மின்மாற்றிகள் மீதான தாக்குதல்கள், எரிபொருள் தாங்கிகள் மீதான தாக்குதல்கள் இந்த அச்சத்தை தோற்றுவித்துள்ளன" மேற் கண்டவாறு புலிகளின் செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'ஜயசிக்குறுய்' படையினர் வெள்ளத்தில்

## காலநிலை மாற்றத்தால் நெருக்கடி

**ஜ**யசிக்குறுய் நடவடிக்கையில் ஈடுபட் டுள்ள துருப்புக்கள் தற்போது தனது தாக்கு தலைத் தொடரும் பருவமழையின் உக்கிரத் தால் மிகவும் துன்பத்துக்குள்ளாகின்றனர். அவர்கள் பயன்படுத்தும் வாகனங்கள் சேற் றில் அகப்பட்டு நகர முடியாமல் கிடக் கின்றன.

ஒவ்வொரு 40 மீட்டர் இடைவெளியிலும் பதுங்கு குழிகளை ஏற்படுத்தித் தங்கியிருக்கும் அவர்கள், குழிகளுக்குள் புகும் வெள்ளத்தில் தவிக்கின்றனர்.அவர்கள் நரக வாழ்க்கையையே அனுபவிக்கின்றனர். கூரையாகப் போடப் பட்டுள்ள 'ரென்ற்'களும் மழையிலும் காற்றிலும் தாக்குப்பிடிக்காமல் வீழ்ந்துவிடுகின்றன.

இவை போதாதென்று புலிகளின் தாக்கு தலும் அவர்கள் சற்று நேரம் கண்ணுறங்கவும் விடாமல் தடுக்கின்றன. இவ்வாறு 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

வேளாவேளைக்கு உணவு வந்து சேர் வதில்லை. உணவினையும் அத்தியாவசியப் பொருட்களையும் ஓமந்தை போன்ற இடங் களிலிருந்து கொண்டு செல்லும் வண்டிகளும் சேற்றில் புதையுண்டு கிடக்கின்றன. கைவச முள்ள- தகரடப்பாக்களில் அடைக்கப்பட்ட உணவையும் சூடுகாட்டியபின் உண்ணத்தக்க தாக இல்லை. ஈரம் காரணமாக நெருப்பு மூட்டுவதற்கும் முடியாதிருக்கிறது. குளிர்ந்த உணவை உண்பதுவும் பெரும் சங்கடமாக இருக்கிறது.

காலநிலை தற்போது சீரடையப்போவ தில்லை என்றும் பெப்ரவரி முடியும்வரை மழை தொடரும் என்றும் வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்திருப்பதால், இந்த அப்பாவி மனிதர்களின் நிலை பரிதாபமாகவே இருக் கும் என்று நம்பப்படுகிறது. எனவும் அப்பத் திரிகை தெரிவித்துள்ளது.

# பெண்சிப்பாய்மீது பாலியல் வல்லுறவு

## தற்கொலை முயற்சியில் தப்பினார்

**ம**ட்டக்களப்பில் பணியாற்றிய இராணு வப் படையைச் சேர்ந்த பெரும்பான்மை இன யுவதி ஒருவர் திருகோணமலையிலுள்ள தனது வீட்டுக்கு விடுமுறையில் சென்று மீண்டும் மட்டக்களப்புக்குத் திரும்பிக் கொண் டிருந்தபோது, இடைவழியில் இருட்டி விட்டது. பொலன்னறுவையில் இவர் தத்த ளித்துப் போய்விட்டார். (பொலன்னறுவை பெரும் பான்மை இன மக்கள் கூடுதலாக வாழும் பிரதேசம்) செய்வதறியாது நின்றிருந்த வேளையில் மட்டக் களப்பில் பணியாற்றும் இராணுவச் சிப்பாய் ஒருவர் கண்டு, தங்கு வதற்கு இட ஒழுங்கு செய்து தருவதாகவும் மறுநாள் மட்டக்களப்புக்குப் புறப்படலாம் என்றும் கூறியுள்ளார்.

அவரது பேச்சைக் கேட்டுச் சென்ற அந்த யுவதியை அன்றிரவே அவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியிருக்கிறார். பயத் தின் காரணமாக அந்த இராணுவ யுவதி எதையும் வெளியிடவில்லை.

இராணுவ யுவதி கர்ப்பவதியானாள். சில மாதங்களின் பின்னர் இது எதையுமே அறிந்திராத அவளது பெற்றோர் அவளுக்குத் திருமண ஏற்பாடு செய்திருந்த வேளையில் தனக்கு நடந்த எதையுமே வெளியிடாமல் இருந்த அந்த யுவதி தனது துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்ய முயற்சித்துள்ளார்.

எனினும் அவர் உயிராபத்திலிருந்து காப்பாற்றப்பட்டார். மட்டக்களப்பிலிருந்து ஆபத்தான நிலையில் பொலன்னறுவைக்கு விரையப்பட்ட அவர் அவசர சிகிச்சைக்காகக் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டார் என்று தெரிய வருகிறது.

இத்தனைக்கும் மத்தியில் அந்த இராணுவ யுவதியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய சிப்பாய் மிக வயதான ஒருவர் என்று கூறப்படுகிறது.

# முஸ்லிம்களுக்குத் தொழிலிழப்பு!

## ஐ.சி.ஆர்.சி. ஊடாக புலிகளுக்கு வேண்டுகோள்!

(மட்டக்களப்பு நிருபர்)

**1990 ஆம்** ஆண்டு கிழக்கில் இடம் பெற்ற சமூகப் படுகொலைகளின்போது சிறிது காலம் தமிழ்-முஸ்லிம் சமூக உறவு விரிசலடைந்திருந்தது. பின்னர் புலிகள் இயக்கத்தினர் மேற்கொண்ட புரிந்துணர்வு நடவடிக்கையின் விளைவாக கிழக்கில் தமது ஆளுகையின் கீழ் உள்ள பகுதிகளில் முஸ்லிம் கள் எங்கும் சென்று தொழிற்துறைகளில் ஈடுபட புலிகள் இயக்கத்தினர் அனுமதித்திருந் தனர்.

எனினும் சமீபகாலமாக முஸ்லிம்கள் தாம் குறிப்பிட்ட பகுதிகளுக்கு அப்பால் சென்று தமது தொழில்களை மேற்கொள்ள வேண்டாம் என புலிகள் இயக்கத்திலுள்ள ஒரு சில உறுப்பினர் கட்டுப்பாடு விதித்தத னால் அப்பகுதியில் தொழில்களை மேற் கொண்டு வந்த நூற்றுக் கணக்கானோரும் அவர்களில் தங்கியிருந்த ஏராளமான குடும் பங்களும் நிர்க்கதிக்குள்ளாகி உள்ளனர்.

"கடந்த காலத்தில் இடம்பெற்ற கசப் பான நிகழ்வுகளால் தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் பிளவுகள் ஏற்பட்டன. ஆனால் தற்சமயம் இத்தகைய பிளவுகளால் ஏற்படும் இழப்புக்களையும் அது விடுதலை யின் முக்கியத்துவத்தையும் பாதிக்கும் என் பதையும் சகல தரப்பாரும் உணர்ந்துள்ளனர். எனவே மனிதாபிமான அடிப்படையில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளைச் சீர்தூக்கிப் பார்க்குமாறு புலிகள் இயக்கத்தைக் கோருகிறோம். இது விடயமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருடனும் கலந்து பேசியுள்ளோம். இவ்விடயத்தை புலிகள் இயக்கத்தின் கவனத்திற்கு முன்னெடுத்துச் செல்ல அவர்கள் முன்வந்துள்ளனர்." என்று சமூக நலப்பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

"இதனிடையே படையினருடன் கூட்டுச் சேர்ந்த ஆயுதங்களுடன் செயற்படும் ஜன நாயக வழிக்கு வந்ததாகக் கூறிக்கொள்ளும் இயக்கங்கள் தமிழ் முஸ்லிம் பகுதிகளில் அட்டகாசங்களை மேற்கொண்டு, தமிழ் முஸ்லிம் விரிசலுக்குத் தூபமிடுகின்றன. இவர்களுக்கெதிராக பல முறைப்பாடுகள் உள்ளன. இவர்களை மிக விழிப்பாக அடையாளம் கண்டு ஒதுக்கவேண்டும்." என்று ஏறாவூர் நகரப் பிரதேச சபையின் உப தவிசாளரும் சமூக நலவாதியுமான எஸ்.எச்.அபூஹனீபா முரசுக்குத் தெரிவித்தார்.

## தலைநகர பாதுகாப்புப் படை

**கொ**ழும்பு மாநகரப் பாதுகாப்புக் காகத் தனியானதொரு படை அணியினைத் திரட்டுவதற்கு ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க திட்டமிட்டுள் ளார். இதற்காக 1500 பேர்வரை சேர்த்துக் கொள்ளப்படவிருக்கிறது.

பாராளுமன்ற உறுப்பினர் ஒவ்வொரு வரும் நம்பிக்கைக்குப் பாத்திரமான 25 பேர் வரை இச்சிறப்புப் படைப்பிரிவுக்கு தரவேண் டும் என்று அவர்களை கடந்த சில நாட் களுக்கு முன்னர் சந்தித்த ஜனாதிபதி, கேட்டுக் கொண்டதாகத் தெரிகிறது.

கொழும்பு மாநகரப் பாதுகாப்புக்காக மட்டுமே திரட்டப்படும் இவ்வணியினர், நிச்சயமாக போர்முனைக்கு அனுப்பிவைக்கப் பட மாட்டார்கள் என்றும் ஜனாதிபதி உத்தர வாதம் அளித்துள்ளாராம்.

## படைவீரர் கோயிலுக்குள் உறக்கம்!

**உ**ள்ளூரில் விற்கப்படும் வடிசாராயத் தைக் குடித்துவிட்டு மது மயக்கம் தலைக் கேறிய நிலையில் கோயிலுக்குள் சென்றவர் அங்கேயே, புலிகளையும் மறந்து ஆழ்ந்த துயில் கொண்டுவிட்டார்.

இவரைக் காணாது சக வீரர்கள் தேடுத லில் ஈடுபட்டபோது இறுதியில் கோயி லொன்றுக்குள் அவர் நித்திரையிலிருப்பதைக் கண்டு பிடித்தனர்.

இச் சம்பவத்தைக் கேள்வியுற்ற படையதி காரி அவ்வூரில் வடிசாராயம் விற்போருக்கு எச்சரிக்கை விடுத்ததுடன், இனிமேல் அனு மதி பெறாது உள்ளூரில் மது விற்பனை செய்வோர் கண்டுபிடிக்கப்பட்டால் கடுமை யாகத் தண்டிக்கப்படுவர் என்றும் பொது மக்களிடம் கூறியுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

## உத்தியோகம் இல்லாத சம்பளம்
## வ.கி.மாகாணசபையில் ஊழல்

(திருமலை நிருபர்)

வடக்கு-கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு தலைவரும் உறுப்பினர்களும் கொழும்பில் இருந்தபடியே சம்பளம் எடுத்து வருவதாக முரசுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

ஆணைக்குழுவின் தலைவர் திரு.எஸ்.குணரத்தினம் இவர் பம்பலப்பிட்டியில் குடியிருக்கிறார். ஜனாப். எஸ்.எம்.எஃப்.ஏ.கபூர் என்பவர் உறுப்பினர். இவரது வீடு தெகிவளையில் இருக்கிறது. மற்றொரு உறுப்பினர் திரு.எம்.ஏ.கருணபால அநுராதபுரத்தில் வாழ்கின்றார்.

இம் மூவரும்தான் வடக்கு-கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவை வழிநடத்தி வருகிறார்கள். இவர்கள் வடக்கு-கிழக்கு மாகாண எல்லைக்குள் நுழைவதே மாதத்தில் ஒரு நாள்தானாம்.

சம்பளத்துக்கு முதல் நாள் திருக்கோணமலையிலிருந்து பிக்-அப் வாகனமொன்று புறப்பட்டுச் சென்று பம்பலப்பிட்டி, தெகிவளை இல்லங்களுக்குச் சென்று இரண்டு உறுப்பினர்களை ஏற்றிக் கொண்டு வரும் வழியில் ஹபரணையில் வைத்து அநுராதபுரத்திலிருந்து வந்து காத்திருக்கும் உறுப்பினரையும் ஏற்றிக் கொண்டே திருக்கோணமலைக்கு வரும்.

அடுத்த நாள் காலையில் மூவரும் சம்பளங்களைப் பெற்றுக் கொண்டதும், அதே பிக்-அப் வாகனம் மூவரையும் ஏற்றிக் கொண்டு ஹபரணை, பம்பலப்பிட்டி, தெகிவளை என்று பத்திரமாக வீடு சேர்த்து விட்டுத் திரும்பி வரும்.

இந்த நடைமுறை சுமார் மூன்றாண்டுகளாக இடம்பெற்று வருகிறது. இவர்களது மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுக் கடமைகள் எல்லாம் இந்தச் சொற்ப வேளைக்குள் செய்யப்படுபவையே.

உள்ளகக் கணக்காய்வாளர் திணைக்களம் இவ்வாறு வாகனம் சென்று வருவது வீண் விரயம் என்று சுட்டிக்காட்டிய போதிலும், சமாதானம் கூறி அதே நடைமுறை தொடர்ந்து கையாளப்பட்டு வருகிறது.

வடக்கு-கிழக்கு மாகாண சபை நிருவாகத்தின் ஆயிரம் புதுமைகளுள் இதுவும் ஒன்று என்று ஆறுதல் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

## கல்வித் திணைக்கள குழறுபடி
## மாணவர் கதி என்னாகும்?

திருகோணமலை கல்வித் திணைக்களத்தில் குழறுபடி காரணமாக இவ்வருட இறுதிப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் பெரும் கஷ்டத்திற்குள்ளானார்கள். வழமையாக பரீட்சைகள் பாடசாலை மட்டத்திலே நடாத்தப்பட்டுவருபவை. ஆனால் மிக அண்மையில் திணைக்களம் இப் பரீட்சையை நடாத்த முன் வந்ததில் இருந்து "பேப்பர் அவுட்" எழுத்துப்பிழை, தரமற்ற கேள்விகள், கேள்விகளில் தெளிவின்மை, இப்படியான துர்அதிர்ஷ்டநிலைக்கு அப்பாவி திருகோணமலை மாணவர்கள் முகம் கொடுத்துவந்துள்ளார்கள்.

இவ் வருட இறுதிப் பரீட்சை மிக முறைகேடான நிலையில் நடந்துள்ளது. சில பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட கேள்வித்தாள்கள் மாணவர்களுக்கு காணாமல்போய் விட்டது. அச்சுப் பிழையினால் மாணவர்கள் திண்டாடினர். ஒரே நேரத்தில் நடக்க வேண்டிய பாடங்கள் நடக்காது வெவ்வேறு தினங்களில் நடாத்தப்பட்டன. இதனால் கேள்வித்தாள்கள் ஏற்கனவே வெளியாக வேண்டிய நிலை ஏற்பட்டது.

நேர அட்டவணையை அதிகாரிகள் தங்களுக்கு ஏற்றவாறு மாற்றிக் கொண்டனர். மாணவர்களின் கஷ்டநிலைமை அவுர்கள் உணராது செயல்பட்டதினால் சரிவர பாடங்களை மாணவர்களால் ஆயத்தப்படுத்த முடியவில்லை. குறிப்பிட்ட பாடத்திற்கு ஆயத்தமாகி வந்த மாணவர்கள் ஏமாற்றத்துடன் ஆயத்தப்படுத்தாத பாடத்திற்கு பதில் எழுதி தங்கள் மன உழைச்சலை அதிகரிக்க செய்த வேளைகளையும் இங்கு கூறித்தான் ஆகவேண்டும்.

எந்தவித முன்னேற்பாடுமில்லாது, திட்டமில்லாத, பரீட்சை நடவடிக்கைகளினால் அப்பாவி மாணவர்களின் எதிர்காலம் பாழடிக்கப்படுகின்றது என்பதை மூன்றாண்டுத் திட்டம் என மூச்சுவிடாது மூலைக்கு மூலை கத்தித் திரியும் அதிகாரிகள் சற்று கண் திறந்து பார்க்க வேண்டும்.

எதனுடனும் விளையாட்டு காட்டலாம் ஆனால் கல்வியுடன் விளையாடக்கூடாது என்பதை கல்வித்துறையிலுள்ள சகலரும் தெரிந்து கொள்ள வேண்டும். பாடசாலை மட்டத்தில் மிக அழகாக, தரமாக, முறையாக நடந்து வந்த பரீட்சைகளை குழப்பி மாணவர்களுக்கு உளரீதியாக பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய அதிகாரிகள் தண்டிக்கப்படவேண்டியவர்கள். உற்றார், உறவினர், நண்பர்கள் என்ற எந்தவித சலுகைகளும் காட்டாது இம் முறையில் பரீட்சையில் ஏற்பட்ட குழறுபடிகள் தொடர்பாக விரிவான விசாரணை நடாத்தப்பட வேண்டும்.

"வடக்கில் கிழக்கில் மாபெரும் மாற்றத்தை கொண்டுவரப்போகின்றோம் பாரிய கல்வி அபிவிருத்தி மூன்றாண்டுத் திட்டம் இந்த நாட்டிலே பெரும் புரட்சியை ஏற்படுத்தப்போகின்றது" என்று கூறியவர்களும் சற்று மேற்படி விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

எஸ்.சீலன்

## களுத்துறை சிறைச்சாலையில் சுகாதாரச் சீர்கேடு!
## கொலரா பரவும் அபாயம்

களுத்துறை சிறைச்சாலையில், மகஸின் சிறைச்சாலையில் இருந்து மாற்றப்பட்ட தமிழ்க் கைதிகள் தங்கவைக்கப்பட்டுள்ள பகுதி, மிகவும் சுகாதார சீர்கேடு உள்ள பகுதியாகும். இங்கே உள்ள மலசல கூடத்தில் மலசலம் நிரம்பி வழிகின்றது.

வழிந்தோடும் மலசல நீர், சிறைகூடத்தின் மழைகாலத்தில் நீர் வழிந்தோடும் பகுதியூடாகவே செல்கின்றது. எங்கும் ஒரே துர்நாற்றம் வீசுகின்றது.

வெளியே கைதிகள் சுதந்திரமாக நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கைதிகளுக்கு உணவு வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள மண்டபத்தின் அருகில் உள்ள வாய்க்காலினால் மலசலம் வழிந்தோடுகின்றது.

அந்த வாய்க்காலில் ஏற்பட்ட வெடிப்பின் ஊடாக மலசலம் கசிந்து சாதாரண நிலத்திலும் தேங்கி உள்ளது. இதனால் தற்போது நாட்டில் பரவும் 'கொலரா' நோய் இச்சிறைச்சாலையில் மிகவும் விரைவாக பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் குளிப்பதற்கு போதிய நீர் வசதிகள் இல்லாமையால், கைதிகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். அத்துடன் சொறி, சிரங்கு, தொண்டை நோவு போன்ற நோய்களும் பரவி வருகின்றன. சிறைச்சாலையில் ஏற்பட்டுள்ள நீர் வசதியின்மையும் சுகாதாரச் சீர்கேடுகளும் கைதிகளை மிகவும் பாதிக்கிறது.

வெளியிலே கொலராவின் அபாயம் பற்றியும், அதனை தடுக்கும் வழிகள் பற்றியும் சுகாதார அமைச்சும் அரச வானொலி, தொலைக்காட்சிகளும் மற்றும் பத்திரிகைகளும் பிரசாரம் செய்து கொண்டிருக்கின்றன. அதே வேளை தமிழ் இளைஞர்கள் அரசியல் கைதிகளாக அடைக்கப்பட்டுள்ள சிறைச்சாலையில் மிகவும் கொடூரமான நோய்கள் பரவும் நிலமைகள் ஏற்பட்டுள்ளன. இவற்றை நிவர்த்தி செய்யவும், தகுந்த வசதிகளை கைதிகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவும் சுகாதார அமைச்சு தகுந்த நடவடிக்கை எடுக்காதிருக்கிறது. சிறை நிர்வாகமும் கவனிக்காமல் இருக்கிறது.

இனவாதக் காடையர்கள் மூன்று தமிழ் பேசும் கைதிகளை படுகொலை செய்தனர். கொலராவும் உயிர்ப்பலி எடுக்கப் போகிறதா?

எஸ்.எஸ்.

## ரெலோ விளக்கம்

யாழ் குடாநாட்டு உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்களில், கலந்து கொள்வதை தவிர்க்கமுடியாத ஒரு அரசியல் போராட்டம் என்பதனை அதன் சகல பரிமாணங்களிலும் தெளிவாக புரிந்துகொண்ட தமிழ் ஈழ விடுதலை இயக்கம் கருதுகின்றது.

தமிழ் பேசும் மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாத, தமிழ் பேசும் மக்களின் தேசிய அபிலாசைகளை நிறைவேற்றும் மாநில சுயாட்சி ஒன்றினை வழங்க முன்வராத, தமிழ் பேசும் மக்களின் மரபுவழித் தாயகமான இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்தை கூறுபோட முயற்சிக்கும், அரசின் தீர்வுத் திட்டத்தை நிராகரிப்பதற்கும், தமிழ் பேசும் மக்கள்மீது நாடுதழுவிய ரீதியில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அடக்குமுறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவும், அதை முழு உலகுக்கும் அறிவிக்கும் ஓர் அபிப்பிராய வாக்கெடுப்பாக இந்த யாழ் குடாநாட்டு உள்ளூராட்சி மன்ற தேர்தலை கணிக்குமாறு தமிழ் பேசும் மக்களை தமிழ் ஈழ விடுதலை இயக்கம் கோருகின்றது. இவ்வாறு அக்கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 400 மின் துண்டிப்பு!

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 10 மாதங்களுக்குள் 400 இடங்களில் மட்டக்களப்பு மின்சார சபை மின் துண்டிப்பு செய்துள்ளதென மாவட்ட மின்பொறியியலாளர் கே.பரம்சோதி எமது நிருபரிடம் தெரிவித்தார். கடைகள், வீடுகள், தொழிற்சாலைகள், அரிசி ஆலைகள் போன்றவற்றிலேயே மேற்படி துண்டிப்புச் செய்யப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மின்சார சபைக்கு 500 இலட்சம் ரூபா நிலுவையாகவுள்ளது. 5000 ரூபாய்க்கு மேல் நிலுவையாகவுள்ள மின்பாவனையாளர்களிடமே இவ்வாறு துண்டிப்புச் செய்யப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆசிரியர்கள் தொடர்பு கொள்க

(திருமலை நிருபர்)

ஓய்வூதிய இலக்கம், பதிவிலக்கம் உறுதிப்படுத்தற் கடிதம் என்பவற்றில் எவற்றையேனும் பெற்றுக் கொள்ளாத ஆசிரியர்கள் தங்களது பெயர், கல்வி கற்பிக்கும் பாடசாலை, நியமனத் திகதி ஆகிய விபரங்களுடன் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு வடக்கு-கிழக்கு பொது ஆசிரியர் சங்கத்தின் திருக்கோணமலைக் கிளை கோரிக்கை விடுத்துள்ளது.

இது சம்பந்தமாக மேற்படி சங்கத்தைச் சார்ந்த திரு.கே.செல்வநாயகம், திரு.ஜி.எச்.நிமல்காமினி, திரு.சி.நந்தகுமார், திரு.எஸ்.லோகேஸ்வரன் ஆகியோர் பிரதேச பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. கே.தங்கராசாவுடன் மேற்கண்ட பேச்சுவார்த்தையில் தகவல்களைப் பெற்றுத் தந்தால் கூடிய விரைவில் இப்பிரச்சனைகள் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதுமொழி பெறப்பட்டதையடுத்தே இக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

செயலாளர் 198/2, பிரதான வீதி, திருகோணமலை என்ற விலாசத்துக்கு விபரங்களை அனுப்பி உதவுமாறு வடக்கு -கிழக்கு மாகாண ஆசிரியர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.


சகலவிதமான வாத்தியக் கருவிகளையும்
உதிரிப்பாகங்களையும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்
அவற்றை உத்தரவாதத்துடன் திருத்திக்
கொள்ளவும் நாடுங்கள்

சங்கீதப் புத்தகங்களும் விற்பனைக்கு உண்டு



SAI SANGEETHA
L. G. 123, Peoples Park,
Colombo 11. Tel : 445102

நவீன தொழில் நுட்பம்
ஆயுள் பூராவும் உழைக்கக்கூடிய உத்தரவாதம்

PHOENIX பைசிக்கள்

நூறு வீதம் அசல் சீன உதிரிப்பாகங்கள்




பைசால் ஹாட்வெயார் ஸ்டோர்ஸ்
(FAIZAL HARDWARE STORES)
74, டாம் வீதி, கொழும்பு 12. தொலை: 433727
பெக்ஸ்: 446088, E-mail - faisto@sri.lanka.net

இலங்கை மக்களின் ஏகோபித்த தெரிவு - பீனிக்ஸ் பைசிக்கள்

GRAYON

விளம்பரப் பகுதி

ரிஷி அஜமாமிச
லேகியம்
(முன்விம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 225/=,125/=
தங்க பஸ்பம் கலந்தது 1025/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 925=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398

மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPHY)

வவுனியாவிலும் சந்திக்கலாம்

இளைஞர்களே! மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை. இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

SEXUAL DISORDERS

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான்வீரியம் உள்ள ஆண்மகனாக்கி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் வசிப்போருக்கு

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத் தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடா மூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள்; மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம் பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு, விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

கவனத்திற்கு! புதிய செல்டெல் No. 072-609388

கொழும்பில் டிசம்பர் 21 முதல் 29 வரை

DR. P. ARUMUGAM
AHAMED TOURIST INN
BANG BANG BUILDING No. 10, Reclamation Road,
(Entrance: Bankshall St., Opposite Renjanas) Colombo 11. T.P. 436383, 436390
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 072-609388
கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

ஓட்டமாவடியில் ஜனவரி 2, 3 ம் திகதிகளில்

Dr. முகைதீன் டிஸ்பென்செரி, ஓட்டமாவடி. T.P. 065-57345

கல்முனையில் ஜனவரி 4, 5, 6 ம் திகதிகளில்

T.M.M. பாமசியிலும் T.P. 065 - 29329
மற்றைய நாட்களில் Dr. P. Arumugam
No. 33. Tissa Weerasingam Sq.,
Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்.

வவுனியாவில் ஜனவரி 10, 11, 12 ம் திகதிகளில்

வவுனியா VANNI INN இல் சந்திக்கலாம்
T.P. 024 - 22074 ல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.




படிப்பகம்

www.padippakam.com

# “யாழ் ஜயசிக்குறுய்” தோல்வி யாருக்கு?

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

பெப்ரவரி 4ம் திகதி இலங்கையின் 50 வது சுதந்திர தினம்.

அதற்கிடையே எப்படியாவது வன்னி யுத்தத்தில் வெற்றிக்கொடி நாட்டி விடவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் ஆசை.

'ஜயசிக்குறுய்' மூன்றாம் கட்டம் தற்காப்பு கட்டத்தில் இருக்கிறது. முன்னேறித் தாக்கும் கட்டத்திற்குள் புக முயன்றபோது மன்னகுளத்தில் பாரிய இழப்புக்களை படையினர் சந்தித்தனர். அதன் பின்னர் மறுபடி தற்காப்பு நிலை தொடர்கிறது.

பருவமழை ஓய்ந்த பின்னர் பாரிய படை நகர்வு ஒன்றைச் செய்யலாம் என்பதுதான் படைத்தரப்பின் திட்டமாக இருக்கக்கூடும்.

அவ்வாறு பாரிய படைநகர்வை மேற்கொள்ள வேண்டுமானால் நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து மேலும் படையினரை வன்னிக்கு நகர்த்தி ஒன்று குவிக்க வேண்டும்.

நாட்டின் ஏனைய பகுதிகள் என்று கருத்தில் கொண்டால், அநேகமாக சகல பகுதிகளிலும் தேவைக்குரிய படைகள்தான் உள்ளன.

**படைக்கு ஆட்கள் தரட்டும் முயற்சிகள் தோல்வி அடைந்திருக்கின்றன. பெண்களை படையில் சேர்த்தும்கூட வெற்றிடங்களை நிரப்ப முடியவில்லை. யாழ்ப்பாணம் அனுப்ப 500 பெண்பொலிசாரை எடுக்க விண்ணப்பம் கோரினார்கள். ஒரே ஒரு பெண்தான் விண்ணப்பித்திருந்தாராம்.**

வடக்கு-கிழக்கு போர்முனைக்கு அனுப்பப்போவதில்லை என்ற உத்தரவாதத்தோடு, கொழும்பு நகர் பாதுகாப்பு படைதிரட்ட ஜனாதிபதியே நேரடியாக கவனம் செலுத்தும் நிலை இருக்கிறது.

எனவே படையை மேலும் விரிவாக்கி புதிய அணிகளைக் களத்தில் இறக்கும் வாய்ப்பு இல்லை.

அதனால் இருக்கின்ற படைகளை வைத்துத்தான் வன்னியில் புலிகளின் தடைகளைக் கடக்கின்ற உத்திகளை படைத்தரப்பு வகுத்தாக வேண்டும்.

யாழ்-குடாநாட்டில் இருந்தும் படைகளை வன்னிக்கு நகர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருந்தது.

ஏற்கனவே ஒருபகுதி படையினர் யாழ் குடாநாட்டில் இருந்து வன்னிக்கு நகர்த்தப்பட்டனர். இன்னொரு தொகைப் படையினரை எடுத்துச் செல்லும் எண்ணமும் இருக்கிறது.

புலிகள் படையினரின் ஒவ்வொரு நகர்வையும் துல்லியமாகக் கவனித்து வருகின்றனர்.

யாழ் குடாநாட்டிலிருந்து படையினர் வன்னிக்கு நகர்த்தப்பட்டவுடன், புலிகளின் அணிகள் சில யாழ் குடாநாட்டுக்குள் ஊடுருவிவிட்டன.

யாழ் குடாநாட்டில் நகர்ப்புறங்கள் தவிர்ந்த வெளிப்பகுதிகளில் புலிகளின் நடமாட்டங்கள் கடந்த சில மாதங்களாக அதிகரித்து வருகின்றன.

**புலிகள் இயக்க மூத்த தளபதிகளான பொட்டம்மான், சொர்ணம் ஆகியோர் யாழ் குடாநாட்டின் சில பகுதிகளுக்கு சென்று நிலமையை ஆராய்ந்து கொண்டு சென்றுள்ளனர்.**

பொட்டம்மான் யாழ் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். திருமலையில் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவுடன் நின்ற சொர்ணத்தையும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி நோட்டம் பார்த்திருக்கிறார் பிரபாகரன்.

சொர்ணம் யாழ் சென்று திரும்பிய தகவல் படையினருக்கும் எட்டியிருக்கிறது.

மாவீரர் தினத்தையொட்டியதாகவே சொர்ணம் யாழ்சென்று திரும்பியிருந்தாராம்.

தங்கள் கவனமும், பலமும் வன்னியில் குவிந்திருக்கும்போது, யாழ் குடாநாட்டில் பாரிய தாக்குதல் ஒன்றை புலிகள் நடத்தக்கூடும் என்று படைத்தரப்பு கணிப்பிட்டது.

இந்த நேரத்தில்தான் சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கையும் உலக அரங்கில் வைத்து இலங்கை அரசின் முகத்தில் ஓங்கிக் குத்தியது.

யாழ் குடாநாட்டில் உள்ள மக்களை புலிகளிடம் இருந்து விடுவித்தாகிவிட்டது. அங்குள்ள மக்களுக்கு மறுவாழ்வு கொடுக்க நிதி உதவி தேவை என்று வெளியுலகில் அரசு கடன் கேட்டும் வந்தது.

**புலிகளின் அனுமதியோடு, வன்னியிலிருந்து யாழ் குடாநாட்டுக்கு திரும்பி வரும் மக்களை, புலிகளின் பிடியில் இருந்து தப்பியோடி வரும் மக்கள் என்று அரசாங்கம் பிரசாரம் செய்து வருகிறது.**

இவ்வாறான நேரத்தில் யாழ் குடாநாட்டில் உள்ள படையினர், அறுநூறுக்கு மேற்பட்டோரின் உயிர்களையும் விடுவித்துள்ளனர் என்று மன்னிப்புச் சபை அம்பலப்படுத்திவிட்டது.


ஆக, மூன்றுவிதமான நெருக்கடிகள் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

**1. வன்னியில் இடை நடுவே நிற்கும் 'ஜயசிக்குறுய்' படைகள்.**

**2. யாழ் குடாநாட்டில் புலிகளின் பாரிய தாக்குதல் அறிகுறிகள்.**

**3. சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கையால் வெளியுலகில் தோன்றியுள்ள கெட்ட பெயர்.**

மேற்கண்ட மூன்று நெருக்கடிகளையும் சமாளிக்க அரசாங்



கம் வகுத்துள்ள அரசியல், இராணுவ உத்திகள் பின்வருமாறு

**1. வன்னியில் பருவமழைக்குப் பின்னர் பாரிய படை நகர்வு.**

**2. யாழ் குடாநாட்டில் படை இலக்குகளை மட்டும் புலிகள் குறிவைக்க வாய்ப்பு இல்லாமல், இலக்குகளை பரவலாக்குவது. புலிகளின் கவனத்தை பல திசைகளில் இழுப்பது.**

**3. புலிகள்தான் மனித உரிமைகளை மீறுவதிலும், பாரிய உயிரழிவுகளை ஏற்படுத்துவதிலும் முன்னிற்கிறார்கள் என்று வெளியுலகுக்கு காட்டக்கூடிய சூழல்களை தோற்றுவிப்பது.**

மேற்கண்ட மூன்று உத்திகளும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை.

வன்னியில் பாரிய படை நகர்வுக்கு யாழில் இருந்து படை உதவி தேவைப்படலாம். அப்படி யாழில் இருந்து படை நகரும்போது, புலிகள் யாழில் நிலைகொண்டுள்ள படைகளை பலவீனம் அறிந்து தாக்குவர். எனவே புலிகள் படைகளை தாக்குவதைப் பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டிருக்காமல், வேறு திசையில் அவர்களை இழுத்துவிடவேண்டும். அதற்கு ஒரே வழி உள்ளூராட்சித் தேர்தல்.

உள்ளூராட்சித் தேர்தல் நடப்பதை புலிகள் விரும்பமாட்டார்கள். போட்டியிடும் வேட்பாளர்களை தேடி அலைவார்கள். சுட்டுக் கொல்வார்கள்.

**ஆக, ஒரு கல்லில் இரண்டு மாங்காய். புலிகளின் கவனம் யாழில் பல பக்கம் செல்லும். மறுபுறம் புலிகளால் வேட்பாளர்கள் பலர் கொல்லப்பட்டால், மனித உரிமை மீறல்களாக அதனை பிரசாரம் செய்யலாம்.**

யாழ் மாவட்டத்தில் 17 உள்ளூராட்சிச் சபைகளுக்கும் மொத்தம் 309 வேட்பாளர்கள் தேவை. சில கட்சிகள் சகல சபைகளிலும் போட்டியிடவில்லை. மூன்று கட்சிகள் சகல சபைகளிலும் போட்டியிட்டால்கூட குறைந்தது ஆயிரம் வேட்பாளர்களாவது இருப்பர்.

அதிக எண்ணிக்கை என்பதால் புலிகளின் இலக்கில் சுலபமாக சிக்குவர். ஆயிரம் பேரையும் இயக்க முகாம்களில் வைத்திருக்கவும் முடியாது.

எனவே வேட்பாளர்களைப் பெரியளவில் புலிகள் சுட்டுக் கொன்றால் அதனை உலக அரங்கில் பெரியளவில் பிரசாரம் செய்துவிடலாம் என அரசு நினைக்கக்கூடும்.

யாழ் குடாநாட்டில் படையினரால் கைதாகிய அறுநூறுக்கு மேற்பட்டோர் பலியாகிவிட்டனர் என மன்னிப்புச் சபை கூறிவிட்டது.

சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை அரசாங்கத்தின் இமேஜ் மீது கறைப்படிந்த கோடாக அமைந்துவிட்டது. உலகின் கண்களுக்கு உறுத்தும் கோடாகவும் உள்ளது.

அக்கோட்டினை இனி அழிக்க முடியாது. ஆனால் அக்கோட்டிற்கு அருகே அதைவிடப் பெரிய கோட்டினை கீறிவிட்டால் என்னாகும்? முதற்கோடு சிறிதாகிவிடும். இதுதான் கோடு விளையாட்டு. இந்த கோடு விளையாட்டைத்தான் அரசு கையில் எடுத்திருக்கிறது.

**படையினரால் அறுநூறு பேர் பலியான தகவலை சிறிதாகக் காட்ட, புலிகளால் ஆயிரம்பேர் பலியாகக் கூடிய களம் ஒன்றை யாழில் அரசு திறந்து வைத்திருக்கிறது.**

ஏற்கனவே மட்டக்களப்பு பொதுச் சந்தையில் மனித உரிமைகள் தினத்துக்கு முதல்நாள் வெடித்த குண்டும், கோட்டு விளையாட்டுத்தானோ என்றும் சந்தேகம் இருக்கிறது.

அரசாங்கம் அதனை தூண்டாயதோ, இல்லையோ அரச நலன் பேணும் சக்திகளின் பங்கு இருப்பது பற்றி தகவல்கள் கசிகின்றன. அரச நலன் பேணும் சக்திகள் என்பதில் தமிழ்க் குழுக்களும் அடக்கம். குறிப்பாக ராசிக் குழுவினர் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்றால் தமிழர்களை ஒழிக்கவும் தயங்காத குழுவாக மாறி நிற்கின்றனர்.

திருமலை ரயில் தண்டவாளத்தில் குண்டு மீட்கப்பட்டதாக செய்திகள் கூறின. குண்டு மீட்கப்பட்டதாக கூறப்பட்ட பகுதி பலத்த இராணுவ கண்காணிப்புக்குள் உள்ள பகுதியாகும்.

சில குண்டுகள் வெடிக்கின்றன. சில குண்டுகள் கண்டு பிடிக்கப்படுகின்றன. வெடிக்கின்ற குண்டுகள் புலிகளுடையவைதான் என்று காட்டுவதற்காக, சில குண்டுகள் வெடிக்காமல் கண்டுபிடிக்கப்படுவதாக ஒத்திகை நடத்த முடியாது என்பதில்லை.

**புலிகளும் குண்டு வைக்கிறார்கள். மின்மாற்றிகளை தகர்க்கிறார்கள். ஆனால் புலிகளின் குண்டுகள் ஒருபோதும் அரசுக்கு பிரசார இலாபம் கொடுப்பவையாக இருக்காது. அதனை வைத்து யாருடைய குண்டு என்று இனம் கண்டு கொள்ளலாம்.**

உதாரணமாக, மட்டக்களப்பு சந்தைக் குண்டு வெடிப்பு அரசுக்கு பிரசார இலாபமாகும் என்பது குண்டு வெடித்த பின்னர்தான் தெரியும் என்பதில்லை.

சந்தையில் குண்டுவெடித்தால் மக்கள் சாவர். உடனே அரசாங்கம், 'புலிகளுக்கு மக்கள் உயிரில் அக்கறை இல்லை' என்று பிரசாரம் செய்யும் என்பதெல்லாம் முன்கூட்டியே ஊகிக்க கடினமானவையல்ல.

கொழும்பில் முன்னர் புலிகள் தெரிவு செய்த இலக்குகளில் பொதுமக்களும் பலியாகினர். பொதுமக்களை இலக்காகக் கொண்டு கூட புலிகள் குண்டுவைத்ததும் உண்டு.

ஆனால், அவை சிங்கள மக்களும் பாதிக்கப்பட்டால்தான் அரசுக்கு நெருக்கடி ஏற்படும் என்ற நோக்கில் புலிகளால் மேற்கொள்ளப்பட்டவை. பழிக்குப் பழி என்று 'எல்லாளன் படை' என்ற பெயரில் நடத்தப்பட்ட தாக்குதல்களும் உண்டு.

புலிகளின் அக்காலத் தந்திரத்தை இப்போது புலிகளுக்கே திருப்பிவிட ஒரு சக்தி திட்டமிட்டுள்ளதின் வெளிப்பாடுதான் மர்மக் குண்டுகள்.

**1. புலிகளுக்கு உலக அரங்கில் கெட்ட பெயர் ஏற்படுத்தல்.**

**2. தமிழ் மக்களிடம் புலிகள்மீது வெறுப்பை ஏற்படுத்தல். அதன்மூலம் புலிகளுக்கு நெருக்கடி கொடுத்தல்.**

**3. தென்னிலங்கையில் குண்டுவைத்தால் தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களிலும் குண்டுகள் வெடிக்கும் என புலிகள் உணரச் செய்தல்.**

மேற்கண்ட காரணங்களும் மர்மக் குண்டுகளின் பின்னால் உள்ளவர்களுக்கு இருக்கலாம்.

கொழும்புக் குண்டுவெடிப்புக்கள் அரசுக்கு அச்சுறுத்தலாக, பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு சவாலாக இருந்தபோதும், அதிலும் ஒரு இலாபம் இருந்தது.

அந்தக் குண்டுவெடிப்புக்களில் பொது மக்களும் பெரியளவில் பலியானதால், புலிகளை பயங்கரவாதிகள் என வெளியுலகில் பிரசாரம் செய்யக்கூடியதாக இருந்தது.

பயங்கரவாதிகளை எதிர்த்துப் போரிட என்ற ரீதியில் நிதி உதவிகளையும், உலக அனுதாபத்தையும் பெற முடிந்தது.

ஆனால், சமீபகாலமாக புலிகள் கொழும்பில் தங்கள் உத்திகளை மாற்றிக் கொண்டனர்.

**பொதுமக்களுக்கு பாரிய சேதம் இல்லாத இலக்குகள், நாட்கள் என்பவற்றை தெரிவு செய்து அரசுக்கு மட்டுமே சேதாரங்களை ஏற்படுத்த முனைந்தனர்.**

இந்த நடவடிக்கைகள் உலக அரங்கில் புலிகளுக்கு அதிருப்திகளை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. குண்டுத்தாக்குதலின் நஷ்டம் மத்தியிலும் முன்னர் கிடைத்த சிறு இலாபம்கூட அரசுக்கு இல்லாமல் போய் விட்டது.

இத்தகைய சூழலில்தான் கிழக்கில் மர்மக் குண்டுகள் வெடிக்கின்றன. பீதி கிளப்புகின்றன. இதனை அரசாங்கத்தோடு தொடர்புபடுத்த ஆதாரங்கள் இல்லைத்தான். எனினும் தமிழ்க் குழு ஒன்றின்மீது பலத்த சந்தேகம் உண்டு.

ஆனால், யாழ் குடாநாட்டில் திறக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தல் களம், புலிகளால் பலர் கொல்லப்படக் கூடிய வாய்ப்பை திட்டமிட்டு, உருவாக்கிக் கொடுக்கும் களம் போலவே இருக்கிறது.

வேட்பாளர்களுக்கு தனியான பாதுகாப்பு வழங்கப்பட மாட்டாது என்று படையினர் கை விரித்துள்ளதையும் கவனித்தாக வேண்டும்.

தகுந்த பாதுகாப்பு தரப்படும் என்று முதலில் கூறப்பட்டபோதும், பின்னர் நழுவி விட்டனர். படைத்தரப்பின் ஆட்பற்றாக்குறை காரணமாக கூறப்படுகிறது.

ஒரு வேட்பாளருக்கு குறைந்தது நாலு சிப்பாய்களை பாதுகாப்புக்காகப் போட்டாலும், குறைந்தது நாலாயிரம் படையினர் தனியாகத் தேவை.

தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் மேலும் நிலைமை மோசமாகும். உள்ளூராட்சிச் சபை உறுப்பினர் ஒருவர் செல்கிறார் என்றால், அவருடன் ஒரு மினி இராணுவ முகாம் செல்ல வேண்டியிருக்கும்.

இதற்கெல்லாம் படையினர் போதாது. குறைந்தளவு பாதுகாப்பு வேட்பாளரையோ, வெற்றிபெறும் உறுப்பினர்களையோ பாதுகாக்க உதவாது.

மாநகர, நகரசபை தலைவர்கள், பிரதேச சபை தலைவர்களுக்கு முதல் குறி வைக்கப்படும். எப்பாடு பட்டாயினும் குறிவைத்தே தீருவர். எனவே பலத்த பாதுகாப்பு கொடுக்க வேண்டி இருக்கும். அதற்கு ஆள் இல்லை என படையினர் கைவிரிப்பர்.

**அது உண்மையும்தான். படையினர் தங்கள் நிலைகளை பாதுகாக்கும் அளவுக்குத்தான் யாழில் உள்ளனர். ஆனால் இப்படியான நிலையில், புலிகள் நிச்சயம் குறிவைப்பர் என்றும் தெரிந்தும் தேர்தல் அறிவிக்கப்பட்ட நோக்கம் என்ன?**

முன்னர் இங்கே குறிப்பிட்டுள்ள காரணங்கள்தான் நோக்கம் என்று தோன்றுகிறது.

ஆனால், ஒரு விடயத்தை அரசு கவனிக்கத் தவறிவிட்டது.

யாழ் குடாநாட்டில் ஐந்து தமிழ்க் கட்சிகள் போட்டியிடுகின்றன. அதில் நான்கு கட்சிகள் ஆயுதம் தாங்கிய கட்சிகள்.

ஏட்டிக்குப் போட்டியாக வரிந்து கட்டிக் கொண்டு களத்தில் இறங்கியுள்ளார்கள். ஒருத்தர்மீது ஒருத்தர் புகார் கூறுகிறார்கள்.

எவ்வித அரசியல் நோக்கமும் இன்றி, அரசிடம் நல்ல பெயர் எடுக்கவும், நாம்தான் செல்வாக்குள்ளவர்கள் என்று காட்டி மேலும் அரசிடம் சலுகை பெறவும் மட்டுமே இந்தப் போட்டியில் தமிழ்க் கட்சிகள் குதித்துள்ளன.

**அவ்வாறான இக் கட்சிகள் தங்களுக்குள் ஒருத்தரை ஒருத்தர் தீர்த்துக் கட்ட திட்டமிடலாம். ஏனைய கட்சி வேட்பாளர்களை புலிகள் என்ற போர்வையில் தீர்த்துக்கட்டவும் முயலலாம்.**

எனவே, வேட்பாளர்களோ, வெற்றி பெற்ற பின்னர் உறுப்பினர்களாக இருக்கப்போகிறவர்களோ பலியானால் புலிகள் மீது மட்டும் குற்றம் சாட்ட இயலாமல் போகும்.

எப்படியோ, பலிக்களம் ஒன்றை வலிந்து உருவாக்கியுள்ளது போன்றுதான் உள்ளூராட்சித் தேர்தல் திருவிழா ஆரம்பமாகி இருக்கிறது.

**முன்னாள் போராளி இயக்கங்களின் ஆட்பலத்தையும் இந்த உள்ளூராட்சித் தேர்தலும் அதன் பின்னரான நிலவரங்களும் குறைக்கப் போகின்றன.**

இந்த இயக்கங்களில் முன்னணியில் நின்று செயற்படத்தக்க உறுப்பினர்கள் பலர் அனாவசியமான இத் தேர்தலில் பலிக்கடாக்கள் ஆக்கப்பட்டுள்ளனர்.

புலிகள் ஒருபுறம், போட்டி இயக்கங்கள் மறுபுறம். பிரசாரத்திற்கு சென்றால் வோட்டுக் கிடைக்குமா? வேட்டு வருமா? என்று நெஞ்சு திக்திக் என அடித்துக் கொள்ளும்.

வன்னியில் படைகள் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கையின் பெயர் 'ஜயசிக்குறுய்' என்பது தெரிந்ததே.

யாழில் தமிழ்க் கட்சிகள் தமக்கிடையே ஒரு 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையை தொடக்கியுள்ளன.

**வன்னி ஜயசிக்குறுய்யில் படையினர் பங்காளிகள். யாழ் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையில் படையினர் பார்வையாளர்கள். அதுதான் வித்தியாசம்.**

பிரபாகரன் அநியாயமாக தன் உறுப்பினர்களை பலிகொடுக்கிறார் என்று இயக்கங்கள் கூறியதும் உண்டு. தேவையற்ற யுத்தம் இது என்று சொன்னதும் உண்டு.

**இப்போது தேவையற்ற ஒரு தேர்தலில், தமிழ்க் கட்சிகள் போட்டியிடாவிட்டால் தேர்தலே நடக்காது என்ற சூழலிலும், விடாமல் போட்டியிட்டு உயிர்ப்பலி கொடுக்கவும் அஞ்சாது**

**நாரதர்**

**நிற்கின்றன தமிழ்க் கட்சிகள்.**

இதுவும் தேவையற்ற தேர்தல் யுத்தம்தான்!

யாருக்கு வெற்றி நிச்சயம்? வெற்றி யாருக்கு கிடைத்தாலும் தோற்கப்போவது மக்கள்தான்!

**யாழ் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையில் இறுதி வெற்றி அரசுக்கும், படையினருக்கும்தான்!**

புலிகள் உள்ளூராட்சித் தேர்தலை குழப்ப பெரும் படையணிகளை யாழுக்கு அனுப்பினால், வன்னியில் புலிகளின் பலம் குறையும்.

யாழ் செல்லும் புலிகளும் முதலில் படையினரைவிட, வேட்பாளர்களை தீர்த்துக்கட்டவே முனைப்புக் காட்டுவர்.

இந்த சந்தடிக்குள் வன்னியில் ஒரே மூச்சாக முயன்று பெப்ரவரி 4 இற்குள் தரைப்பாதை திறந்துவிடலாம் என்பதுகூட படையினரின் கணிப்பாக இருக்கலாம்.

ஆனால் களநிலவரங்கள் படையினரின் கணிப்புக்கு ஏற்ப இருக்குமா? என்பது கேள்விக்குறிதான். ■

# அதிரடி அய்யாத்துரை



**யாழில் சில பிரமுகர்களை** சுயேச்சையாகப் போட்டியிட வைக்க பச்சை உடைத்தரப்பு அணுகியதாம். ஒரு பிரமுகர் நெத்தியடியாய் போட்டாராம் ஒரு போடு. “ஐந்து லட்சம் கையில் தாருங்கோ. உங்கள் முகாமில் இருந்து எலக்ஷன் கேட்டுப்போட்டு, எலக்ஷன் முடிந்ததும் குடும்பத்தோடு கொழும்புக்கு போகிறேன்!” என்றாராம். அணுகிய அதிகாரி பின்னர் அந்தப் பக்கமே எட்டிப்பார்க்கவில்லையாம்.

**தேர்தல் திருவிழாவுக்காக** யாழ் சென்ற கட்சித் தலைவர் ஒருவர் பொது மக்கள் சிலருடன் உரையாடினாராம். “போட்டியிட சனம் முன்வருமோ?” எண்டு கேட்டாராம். பொதுமகன் ஒருத்தர் எதுகை மோனையுடன் பதில் சொன்னாராம் “சனம் வரும். ஆனால், பின்னர் பிணமும் அல்லோ வரும்!”

**வேட்புமனுத் தாக்கல்** முடியும்வரை வேட்பாளர்கள் சிலரை கலாதியான மப்பும் மந்தாரமுமான நிலையில்தான் இயக்கம் ஒன்று வைத்துப் பராமரித்ததாம். சுயநினைவு வந்து 'விற்றோ' பண்ணி ஓடிப்போட்டார் எண்டால் என்ன செய்யிறது? அதுதான் முன்ஜாக்கிரதையாக 'குடிமக்க'ளாக்கிப் போட்டினமாம்.

**தலா பத்தாயிரம் ரூபாவும்** 'குடிதண்ணீரும்' சாப்பாடும் எண்டு பேரம் பேசித்தான் கொழும்பில் இருந்தும், வவுனியாவில் இருந்தும் யாழுக்கு கூட்டிப்போனவையாம். கடைசிக்கட்ட நிலவரப்படி வேட்பாளர் வரட்சி கடுமையாக நிலவியதைப் பார்த்துப்போட்டு ஐயாயிரம் கூட்டிக் கேட்டனராம் சிலர். காற்றுள்ளபோதே தூற்றிக் கொண்டவை புத்திசாலிகள்.

**தேனகத்தில் பேருந்தில்** கைக்குண்டு டமாலாகியது பற்றி வெளியான செய்திகளுக்கு நேர்மாறான கதைகள் அடிபடுகிறது. உள்ளேயிருந்தவர்களில் ஒருவரது கைதான் கைக்குண்டை உருட்டிவிட்டதாம். வெடிக்கமுன் உருட்டியவர்கள் இறங்கும்போது ஏற்பட்ட தாமதத்தில்தான் உருட்டிய தரப்பிலும் சிலருக்குக் காயமாம். பின்னர் இறங்கி நின்று கட்டதும் அவைதானாம். அன்று காலையில்தான் மன்னாரில் சிருடையினர் சென்ற பஸ்வண்டி ரெண்டு எழுத்தாரால் தாக்கப்பட்டது என்பதையும் கூர்ந்து நோக்கிவிட்டு, அதன் எதிரொலியோ எண்டு கேட்பாரும் உண்டு.

**“பட்டியல் தயார்**, தமிழ்க் கட்சிகள் போட்டியிடாவிட்டால் எங்கள் ஆட்கள் இறங்குவினம்” என்று அதிகாரத்தரப்பு பிரமுகர் போட்டார் ஒரு போடு! 'முடியுமானால் போட்டுப் பாருங்கோ' எண்டு சவால்விடக்கூட ஒரு தமிழ்க் கட்சி இல்லாமல் போச்சுதே! பார்த்தியளோ! உண்மையில் நடந்தது என்ன தெரியுமோ? யாழ் மாநகர சபையிலாவது போட்டியிடத்தான் நீலக்கட்சியினர் ஆசைப்பட்டவையாம். 30 பேராவது தேவை. ஆளுக்கு எங்கே போறது? அதுதான் மெல்ல நழுவிக்கொண்டு விழுந்தும் மீசையில் மண்படவில்லை எண்டு கதை விட்டவையாம். ஆனால் கழகத்தினர் என்ன சொன்னவை தெரியுமோ? “நாங்கள் போட்டியிடாவிட்டால் அவை வந்து போட்டி போடுவினம்” எண்டு சனத்துக்கு பூச்சாண்டி காட்டி அறிக்கை விட்டுப்போட்டினம். இல்லாட்டி பகிஷ்கரித்திருப்பினமாம். ஹி ஹி ஹி. எலக்ஷன் கேட்க ரெடி எண்டு முதலில் சொன்னதே அவைதானுங்கோ. சனத்தின் ஞாபக சக்தியை இந்தளவுக்கு குறைவாக எடைபோடலாமோ?!

**காணாமல் போனோரின்** உறவினர்களுக்கு தலையைச் சுத்தும் பணிகள் தொடர்கின்றன. காணாமல் போனோர் சங்கத்தில் உள்ள சிலர், சங்கத்தை வைத்து ஆதாயம் தேடப்பார்க்கினமாம். ஒவ்வொரு இயக்கத்திடமும் சென்று இடத்துக்கு தகுந்தபடி பேசகினமாம். காணாமல் போனோர் உயிருடன் இருக்கிறார்கள் என்று வதந்திகளை பரப்பினால்தானே சங்கம் தொடர்ந்து நடத்தலாம். பாதிக்கப்பட்ட சனமும் இவை பின்னாலே திரியும். காணாமல்போகச் செய்தவையைவிட, காணாமல்போனோர் விவகாரத்தில் பிரபலமும், இலாபமும் தேட நினைக்கிறவைதான் மோசமான பேர்வழிகள், என்ன சொல்லுறியள்?!

**'தந்தை செல்வா அழகில்லாதவர்** என்று நான் பேசவில்லை' என கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் கடிதம் போட்டுள்ளாராம். தலைநகர பத்திரிகை ஒன்றில் வெளியான அவரது பேச்சில் இருந்துதான் அதனை நான் சுட்டிக்காட்டியிருந்தேன். குறிப்பிட்ட பத்திரிகைக்கு மறுப்பு விட்டிருந்தால் இந்தப் பிரச்சனை வந்திருக்காதல்லோ? ஒருவேளை முரசு மட்டும்தான் படிக்கிறாரோ?

**இந்தவாரப் பொன்மொழி:**

**“கொள்கையை நிறைவேற்றுவதில்**
**குரங்குப் பிடியாய் இரு!**
**உழைத்து வாழ்வதில்**
**எறும்பாய் இரு!**
**உண்மையாய் வாழ்வதில்**
**உடும்புப் பிடியாய் இரு!**
**தந்திரமாய் வாழ்வதில்**
**நரியாய் இரு!**
**துயரப்படுவோருக்கு**
**உதவுவதில்**
**மனிதனாக இரு!”** ■



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் தொடர்
அற்புதன் எழுதுவது




# பிரபா குடும்பம் எங்கே போனது?

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

பிரபாகரன்-மாத்தையா மோதலில் பிரபாகரன் கொல்லப்பட்டார் என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தினரும், இந்திய உளவுப் பிரிவும் கூட்டாக கட்டிவிட்ட கதைபற்றி கடந்த வாரம் விபரித்திருந்தேன்.

இன்னொரு கட்டுக்கதையையும் புலிகளுக்கு எதிரான இயக்கங்கள் கட்டி விட்டன.

பிரபாகரனின் மனைவியும், பிள்ளைகளும் வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டனர். அவர்களை மட்டும் பாதுகாப்பாக வெளிநாட்டுக்கு அனுப்பிவைத்துவிட்டு மக்களை பலிகொடுக்கிறார் பிரபாகரன் என்று பிரசாரம் செய்தனர்.

அத்தனையும் கலப்படமில்லாத கட்டுக்கதை. இந்தியப் படையுடன் போர் நடந்தபோது பிரபாகரனின் குடும்பம் இலங்கையில்தான் இருந்தது.

பிரபாகரன் வன்னிக் காட்டில் இருந்தபோது, அவரது துணைவியார் மதிவதனியும் அங்குதான் இருந்தார். ஆனால் அவர்களது பிள்ளைகள் இருவரும் வேறிடத்தில் இருந்தனர்.

தங்கள் நம்பிக்கைக்குரிய குடும்பம் ஒன்றிடம் மகன் சாள்ஸ் அன்ரனியையும், மகள் துவாரகாவையும் ஒப்படைத்து விட்டே பிரபாகரனும் துணைவியும் வன்னிக்காட்டுக்குச் சென்றனர்.

காட்டுக்குச் சென்ற பின்னர் தங்கள் பிள்ளைகள் எப்படி இருக்கிறார்கள்? என்பதை அறியமுடியாமல் தாயாரான மதிவதனிதான் கவலைப்படுவார்.

### கலக்கிய செய்தி

ஒருமுறை தங்கள் மகள் துவாரகா பற்றிய செய்தி ஒன்று அவர்களுக்கு கலக்கமளித்தது.

வயிற்றுப்போக்கு நோய் காரணமாக துவாரகா இறந்துவிட்டார் என்பதுதான் அந்தச் செய்தி.

பின்னர் தீர விசாரித்தபோதுதான் அது பொய்யான தகவல் என்பது தெரிய வந்தது.

தனது மனைவியையும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்குமாறு பிரபாகரன் கூறினார். ஆனால் மனைவியார் சம்மதிக்கவில்லை. இது பற்றி பிரபாகரன் ஒரு பேட்டியில்: "இந்திய இராணுவம் எங்களைத் தீவிரமாக வேட்டையாடியபோது மதிவதனியையும், குழந்தைகளையும் உறவினர் வீடுகளில் போய் இருக்கும்படி எவ்வளவோ கூறினேன். ஆனால் மதிவதனி கேட்கவில்லை. என்னுடனேயே இருப்பேன் எனப் பிடிவாதம் பிடித்தார். பின்பு குழந்தைகளை மட்டும் இயக்க ஆதரவாளர்களிடம் ஒப்படைக்க முடிவு செய்தோம். ஒரே இடத்தில் இரு குழந்தைகளையும் வைத்திருக்க விரும்பவில்லை.

ஒன்றுக்கு ஏதாவது நேர்ந்தால் மற்றொன்றாவது பிழைத்திருக்கட்டும் என்று எண்ணி மூத்தவனான சாள்ஸை ஓர் இடத்திலும், இளையவளான துவாரகாவை வேறு இடத்திலும் வளர்க்க ஏற்பாடு செய்தோம்.

முதலில் இதற்கு ஒப்புக்கொண்ட மதிவதனி, நாட்கள் செல்லச் செல்ல குழந்தைகளை எண்ணிப் புலம்பத் தொடங்கினார். ஆயிரக்கணக்கான தமிழீழக் குழந்தைகளுக்கு என்னாகும் என்பதே தெரியாமல் இருக்கிறது. அவர்களுக்கு நடப்பதே நம் குழந்தைகளுக்கும் நடக்கட்டும் என்று கூறினேன்.

ஆனால் சில வேளைகளில் இரவு நேரங்களில் திடீர் என எழுந்து குழந்தைகளை நினைத்துக் கதறி அழுவாள்.

என்னைப் பிடிக்க முடியாத இந்திய இராணுவம் மதிவதனியையும், குழந்தைகளையும் எப்படியாவது கைது செய்ய வேண்டும் எனப் பெரு முயற்சி செய்தது." என்று கூறியிருந்தார் பிரபாகரன்.

பிரபாகரனுடன் அவர் குடும்பம் தங்கியிருக்க சந்தர்ப்பம் இல்லை. எனவே யாழ்ப்பாணத்தில்தான் எங்காவது இருக்க வேண்டும் என்று கருதி இந்தியப் படை தேடுதல் நடத்தி களைத்துவிட்டது.

இந்திய உளவுப் பிரிவாலும் தகவல் பெற முடியவில்லை. அதனால் அவர்களாகவே ஒரு முடிவுக்கு வந்தனர். பிரபாகரனின் குடும்பம் இந்த நாட்டிலேயே இல்லை எனக்கூறிவிட்டனர்.

சுவிற்ஸர்லாந்தில் பிரபாகரனது குடும்பம் இருந்ததாகவும், பிரேமதாசா அரசுடன் பேச்சு ஆரம்பித்து, இந்தியப் படையும் வெளியேறிய பின்னர் பிரபாகரனின் குடும்பம் விமானம் மூலம் கொழும்பு வந்தது. அங்கிருந்து பிரபாவிடம் சென்றது என்றும் கற்பனைக் கதை ஒன்று பின்னர் உலாவித் திரிந்தது.

தனது குடும்பத்தை பாதுகாப்பாக அனுப்பிவைத்துவிட்டு மக்களைப் பலி கொடுக்கிறார் என்று பிரசாரம் செய்த இயக்கங்களின் தலைவர்கள் பின்னர் என்ன செய்தார்கள்?

இந்தியப்படை வெளியேற முன்னரே, தங்கள் இயக்கத் தோழர்களைக்கூட பத்திரமாக தப்பிச் செல்ல உதவாமல் குடும்பத்தோடு தப்பியோடினார் வரதராஜப்பெருமாள்.

இன்றுவரை இந்தியப் படையின் பலத்த பாதுகாப்பில் தன் மனைவியுடனும், பிள்ளைகளுடனும் இந்தியாவில் தங்கியிருக்கிறார் வரதராஜப்பெருமாள்.

பிரபாகரன் தன் மூத்த மகனுக்கு சாள்ஸ் அன்ரனி என்று பெயரிட்டார். புலிகள் இயக்கத்தில் பிரபாகரனுடன் தோளோடு தோள் நின்றவர் சாள்ஸ் அன்ரனி.

ஏனைய இயக்கங்களின் தலைவர்கள் அனைவருமே இப்போது திருமணம் முடித்துவிட்டனர். பிள்ளைகளும் உள்ளனர். இந்த இயக்கத் தலைவர்களது உற்ற தோழர்கள் பலரும் பலியாகி இருக்கிறார்கள்தான்.


தமிழகத் தலைவர் நெடுமாறனுடன் பிரபாகரனின் மகள் துவாரகா

ஆனால் தங்கள் பிள்ளைகளுக்கு தங்கள் இயக்கத்தில் பலியான உறுப்பினர்களது பெயர்களை சூட்டக்கூட ஏனைய இயக்கத் தலைவர்களில் எவரும் முன்வரவில்லை.

ஆயினும் இவர்கள்தான் பிரபாகரனின் குடும்பம் பத்திரமாக இருக்கிறது, ஏனைய குடும்பங்கள் பற்றி பிரபாகரன் கவலைப்படவில்லை என்றும் பிரசாரம் செய்தனர்.

இதனை ஏன் கூறுகிறேன் என்றால், அடுத்தவரை மட்டம் தட்டிக்கொண்டு, தாங்கள் அதனைவிட மட்டமாக இருப்பதை மறைக்கும் வகையில்தான் ஏனைய இயக்கத் தலைவர்களால் விமர்சனங்கள் பாவிக்கப்பட்டு வருகின்றன.

அதனால்தான் தாங்கள் எதையெதை தவறுகளாக சுட்டிக்காட்டுகிறார்களோ, அதே தவறுகளை, இன்னமும் பெரிய அளவில் தாங்களும் திரும்பச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

### புலிகள் அரசு பேச்சு

பிரேமதாசா அரசுடன் புலிகள் பேச்சு நடத்தவில்லையா? நாங்கள் பேச்சு நடத்துவது மட்டும் தவறா? என ஏனைய இயக்கங்கள் கேள்வி எழுப்புவது வழக்கம்.

இலங்கை அரசுடன் முதலில் பேச்சு நடத்தியது புலிகள் இயக்கத்தினர்தான் என்று சமீபத்தில் பேட்டி ஒன்றில் ரெலோ இயக்க பிரமுகர் ஒருவரும் கூறியிருந்தார்.

இலங்கை அரசுடன் முதன் முதலில் இரகசிய நட்புக் கொண்ட இயக்கம் புளொட். அந்த இயக்கத்தின் தலைவர் உமா மகேஸ்வரன் லலித் அத்துலத் முதலியுடன் நெருக்கமாக இருந்தார்.

கொழும்பில் புளொட் இயக்கத்தினர் தங்கியிருக்கவும் நிதி மற்றும் ஆயுத உதவிகள், தங்குமிட வசதிகள் என்பவை லலித் மூலம் கிடைத்தன.

புலிகள் அரசுடன் நடத்திய பேச்சு பகிரங்கமாக இருந்தது. அப் பேச்சின் மூலம் புலிகளுக்கு கிடைத்த பலன்கள் மட்டும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தன.

புளொட் அரசுடனான உறவையும்,இரகசியமாக வைத்திருந்தது. அரசிடம் இருந்து பெற்ற உதவிகளையும் இரகசியமாகவே வைத்திருந்தது. அதுதான் வித்தியாசம்.

ஏனைய இயக்கங்கள் தங்கள் தேவை கருதி, தங்கள் இயக்கத்தை தக்கவைக்கும் அவசியம் கருதியே அரசுடன் நட்புக் கொண்டன. அரசு உதவாவிட்டால் தங்கள் இயக்கங்களின் கதி அதோ கதி என்ற நிலையிலேயே ஏனைய இயக்கங்கள் அரசுடன் உறவும் வைத்துள்ளன.

ஆனால், புலிகள் இயக்கத்துடன் பேச்சு நடத்த அரசு தான் முதலில் விரும்பியது. இரு தரப்புக்குமே ஐம்பதுக்கு ஐம்பது இலாபம் கிடைக்கக் கூடிய நட்பாகவே அரசு-புலிகள் உறவு மலர்ந்தது.

வேறு போக்கிடம் இல்லாத நிலையில் எங்களை நாடி வந்திருக்கிறார்கள் என்று அரசு ஒருபோதும் புலிகளை நினைத்தது இல்லை.

புலிகள் தாம் நினைத்ததை செய்து கொண்டே இருந்தனர். இலங்கைப் படையினர் முகாம்களை விட்டு வெளியே செல்லாமல் புலிகள் தடுத்துக் கொண்டும் இருந்தனர்.

சமமான இருதரப்புக்களுக்கிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையாகவே அரசு புலிகள் பேச்சுக்கள் நடைபெற்றன.

அந்த உறவுக்கும், தமிழ்க் கட்சிகளுக்கும் அரசுக்கும் இடையிலான உறவுக்கும் இடையே முடிச்சுப்போடுவது, மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் இடையே முடிச்சுப் போடுவதற்கு ஒப்பாகும்.


துணைவியுடன் பிரபா

இத் தொடர் எழுதும் இன்றைய கட்டத்தில் அரசுக்கும், தமிழ்க் கட்சிகளுக்கும் இடையிலான உறவு எஜமானருக்கும், அடிமைகளுக்கும் இடையிலான உறவு போலாகி விட்டது. உண்மை, இது மிகையில்லை.

மக்களால் மக்களுக்காக நடத்தப்படுவது மக்களாட்சி என்று சிறுவயதில் படித்ததாக ஞாபகம். யாழ் உள்ளூராட்சி தேர்தல், அரசாலும், படைகளாலும், அரசுக்காகவும், படைகளுக்காகவும் நடத்தப்படும் தேர்தலாகும்.

இத் தேர்தலில் தங்கள் விருப்பங்களுக்கு மாறாக தமிழ்க் கட்சிகள் போட்டியிடுகின்றன. அரசின் உள்நோக்கத்தைப் பற்றி ஒருவார்த்தை கூட பேசமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

எஜமான-அடிமை உறவுக்கு இதனை விடத் தக்க சான்று தேவைப்படாது. தமிழ்க் கட்சி தலைமைகள் பற்றி அவ்வப்போது நான் கூறிவந்த பல கருத்துக்கள், இத் தொடர் நிறைவடைய முன்னரே உண்மையாகிவருவதை வாசகர்கள் அவதானித்திருப்பீர்கள்.

இவையெல்லாம் ஒன்றும் தீர்க்கதரிசனங்கள் அல்ல, தமிழ்க் கட்சித் தலைமைகளின் தீர்க்கமான குணாம்சங்களை புரிந்து கொண்டமையும், கடந்தகால, நிகழ்கால வரலாற்று சான்றுகளில் இருந்து பெறப்பட்ட முடிவுகளுமேயாகும்.

### புலிகளுக்கு வெற்றி

அரசு, புலிகள் பேச்சு நடந்து கொண்டிருந்தபோது, தென்னிலங்கை ஆங்கில, சிங்களப் பத்திரிகைகள் வெளியிட்ட விமர்சனங்கள் கவனத்தில் கொள்ளத்தக்கவை.

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை பின்வருமாறு எழுதியது.

"இந்தியப் படைகள் மூலம் இலங்கை அரசாங்கம் புலிகளின் ஆயுதங்களைக் களைய நினைத்தது. ஆனால் கால ஓட்டத்தின் நிர்ப்பந்தம் அவர்களை ஆயுதபாணிகளாகவே அரசாங்கத்தின் முன்நிறுத்திவைத்துள்ளது.

ஆயுதபாணிகளாக, உச்சியில் இருந்து உள்ளங்கால்வரை ஆயுதம் தரித்தவர்களாக, கெரில்லா உடைகளோடு அவர்கள் கொழும்பில் வந்து குதித்துள்ளனர்." என்று எழுதியது சண்டே ரைம்ஸ்.

இன்னொரு பத்திரிகை பின்வருமாறு கவலையோடு எழுதியது: "புலிகள் தமது கொழும்புப் பயணத்தின்போது தம்மோடு ஒரு தொலைக்காட்சி படப்பிடிப்பாளரையும் கூட்டி வந்துள்ளனர். யார்தான் ஓய்ந்திருந்தாலும் அவர் பயணம் முழுவதும் ஓயாது படங்களை எடுத்துக் கொண்டே இருக்கிறார். தம்மைக் கூட்டிச் செல்ல வந்தவர்கள், கூட்டிச் சென்ற இடங்கள், ஹெலி இறங்கிய இராணுவத் தளம் போன்ற சகல இடங்களையும் அவர் விரிவாகப் படம் எடுத்துக் கொண்டிருக்கிறார்."

மற்றுமொரு பத்திரிகை கூறிய தகவல் இது: "புலிகள் ஆயுதங்களோடு கொழும்பு வருவதை அரசாங்கம் விரும்பவில்லை. ஆனால் அவர்கள் அப்படி வருவதையே தொடர்ந்து அழுத்தியதால், அரசாங்கம் விட்டுக் கொடுக்க நேர்ந்தது."

தங்கள் இயக்க கௌரவத்தை எவ்வகையிலும் விட்டுக் கொடுக்காத நிலையிலும், நம்ப நட, நம்பி நடவாதே என்ற ரீதியிலுமே பிரேமதாசாவுடன் புலிகள் பேச்சு நடத்தினர்.

அதனை பத்திரிகைகள் புரிந்து கொண்டளவுக்குக்கூட ஏனைய இயக்கங்கள் புரிந்து கொள்ளவில்லையா? அவைக்கும் உண்மை தெரியும். எனினும் தங்களை நியாயப்படுத்தக்கூட புலிகளைத்தான் உதாரணமாக காட்ட வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு.

### கண்ணிவெடி

இலங்கை அரசுடன் புலிகள் பேச்சு நடத்திக் கொண்டிருந்தபோது, முல்லைத் தீவு மாவட்டத்தில் பாரிய தாக்குதல் ஒன்றை புலிகள் நடத்தினர்.

இலங்கை அரசுடன் புலிகள் பேசுகிறார்கள். இந்தியப் படையின் கட்டுப்பாட்டில் உள்ள வடக்கில், இந்தியப் படைக்கே தெரியாமல், தகவல்கூட தெரிவிக்காமல் இலங்கை அரசின் ஹெலிகள் தரையிறங்குகின்றன. புலிகள் அதில் ஏறிச் செல்கின்றனர்.

இந்தியப்படை வெட்கிப்போனது. ஆனாலும் முல்லைக் காட்டுக்குள் அவர்களால் செல்ல முடியவில்லை. செல்ல முயன்ற படையணிகளும் உயிருடன் திரும்பவில்லை.

முல்லைத்தீவு மாவட்டம் எங்கும் தேடுதல் நடவடிக்கைகளை விஸ்தரித்தனர். அடிக்கடி வீதிகளில் ரோந்துகள் சென்றனர்.

அதனைக் கவனித்த புலிகள் நிலக்கண்ணி வைத்தனர். ரோந்து சென்ற இந்தியப் படை வாகனம் தகர்ந்தது. 18 இந்தியப்படை சிப்பாய்கள் பலியாகினர்.

இலங்கை அரசு-புலிகள் பேச்சு ஆரம்பித்த பின்னர், இந்தியப் படைக்கு எதிராக புலிகள் நடத்திய முதல் பெரிய தாக்குதல் அதுதான்.

(தொடர்ந்து வரும்)

---

# "அமிரை புலிகளே கொன்றனர்"

## சிவா பதில்

அற்புதன் அவர்கட்கு,

அமரர் திரு. அமிர்தலிங்கத்தின் படுகொலையை யார் செய்தார்கள் என்று நான் வெளிப்படுத்தவில்லை என்று அப்பட்டமான பொய்யை பிரசுரித்து இருந்தீர்கள்.

நான் காயப்படுத்தப்பட்டு வைத்தியசாலைக்கு சென்றபோது, பரிசோதித்த டாக்டர், யார் இப்படிச் செய்தது? என்று கேட்டார். எல்.ரி.ரி.ஈ.யினர்தான் செய்தனர் என நான் சொன்னதை வைத்தியசாலை பதிவேட்டில் குறித்துவைத்துள்ளார். அதன் பின்னர் பொலிஸ் வாக்குமூலத்திலும் இதனையே சொல்லியுள்ளேன்.

பின்பு தந்தை செல்வாவின் பிறந்த தினத்தின்போது, எமது கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தின் போது அமைச்சர்கள் கௌரவ அஷ்ரப், தேவராஜ், பேர்னாட் சொய்சா முன்னிலையில் எல்.ரி.ரி.ஈ.யைச் சேர்ந்தவர்களே இதனைச் செய்தார்கள். ஏன் அப்படியான தலைசிறந்த தலைவரைக் கொலை செய்தார்கள் எனத் தெரியவில்லை எனவும் குறிப்பிட்டிருந்தேன்.

பின்பும் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடந்த அமரர் அமிர்தலிங்கத்தின் நினைவு தினக் கூட்டத்தில், இந்திய அறிஞர் சர்வபள்ளி கோபால் அவர்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசிய போது, எல்.ரி.ரி.ஈ.யினர் இக் கொலையை ஏற்றுக்கொண்ட செய்தியைக் குறிப்பிட்டு, ஆனால் ஏன் செய்தார்கள்? எதற்குச் செய்தார்கள் என பகிரங்கமாகக் கூறவில்லை என்றும் சொல்லியிருந்தேன்.

இந்த உண்மைகளை மறைத்து இப்படியான பொய்யைக் கூறுவது பத்திரிகை தர்மத்திற்கு முழுக்க மாறானதாகும்.என்மீது சேறு பூசும் ஒரேயொரு நோக்கத்தோடு செய்யப்பட்டதாகவுமே கருதவேண்டியுள்ளது.

திரு. சிவசிதம்பரம் அவர்களுக்கு,

அரசியலின் அந்திமக் காலத்தில் நிற்கும் உங்களோடு வீம்புக்கு சண்டைபிடிக்கும் அவசியம் எனக்கில்லை. அமிர் கொலையைப் பொறுத்தவரை அதற்கு காரணம் புலிகள் தான் என்பதை கூட்டணிபோ, அன்றி நீங்களோ திட்டவட்டமாக மக்களிடம் தெரிவித்தது கிடையாது.

பத்திரிகைகள்,செய்தி ஊடகங்கள் எவற்றிலாவது தாங்களோ, தங்கள் கட்சியினரோ அவ்வாறு தெரிவித்திருந்தால், அதற்கான ஆதாரத்தை காட்டினால், நான் பகிரங்கமாகவே மன்னிப்புக் கேட்கத்தயாராக உள்ளேன்.

தவறுகளை திருத்திக்கொள்ள நானோ, இத் தொடர் வெளியாகும் முரசோ என்றும் பின்நிற்பதில்லை.

சட்டவைத்திய அதிகாரியிடமும், பொலிசாரிடம் நீங்கள் புலிகளை குற்றம் சாட்டி வாக்குமூலம் கொடுத்ததாகக் கூறியுள்ளீர்கள். இவ்விடயம்கூட இப்போதுதான், அமிர் கொலை நடந்து எட்டு வருடங்களின் பின்னரே உங்கள் வாயால் தெரியவந்துள்ளது.

அதாவது, புலிகள் அக் கொலையை செய்தனர் என்பதை வெளியே நீங்கள் கூறாதது போன்று காட்டிக்கொண்டீர்கள். ஆனால் பொலிசாரிடம் உண்மையான வாக்குமூலம் கொடுத்துவிட்டீர்கள்?! அதுதானே அர்த்தம்?!

அப்படி இல்லை எனில், அமிர் கொலை தொடர்பான சந்தேகங்களும், குழப்பங்களும் மக்களிடம் பரவலாக தலைதூக்கிய போது, மக்களுக்கு உண்மையைச் சொல்ல கண்கண்ட சாட்சியாகிய நீங்களோ, உங்கள் கட்சியோ ஏன் முன்வரவில்லை? இதற்கு என்ன பதில் கூறுகிறீர்கள்? பதில் கூறுவதாக இருந்தால் தயவுசெய்து ஆதாரத்துடன் கூறுங்கள்.

1989 ஜூலை 13ம் திகதி அமிர்தலிங்கம் கொல்லப்பட்டிருக்கிறார். 1990 நவம்பர் மாதம் மாவீரர் தினத்தில் பிரபாகரனின் உரையில் அமிர் கொலையை மறைமுகமாக ஒப்புக்கொள்வதுபோன்று ஒரு கருத்து வெளியிடப்பட்டது.

நினைவுதினக் கூட்டங்களில் நீங்கள் உண்மையாச் சொன்னதாக குறிப்பிட்டுள்ளீர்கள். அந்தக் கூட்டங்கள் நடைபெற்ற ஆண்டு, திகதி போன்ற விபரங்களை புத்திசாலித்தனமாக மறைத்துள்ளீர்கள்.

அமிர் கொலையை புலிகள் ஏற்றுக் கொண்டுவிட்டனர் என்ற செய்திகள் வெளியாகி பல வருடங்களின் பின்னர் நடைபெற்ற கூட்டங்கள்தான் அவை.

அதில்கூட, உங்கள் கடிதத்தில் கூறப்பட்டுள்ளதின் பிரகாரம், ஒரு வேடிக்கையை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எல்.ரி.ரி.ஈ.யினர் இக்கொலையை ஏற்றுக் கொண்ட செய்தியைக் குறிப்பிட்டு, ஆனால் ஏன் செய்தார்கள்? என்று நீங்கள் கேள்வி எழுப்பியதாக கூறியுள்ளீர்கள்.

திரு. சிவசிதம்பரம் அவர்களே! எங்காவது, எப்போதாவது, புலிகள் இயக்கத்தினர் தாம் தான் அமிரை கொலை செய்தோம் என்று நேரடியாக கூறியுள்ளனரா? ஆம், எனில் உங்களால் ஆதாரம் காண்பிக்க இயலுமா?

"தமிழீழத்தைக் கைவிட்டால் அமிர்தலிங்கத்துக்கு மட்டுமல்ல பிரபாகரனுக்கும் மரண தண்டனைதான்" என்று பிரபா மாவீரர் தினத்தில் ஆற்றிய உரைதான், அமிர் கொலைக்கான புலிகளின் மறைமுக உரிமை கோரலாக கருதப்பட்டது. அதுதான் புலிகள் ஒப்புக் கொண்டனர் என்ற செய்தியாகவும் உலாவியது.

அப்படி எனில், ஏன் செய்தார்கள்? என்ற காரணமும் அதற்குள் சொல்லப்பட்டுள்ளதே. அப்படியிருக்க, ஏன் செய்தார்கள்? என்ற கேள்வியை ஏன் தொடுத்தீர்கள்?

பிரபாகரன் கூறிய காரணத்தை மக்களிடம் கூறினால், நீங்களும் தமிழீழத்தை கைவிட்ட துரோகிகள் பட்டியலில் ஒருவர் என்று அர்த்தமாகிவிடுமே என்ற வெட்கமா?

நிற்க, அமிர் தமிழ் பேசும் மக்களின் நீண்டகால அரசியல் தலைவர். அவரது கொலைக்கான காரணத்தையிட்டு அவர் சார்ந்த மக்களுக்கு உடனடியாக தெரிவிக்க வேண்டிய பொறுப்பை அவரது சகா என்ற ரீதியில் தாங்களும், தங்கள் கட்சியும் செய்யத் தவறினீர்கள் என்ற என் கருத்தை மறுக்கக்கூடிய ஆதாரம் எதுவும் உங்கள் மறுப்பில் காணப்படவில்லை.

என் கருத்துக்கு மறுப்புத்தர நீங்கள் காட்டிய அவசரத்தில் ஒரு சிறு அளவை, அமிர் கொலையானபோது எழுந்த குழப்பங்களை நீக்க நீங்கள் காட்டவில்லையே.

அரசும் அக் கொலைக்கான காரணத்தை மூடிமறைக்க நினைத்தபோது, அதனை அம்பலப்படுத்த, பத்திரிகைகளுக்கு ஒரு சிறு செய்திகூட உங்களால் ஏன் கொடுக்க இயலவில்லை?

அமிர் கொலை விடயத்தில் நீங்கள் பொலிசில் கொடுத்த வாக்குமூலத்தைக்கூட அரசு மூடிமறைத்ததே, அதனையிட்டு ஏன் மௌனம் சாதித்தீர்கள்?

உங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட உண்மையை புட்டுவைக்க தயங்கியது ஏன்? ஆக, புலிகள் ஒப்புக்கொண்டதாக நீங்களாக அறியும்வரை பொதுமக்களிடம் நீங்களாவக முன்வந்து உண்மையைச் சொல்லவில்லை என்பது சரிதானே? பின்னர் ஏன் மறுப்பு? ஆதாரம் இருந்தால் காட்டுங்கள். சந்தோசமாக தவறுகளை திருத்திக் கொள்வோம்.

அன்புடன்,
அற்புதன்.



படிப்பகம்

www.padippakam.com

# அம்பலப்படுத்தத் தயங்கும் அரசின் உள்நோக்கங்கள்!

## கூட்டணியின் பாதையில் முன்னாள் போராளிகள்

அலசுவது– இராஜதந்திரி

**யா**ழ் மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பு வெளியானதும் தமிழ்க் கட்சிகள் இடையே போட்டா போட்டி சூடுபிடித்திருக்கிறது.

யாழ் மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல் இறுதியாக நடைபெற்றது 1983ம் ஆண்டிலாகும். 1983 மே 18ம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்றது.

அத் தேர்தலை பகிஸ்கரிக்குமாறு விடுதலைப் புலிகள், புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ ஆகிய இயக்கங்கள் பகிரங்கமாக அறிவிப்புச் செய்திருந்தன.

**தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என்று விடுதலைப் புலிகள் எச்சரித்திருந்தனர்.**

விடுதலைப் புலிகள் இராணுவரீதியிலும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். மாணவர் அமைப்பான ஈழமாணவர் பொதுமன்றம் (G.U.E.S) பிரசாரரீதியாகவும் உள்ளூராட்சித் தேர்தலை எதிர்ப்பதில் முன்னின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணியும், அன்றைய ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுமே யாழ் மாவட்டத்தில் பிரதான போட்டியில் குதித்திருந்தன.

யாழ் மாநகரசபைக்கான கூட்டணி தலைமை வேட்பாளராக சட்டத்தரணி நாகராசா போட்டியிட்டார். அவரது வீட்டுக்கு சென்ற புலிகள் இறுதி எச்சரிக்கை விடுத்திருந்தனர். கூட்டணி சார்பாக அந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிட்ட சகல வேட்பாளர்களுக்கும் எச்சரிக்கை கடிதங்கள் புலிகளால் அனுப்பப்பட்டிருந்தது. பலரது வீடுகளுக்கு நேராகவே சென்றும் புலிகள் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

ஐ.தே.கட்சி வேட்பாளர்கள் பலர் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

**கூட்டணி வேட்பாளர்கள் உட்பட பெரும்பாலான வேட்பாளர்கள் தாம் போட்டியில் இருந்து விலகிக் கொள்வதாக பத்திரிகைகளில் விளம்பரம் செய்திருந்தனர். யாழ் மாநகர சபையின் ஐ.தே.கட்சி தலைமை வேட்பாளர் ராஜசூரியரும் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.**

அப்போது யாழ் மாவட்ட ஐ.தே.கட்சி அமைப்பாளராக இருந்த கணேசலிங்கம்தான் பின்னர் கொழும்பு மாநகர முதல்வராக பதவி வகித்தார். திரு.கணேசலிங்கத்தின் மெய்ப் பாதுகாவலர் அத் தேர்தலில் புலிகளால் கொல்லப்பட்டார். கணேசலிங்கம் கொழும்புக்குத் தப்பிச் சென்றார்.

1983 மே 18ம் திகதி வாக்களிப்பு நடந்து கொண்டிருந்தபோது நல்லூர் கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலை வாக்குச் சாவடி புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு உள்ளானது.

படையினரில் ஒரு கோப்ரல் பலியானார். இருவர் காயமடைந்தனர். வாக்களிப்பு முடிவடைவதற்கு ஒரு மணி நேரம் முன்பாகவே இத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

**வடக்கு–கிழக்கில் நடைபெற்ற தேர்தல் பகிஷ்கரிப்புக்களில் வெற்றிகரமாக நடைபெற்ற தேர்தல் பகிஷ்கரிப்பு 1983ல் யாழ் மாவட்டத்தில் நடைபெற்றதேயாகும்.**

எண்பது வீதமான யாழ் மாவட்ட மக்கள் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களை பகிஷ்கரித்திருந்தனர். கூட்டணியின் தலைமையை நிராகரித்ததுடன், இயக்கங்கள் அரசியல் இராணுவத் தலைமைகளாக உருவாகியிருந்ததை மக்கள் அங்கீகரித்தமைக்கும் அத்தேர்தல் பகிஷ்கரிப்பு எடுத்துக் காட்டாக அமைந்திருந்தது.

**அன்று உள்ளூராட்சித் தேர்தல்களை பகிஷ்கரிக்குமாறு கூறிய இயக்கங்களில் விடுதலைப் புலிகள் தவிர்ந்த, ஏனைய இயக்கங்கள் யாழ் மாவட்டத்தில் தற்போதைய உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுகின்றன.**

ஈ.பி.ஆர்.எல்.எஃப். மாணவர் அமைப்பில் முன்னணியில் இருந்தவர்களில் சிலர் இப்போதும் ஈ.பி.டி.பி. ஈ.பி.ஆர்.எல்.எஃப். கட்சிகளில் இருந்துவருகின்றனர்.

1981ல் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் நடைபெற்றது. அத் தேர்தலை நிராகரிப்பதில் புளொட் இயக்கத்தினரே முன்னின்றனர்.

1981ல் யாழ் நகரில் கூட்டணி செயலதிபர் அமிர்தலிங்கம் கலந்துகொண்ட கூட்டத்தை புளொட் இயக்கத்தினர் ஆயுதங்களுடன் புகுந்து, வேட்டுகள் எழுப்பி கலைந்தோடச் செய்தனர்.

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் கூட்டணியினரின் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் இரண்டு பொலிசார் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். இன்று யாழ் மாவட்டத்தில் புளொட் இயக்க முதன்மை வேட்பாளராக போட்டியிடும் மாணிக்கம் தாசனே அத்தாக்குதலில் முன்னின்றார்.

அதன்பின்னரே யாழ் நகரில் பொலிசாரும், ஆளும் கட்சி குண்டர்களும் இணைந்து வன்முறை வெறியாட்டம் நடத்தியிருந்தனர். யாழ் நூல் நிலையமும் பொலிசாரால் தீக்கிரையாக்கப்பட்டது.

1977 பொதுத்தேர்தலில் "தமிழீழமே முடிந்த முடிவு, அடுத்த தேர்தல் தமிழீழத்தில்தான் நடக்கும்" என்று கூறிய கூட்டணியினர், அதன்பின்னர் நடைபெற்ற பல தேர்தல்களில் பங்குபற்றி விட்டனர்.

கூட்டணியினர் அவ்வாறு போட்டியிட்டதை எதிர்த்தும், கேலி செய்தும் நின்ற இயக்கங்களும் பின்னர் தாமும் தேர்தல்களில் போட்டியிட ஆரம்பித்தன.

**விடுதலைப் புலிகள் தவிர்ந்த சகல இயக்கங்களுமே தமிழீழக் கோரிக்கையை மட்டுமல்லாமல், தமிழ் பேசும் மக்களின் தாயகக் கோட்பாட்டைக்கூட உரத்து வலியுறுத்த முடியாத கையறு நிலைக்கு சென்றுள்ளதையே காணமுடிகிறது.**

பாராளுமன்றத் தேர்தல் போன்று நாடு தழுவிய ரீதியில் நடைபெறும் தேர்தல்களில் தமிழ்க் கட்சிகள் போட்டியிடாவிட்டாலும்கூட, அத் தேர்தல்கள் நடைபெற்றே தீரும். ஆகவே அத் தேர்தல்களை பகிஷ்கரிப்பதால் எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை எனக் காரணம் கூறலாம்.

**ஆனால், தற்போது யாழ் மாவட்டத்தில் நடைபெற உள்ள உள்ளூராட்சித் தேர்தல் முழுக்க, முழுக்க அரசின் அரசியல், இராணுவ நோக்கங்களுடன் பின்னிப் பிணைந்த ஒன்றாகவே அமைந்திருக்கிறது.**

யாழ் மாவட்டத்திற்கு மட்டுமே என்றளவில் நடத்தப்பட உள்ள இத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் போட்டியிட மறுத்திருந்தால், தேர்தலை ஒத்திவைக்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டிருக்கும் என்பதை முன்னரே குறிப்பிட்டிருந்தோம்.

யாழ் தேர்தல் கள நிலவரம் அதனை உறுதி செய்வதாகவே அமைந்திருக்கிறது. சுயேட்சைக் குழுக்கள் எதுவும் தேர்தலில் போட்டியிட உடனே ஆர்வம் காட்டியிருக்கவில்லை. பொது ஜன முன்னணியினர்கூட யாழில் போட்டியிட மிகுந்த தயக்கம் காட்டிக் கொண்டிருந்தனர்.

தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் யாழ் நகருக்கு படையெடுத்துச் சென்று, தேர்தல் ஆரவாரத்தில் ஈடுபட்ட பின்னரே சுயேட்சையாகப் போட்டியிடும் ஆசை சிலருக்கு ஏற்பட்டிருந்தது. பொதுஜன முன்னணிப் பிரமுகர்கள் சிலருக்கும் போட்டியிடும் ஆசை தலைதூக்கியிருந்தது.

1994ல் யாழ் மாவட்டத்தில் நடைபெற்றதும் கேலிக்கூத்தான தேர்தலேயாகும். ஆயினும் அத் தேர்தல் நாடு தழுவிய தேர்தலின் ஒரு பகுதியாகவே அமைந்திருந்தது.

**ஆனால், இன்றைய உள்ளூராட்சித் தேர்தலானது யாழ் மாவட்டத்தில் நிலவும் இராணுவ ஆட்சிக்கு சிவில் நிர்வாக முத்திரை குத்தும் தேர்தலாகும்.**

படையினரால் கைதாகி பல நூறு மனித உயிர்கள் பலியான சோகம் இன்னமும் ஆறவில்லை. வீதிக்கு வீதி சோதனைச் சாவடிகள் குறையவில்லை. கைகட்டி வாய் பொத்தி, மாலையானால் ஊரடங்கு சட்டத்திற்கு பயந்து வீடுகளுக்குள் முடங்கி இருக்க வேண்டிய நிலையிலேயே யாழ் குடாநாட்டு மக்கள் உள்ளனர்.

இந் நிலையில் சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கையும் யாழ் குடாநாட்டின் மனித அவலங்களை எடுத்துக்காட்டியுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை உண்மைக்கு மாறானது என்று அரசாங்கம் கூறியுள்ளது மட்டுமன்றி, தனது இராணுவ கட்டுப்பாட்டு விதிகளையோ, அணுகுமுறைகளையோ சற்றும் மாற்றமின்றியும் தொடர்கிறது.

**சர்வதேச மனித உரிமை சபை வெளியிட்ட அறிக்கைக்கு பின்னரே, யாழ்ப்பாணம் கைதடியில் ஆசிரியர் ஒருவர் படையினரால் அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.**

இது தவிர, யாழ் குடாநாட்டில் சுட்டுக்கொல்லப்படுபவர்களின் அருகில் பிஸ்டல் கிடந்தது, கைக்குண்டு இருந்தது என்று படையினர் தெரிவிக்கும் செய்திகளும் எந்தளவுக்கு உண்மையானவை என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது.

**ஆக, தமது இராணுவ கட்டுப்பாட்டையோ, கடும் அணுகுமுறைகளையோ மாற்றிக்கொள்வதற்கு பதிலாக, வெளியுலகின் கண்களில் மண்ணைத்தூவும் சில காரியங்களில்தான் ஆட்சியாளர்கள் நாட்டம் காட்டுகின்றனர் என்பது தெளிவாகிறது.**

ஆட்சியாளரின் மண்ணைத் தூவும் முயற்சிகளை கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்கும் கட்சிகளாக தமிழ்க் கட்சிகள் மிக மோசமாக வீழ்ச்சி கண்டிருப்பதையே யாழ் தேர்தல் களத்தின் காட்சிகள் வெகு தெளிவாக புலப்படுத்தி வருகின்றன.

எந்தவொரு தமிழ்க் கட்சியும் ஆட்சியாளரை எதிர்த்தும், படையினரின் கெடுபிடிகளுக்கு எதிராக குரல் கொடுத்தும் செயற்படத்தக்க அமைப்புக்களாக இல்லை என்பதையும் நன்கு அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

**காணாமல் போனோருக்காக தமிழ்க் கட்சிகள் சில குரல் கொடுத்தபோதும், 'படையினரால் கைதாகி காணாமல் போனோர்' என்ற விடயத்தை அழுத்திக் கூறாமல், பொதுவாக, 'காணாமல் போனோர் எங்கே' என்று கேட்டுப் போராட்டம் நடத்தியதையே அவதானிக்க முடிந்தது.**

தற்போது யாழ் குடாநாட்டில் நடைபெறும் மரணங்கள் குறித்து அங்குள்ள தமிழ்க் கட்சிகள் வாய்திறக்காமல் இருப்பதையும் நோக்க முடிகிறது.

**கைதடியில் ஒரு ஆசிரியரை சுட்டுக் கொன்றதோடு, அவர் புலி என ஒப்புக்கொண்டு கையெழுத்துப் போட்டால் மட்டுமே உடலை ஒப்படைக்க முடியும் எனவும் சீருடையினர் மிரட்டியுள்ளனர். இவ்விடயங்கள் எதனையும் தமிழ்க் கட்சிகள் கண்டும் காணாமல்தான் இருந்து வருகின்றன.**

அரசின் தீர்வுப் பொதி பற்றி கருத்துக் கூறும்போதுகூட, ஏனைய தீர்வுகளைவிட சிறந்ததுதான் என்று முன்னுரை கூறிவிட்டே, தங்கள் விமர்சனங்களை புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.பி.டி.பி. போன்ற கட்சிகள் முன்வைப்பதையும் அவதானிக்கக்கூடியதாகவிருந்தது.

தமிழ் பேசும் மக்களின் தாயகத்தை கூறுபோடுவதை அடிப்படையாகக் கொண்ட ஒரு தீர்வுப் பொதியை எந்தவகையில் முன்னேற்றம் என இக்கட்சிகள் கூறுகின்றன என்பதும், இக் கட்சிகள் எல்லாம் கடந்த காலத்தில் எதற்காக உயிர்களைப் பலிகொடுத்து போராடின என்பதும் கேள்விக்குறியாக மாறி நிற்கின்றன.

**சில அதிகாரங்கள் நன்றாக இருப்பதாக இக் கட்சிகள் கூறுகின்றன. கழுத்துக்கு சுருக்குக் கயிறு வீசப்படும்போது, காலுக்கு அழகான செருப்பு கிடைப்பதால் யாது பலன் என்பதைக்கூட இக் கட்சிகள் சிந்திக்க தலைப்படவில்லை.**

கூட்டணியினரைப் பொறுத்தவரை அரசாங்கத்தின் பிரிக்கமுடியாத ஒரு பாகமாக மாறியுள்ளனர். பொது ஜன முன்னணியின் தமிழ்ப் பிரிவாக கூட்டணியினர் செயற்படத் தொடங்கியுள்ளனர்.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக கூட்டணியினரும், ஏனைய கட்சிகளும் விடுத்திருந்த அறிக்கைகளில் சிறு வித்தியாசங்கள் மட்டுமே காணப்பட்டிருந்தன.

உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்குமாறு கூட்டணியினர் கோரியதற்கான காரணங்களை உற்று நோக்கினால், எவ்விடத்திலும் அரசுமீதோ, படையினர்மீதோ குறை கூறப்படாத தன்மையைக் காணலாம்.

"ஏனைய இயக்கங்கள் ஆயுதங்களுடன் உள்ளன. எங்களிடம் அந்த வசதி இல்லை. வேட்பாளர்களுக்கு பாதுகாப்பு இல்லை. வாக்காளர்கள் பலர் வெளியே உள்ளனர். அங்கே அமைதி நிலவவில்லை" என்றெல்லாம் பொதுப்படையாகவே கூறப்பட்டிருக்கிறது.

**அந்த அறிக்கையை காணும் வெளி உலகினருக்கு, யாழ் குடாநாட்டில் தேர்தலை நடத்த அரசோ, படையினரோ தடையில்லை. தமிழ் கட்சிகளும், புலிகளும்தான் ஜனநாயக சூழல் திரும்ப அச்சுறுத்தலாக உள்ளனர் என்ற அபிப்பிராயமே ஏற்படும்.**

தேர்தலை பகிஷ்கரிக்க விருப்பம் தெரிவித்து ஈ.பி.ஆர்.எல்.எஃப். விடுத்த அறிக்கையிலும்கூட அரசின் நோக்கத்தை வெளிப்படுத்தும் கருத்துக்கள் இருக்கவில்லை.

மக்களுக்கு தேர்தல் பிடிக்கவில்லை. வாக்காளர் இடாப்புக்கள் இல்லை போன்றவை உபகாரணங்களாக சொல்லப்படலாமே தவிர, பிரதான அரசியல் காரணங்களாக அமையாது.

**திட்டமிட்ட அரசியல், இராணுவ நோக்கத்துடன் அரசு அறிவித்துள்ள தேர்தலை, அந்த நோக்கத்தை அம்பலப்படுத்தும் விதமான திட்டவட்டமான அரசியல் நிலைப்பாடு மூலம் தமிழ்க் கட்சிகள் நிராகரித்திருக்க வேண்டும்.**

கூட்டணியும், ஏனைய தமிழ்க் கட்சிகளும் விடுத்த அறிக்கைகள் உள்ளூராட்சித் தேர்தலை அரசு நடத்தும் உண்மையான நோக்கத்தை மூடிமறைக்க உதவியுள்ளன. யாழ் மாவட்ட மக்களின் அரசியல் விழிப்புணர்வை சகல தமிழ்க் கட்சிகளும் மிகக் குறைவாகவே எடை போட்டுள்ளன.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை ஒத்திவைக்க கோரியதும், வேட்பாளர்களை தேடிப்பிடிப்பதில் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களால், பொதுப்பட்டியலில் போட்டியிடலாம் என்று விடுக்கப்பட்ட அழைப்புக்களும் இதயசுத்தியுடன் நடைபெற்றவையல்ல என்பது தெளிவு.

**இதயசுத்தியுடனான முயற்சிகளில் தமிழ்க் கட்சிகள் ஈடுபட்டிருக்குமானால், தேர்தல் பற்றிய அறிவிப்பு வந்த சூட்டோடு சூடாக தமக்குள் ஒன்றுகூடி பொது முடிவுக்கு வந்திருக்க சந்தர்ப்பம் இருந்தது.**

எனவே, இத் தேர்தலில் போட்டியிடும் சகல தமிழ்க் கட்சிகளுமே மாபெரும் வரலாற்றுத் துரோகத்தை இழைத்துள்ளன என்பதை மறுப்பதற்கில்லை.

1981ல் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் கூட்டத்தை கலைத்த மாணிக்கம் தாசன் இன்று இராணுவப் பாதுகாப்புடன் யாழ் மாநகர மேயர் பதவிக்காக போட்டியிடுகிறார்.


1983ல் உள்ளூராட்சித் தேர்தலை நிராகரித்த ஈ.பி.ஆர்.எல்.எஃப், ஈ.பி.டி.பி., ரெலோ ஆகிய கட்சிகள், அதைவிட மோசமான சூழலில் நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுகின்றன.

**கடந்தகால கொள்கைகளை கைகழுவிவிட்டு அதனை நியாயப்படுத்த காரணம் தேடுதல், தமிழ் மக்கள் தரப்பில் நிற்க வேண்டிய தருணங்களில், ஆட்சியாளரின் மகுடிக்கு மயங்கி அவர்கள் பின்னால் செல்லுதல் போன்ற வரலாற்றுத் தவறுகளுக்காகவே கூட்டணி தலைமையை இயக்கங்கள் நிராகரித்து தனி வழி கண்டன. தற்போது அந்த இயக்கங்களில் பெரும்பாலானவை தேர்தல் மாயைகளிலும், அவற்றின் மூலமான பதவிகளால் கிடைக்கும் இலாபங்களிலும் சிக்கிக் கொண்டு, கூட்டணிக்கு தாமும் சளைத்தவர்களல்ல என்பதை நிரூபித்து வருகின்றன. யாழ் மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல் அதற்கு ஒரு தக்க சான்றாகும்.**

இத் தேர்தலில் வாக்களிப்பு மந்தமாகவே நடைபெறும் என்றே தெரிகிறது. வாக்களிப்போரும் போட்டியிடும் குழுக்களில் ஒப்பீட்டளவில் நல்ல குழு எது? ஊரவரா? தெரிந்தவரா? என்னும் அளவுகோல்களின் மூலமே தமது வாக்கு யாருக்கு என்பதை தீர்மானிக்கப் போகின்றனர்.

மாபெரும் ஆர்வத்தோடு 'இதுதான் எங்கள் கட்சி' என்று எக்கட்சிமீதும் அபிமானம் கொள்ளத்தக்க நிலை காணப்படவில்லை.

உள்ளூராட்சித் தேர்தல் நடந்து முடிந்த பின்னர் ஆட்சியாளர்களுக்குத்தான் அதன் பயன் முழுவதும் போய்ச் சேரும். உலக நாடுகளில் கடன் வாங்கவும், போரைத் தொடர நிதி ஆதாரங்களை பெறவும் அரசுக்கு நல்லதொரு வாய்ப்புக் கிடைக்க இருக்கிறது.



## சந்திக்குவராத சங்கதிகள்

—நக்கீரன்

உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட முன்னரும், அறிவிக்கப்பட்ட பின்னரும் திரை மறைவில் பல சுவையான சம்பவங்கள் நடந்துள்ளன.

உள்ளூராட்சித் தேர்தல் பற்றி எந்தவொரு தமிழ்க் கட்சியுடனும் அரசாங்கம் உத்தியோக பூர்வமாக பேச்சு நடத்தவில்லை.

ஆனால் சில தமிழ்க் கட்சிகளில் தமக்கு நம்பகமான பிரமுகர்கள் சிலருடன் அரசாங்க உயர் மட்டத்தினர் தொடர்பு கொண்டனராம்.

அதேசமயம் படைத்தரப்பும் தமக்கு நம்பகமான பிரமுகர்கள் மூலம் நாடி பிடித்தறிந்தது.

தமிழர் பிரச்சனையில் அரசாங்க உயர் மட்டத்துக்கு ஆலோசனை வழங்குவதை வழக்கமாகக் கொண்ட தமிழ்க் கட்சியின் பிரமுகர் ஒருவரிடமும் கருத்துக் கேட்கப்பட்டதாம். மனித உரிமை அமைப்புக்களுடனும் தொடர்பு உள்ள அப்பிரமுகர், சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கையால் ஏற்பட்ட தாக்கத்தில் இருந்து மீள்வதற்கு தேர்தல்தான் தக்க வழி என்று கூறியதுடன், தனது கட்சியை போட்டியிட வைப்பது தனது பொறுப்பு என்றும் வாக்குறுதி கொடுத்திருந்தாராம்.

படைத்தரப்புக்கு நெருக்கமான தமிழ்க் கட்சி ஒன்றின் பிரமுகரும் தாம் போட்டியிடத் தயார் என்று பச்சைக்கொடி காட்டினாராம்.

இவ்வாறான நாடிபிடித்துப் பார்க்கும் முயற்சிகளின் பின்னரே யாழ் மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலுக்கான அறிவிப்பை அரசாங்கம் துணிந்து வெளியிட்டதாம்.

கடந்த முறை தேர்தல் அறிவிப்பை வெளியிட்டுவிட்டு ஒத்திவைக்க நேர்ந்தது. இம்முறையும் அவ்வாறு நேர்ந்தால் அவமானமாகிவிடும் என்பதால் ஆழமறிந்துதான் அரசாங்கம் காலை விட்டது என்று தகவல்.

தமது கட்சி போட்டியிடும் என்று வாக்குக் கொடுத்த பிரமுகரின் தூண்டுதலால்தான் அவரது கட்சியும் போட்டியிட தீர்மானித்ததாம். அக்கட்சியில் உள்ளவர்களோ சிலர்தான், அந்தச் சிலரில் சிலருக்கு தேர்தலில் போட்டியிட விருப்பம் இல்லை. பகிஷ்கரிக்கலாம் என்று கூறினார்களாம்.

அதன்பின்னரே பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவிப்பதுபோல அந்தப் பிரமுகரே யோசனையையும் கூறினாராம். தேர்தலை ஒத்திவைக்குமாறு அரசைக் கோருவது என்பதுதான் அந்த யோசனை.

நடக்காது என்று நன்கு தெரிந்து கொண்டே பத்திரிகைகள் மூலம் மக்களை ஏமாற்ற விடுக்கப்பட்ட கோரிக்கைதான் அது. ஆயினும் ஒத்திவைப்புக் கோரிக்கையில் அரசை எவ்வகையிலும் குறைகூறாத வகையில் வாக்கியங்களையும் அமைத்து, தனது அலுவலகத்திலேயே தட்டச்சு செய்து, தலைவரின் கையொப்பம் பெற்று அறிக்கை விட்டதும் அப்பிரமுகரின் கைவரிசைதானாம்.

மறுபுறம் படைத்தரப்புக்கு நெருக்கமான பிரமுகரின் கட்சி ஒருபடிமேலே போய், "நாம் போட்டியிடத் தயார்" என்றே அறிவித்துவிட்டது.

இதற்கிடையே, உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முதல் நாள் இன்னொரு தமிழ்க்கட்சித் தூதுக்குழு ஜனாதிபதியைச் சந்தித்தது. அச் சந்திப்பின்போது வடக்கு–கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு அக் கட்சியின் தலைவர் ஜனாதிபதியிடம் கேட்டாராம்.

தற்போது அது சாத்தியமில்லை என்று கூறிய ஜனாதிபதி உள்ளூராட்சித் தேர்தல் பற்றியும் மேலோட்டமாக கருத்தறிந்தாராம். சற்றுப் பின்போடலாம் என்று அக் கட்சியினர் கூறினரே தவிர, உறுதியான கருத்துக்களை தெரிவிக்கவில்லை.

ஆக, மூன்று கட்சிகள் தயார். நாலாவதாக முன்னாள் மாகாணசபைக் கட்சி. இவர்களிடம் கருத்து கேட்கப்படவில்லை. ஆனாலும் தனித்து எதிர்ப்பு தெரிவிக்க மாட்டார்கள் என்பது அரசுக்கு நன்கு தெரியும்.

ஏனெனில் அக் கட்சியின் தலைவர் அரசாங்க அமைச்சு ஒன்றின் ஆலோசகராக இருந்து மாதாந்த ஊதியம் பெறுகிறார். அரசின் உபயத்தில் அரச கட்டடத்தில்தான் அக்கட்சியின் அலுவலகம் கொழும்பில் இருக்கிறது.

அதுதவிர அமைச்சு ஒன்றின் ஆலோசகர் என்ற ரீதியில்தான் 500 மீன்பிடி வலைகள்வரை கொண்டுசென்று குருநகர் பகுதிகளில் விநியோகித்து கட்சிக்கு ஆதரவும் தேடிக்கொண்டிருக்கிறார்.

ரெலோ, ஈரோஸ் ஆகிய கட்சிகளின் கருத்துக்களை அறிவதில் அதிக ஆர்வம் காட்டப்படவில்லை. போட்டியிட கட்சிகள் உள்ள போது மேற்கொண்டு தாமதிப்பானேன்! தேர்தல் முடிவை அறிவித்தது அரசு.

மொத்தத்தில் தமிழ்க் கட்சிகளின் பலம், பலவீனங்களை அரசு அறிந்து வைத்துள்ளது. அதனால்தான் அவற்றை தமது நோக்கங்களுக்கு ஏற்ற கருவிகளாகப் பயன்படுத்த முடிகிறது.

இன்னொரு தகவல் என்ன தெரியுமா? யாழ் மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்த இயலாது என்று ஏதாவது ஒரு கட்சி வழக்குத் தொடுத்திருந்தால்கூட அரசின்பாடு தர்மசங்கடமாகியிருக்கும்.

முதலில் தேர்தலுக்கு தடை உத்தரவு வழங்கிவிட்டே, நீதிமன்றத்தில் விசாரணை நடந்திருக்கும். சட்டம் படித்த விற்பன்னர்களைக் கொண்ட கட்சிக்குக்கூட அது தெரியாதா என்ன?

அப்படி வழக்குத் தொடுத்தால் அது நேரடியாக அரசுடன் மோதுவதாகிவிடும். அரசியல் விளையாட்டு என்று சொல்லித் தப்ப முடியாது. அதனால்தான் ஒத்திவைப்புக் கேட்ட கட்சிகள், பகிஷ்கரிக்க அழைப்பு விடுத்த கட்சிகள் எவையும் வழக்குக்குச்செல்ல விரும்பவில்லை.

எத்தனை சுழியோட்டங்கள், எத்தனை குத்துக்கரணங்கள் பார்த்தீர்களா? தமிழ்நாட்டு அரசியலை நம்மவர்கள் ஒருகாலத்தில் கேலி செய்தது உண்டு. நாம் அரசியலில் தெளிவுள்ளவர்கள். நம்மை யாரும் ஏமாற்றமுடியாது என்று வீறாப்பு பேசியதும் உண்டு. எல்லாம் கனவாகிப்போய்விட்டது. இன்று நம் முதுகில் யார் யாரோ சவாரி விட்டுக் கொண்டிருக்கிறார்கள்!



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி பூலான்தேவி 75

தருவது ரசிகன்



பூலான்

**கடந்த வாரம்**

**பூலான் தேவியும் மான்சிங்கும் ஆற்றங்கரையில் தம்மை மறந்திருக்கின்றனர். பொலிசார் அப்பகுதியை சுற்றிவளைக்கிறார்கள். இனி...**

பூலான் கோஷ்டியினர் அப்பகுதியில் மறைந்திருப்பதை பொலிசார் அறிந்திருந்தனர். அதிகாலை நேரத்தில் சகலரும் அசந்து தூங்கிக் கொண்டிருப்பார்கள். கூண்டோடு ஒழித்துக்கட்டி விடலாம் என்று நினைத்தே சுற்றிவளைத்தனர்.

பூலானுக்கு நல்ல நேரம். அதனால்தான் அதிகாலையிலே எழுந்து ஆற்றங்கரைக்குச் சென்றாள். மான்சிங்குடன் சரசம் செய்தாள்.

ஆற்றங்கரைக்கு செல்லாமல், மான்சிங்குடன் தாமதிக்காமல் இருந்திருந்தால் பூலானின்கதி என்னாகியிருக்கும் என்பதை அடுத்து நடந்த சம்பவங்கள் எடுத்துக்காட்டின.

அதிகாலையில் காவலுக்கு இருந்த பூலானின் ஆள் இதமான குளிருக்கு ஏற்ப தூங்கிக்கொண்டிருந்தான்.

அவன் அருகே. சென்ற பொலிசார், முதலில் அவனது துப்பாக்கியை எடுத்துக் கொண்டனர். பின்னர் அவனைத் தொட்டு உலுப்பினார்கள்.

திடுக்கிட்டு விழித்தவன் மிரண்டான். கைகளை தலைக்கு மேலே உயர்த்தியபடி சரணடைந்தான்.

சத்தம் கேட்டு தூக்கத்தில் விழித்த பூலானின் ஆள் ஒருவன் "பொலிஸ், பொலிஸ்" என்று கத்திவிட்டான்.

அவன் மட்டும் அவ்வாறு குரல் கொடுக்காதிருந்தால் பொலிசார் துப்பாக்கியால் சுட்டு எச்சரித்திருக்க மாட்டார்கள்.

எச்சரித்த வேட்டுச்சத்தம் கேட்காமல் இருந்திருந்தால் ஆற்றங்கரையில் பாம்புகள் போல் பிணைந்து கிடந்த பூலானும், மான்சிங்கும் உஷாரடைய சந்தர்ப்பம் இருந்திருக்காது.

டுமில். டுமில்.

இரண்டு வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. வேட்டுச் சத்தம் கேட்டதும் திடுக்கிட்டு எழுந்த பூலானின் ஆட்கள் சிலர் தங்கள் துப்பாக்கிகளை தூக்கிக்கொண்டு ஓட, வேறு சிலர் பொலிசாரை நோக்கிச் சுடத் தொடங்கினார்கள்.

சண்டை தொடங்கிவிட்டது. பூலானின் ஆட்கள் இரண்டுபேர் துப்பாக்கியை தூக்கிச் சுட வாய்ப்பே இல்லாமல் சுருண்டு விழுந்தனர்.

ஆற்றங்கரையில் பூலான் தன் உடைகளை மிக அவசரமாக அணிந்துகொண்டாள். துப்பாக்கியை எடுத்துக் கொண்டாள். பின்னால் வந்த மான்சிங்கின் கரம் பூலானின் கையை அழுத்தமாகப் பிடித்தது.

"என்ன?" என்றாள் பூலான். அவள் கண்களில் கோபம் தெரிந்தது. சண்டைக்கு அவள் தயாராகிவிட்டது புரிந்தது. சற்று முன் சரசமாடி, மூச்சுவிட்டு, மூச்சுவிட்டு, பொங்கித் தளர்ந்து, தணிந்து பொங்கி, புரண்டும், உருண்டும் கூத்து மாடி குதூகலித்த பூலான் வேறு இப்போது, உக்கிரமாய் நிற்கும் பூலான் வேறு என்று மான்சிங் வியந்தான்.

அந்த வியப்புடனேயே கூறினான்: "வேண்டாம், அவசரப்படவேண்டாம்."

பூலான் வெடித்தாள்: "அவசரப்படாமல் என்ன செய்ய வேண்டும்? எங்கள் ஆட்கள் அந்த காக்கி நாய்களால் கொல்லப்படுவதை பார்க்க வேண்டுமா? விடு என்னை!" கையை உதறினாள்.

மான்சிங்கின் பிடி இறுக்கமாக இருந்தது. "மாட்டேன், விடமாட்டேன்."

பூலானுக்கு அவன்மேல் இருந்த காதலை பின் தள்ளிவிட்டு கோபம் முன்னே வந்தது. "நான் சொல்வதைத்தான் நீ கேட்கவேண்டும். நீ என்ன உத்தரவு போடுகிறாய்?"

"உத்தரவல்ல, உங்களைப் பாதுகாப்பது என் கடமை!"

"கண்டறியாத கடமை." இகழ்ச்சியாக கூறிக்கொண்டே, சட்டென்று இழுத்து கையை விடுவித்தாள்.

மான்சிங் தன் கைத்துப்பாக்கியை உருவிக்கொண்டான்.

"ஒரு அடி எடுத்துவைத்தால்கூட உங்கள் உயிர் உடலில் தங்காது!" மான்சிங்கின் வாயில் இருந்து அந்த வார்த்தைகளை, அப்படியொரு எச்சரிக்கையை பூலான் எதிர்பார்க்கவில்லை.

அவள் நம்பமாட்டாமல் மான்சிங்கின் கண்களைப் பார்த்தாள்.

"மா... மான்சிங்.. நீ... நீயா இப்படி.."

"ஆம், நான்தான், நானேதான் சொல்கிறேன். உயிர் மேல் ஆசை இருந்தால் என் சொற்படிதான் நடக்கவேண்டி இருக்கும்."

பூலான் வெகு அலட்சியமாக அவனை நோக்கினாள். அவளது கண்களில் பயத்தின் சாயல் சிறிதும் இல்லை என்பதை மான்சிங் கவனித்து உள்ளூரப் பிரமித்தான்.

"ஏய்! மான்சிங்! உயிர்மேல் எனக்கு ஆசையிருந்தால், பண்ணையார்களுக்கு வேசியாக இருந்திருப்பேன். வீரியாக மாறி இருக்கமாட்டேன். நீ புத்திசாலி என்று நினைத்தேன், முட்டாள்! என்னை நீ புரிந்து கொண்டது இவ்வளவுதானா? உன்னோடு பேசிக்கொண்டிருக்க நேரமில்லை. சுடுவதானால் சுடு"

புறங்கையால் தட்டிவிடுவது போன்ற அலட்சியத்துடன் பூலான் திரும்பி நடக்கத் தொடங்க, மான்சிங்கின் குரல் தெளிவாக ஒலித்தது. "மான்சிங் தன்னைத் தானே சுட்டுச் சாவதை பார்த்துவிட்டுப் போங்கள்."

சட்டென்று நின்ற பூலான், திரும்பிய போது, மான்சிங் தன் கைத்துப்பாக்கியை தன் நெற்றிப் பொட்டில் வைத்துக் கொண்டிருந்தான்.

பாய்ந்துசென்ற பூலான், "உனக்கென்ன பைத்தியமா?" அவன் சட்டையைப் பிடித்து உலுக்கினாள். "என்ன செய்யலாம் சொல்லித் தொலை. கேட்கிறேன்)"

"இது முறை!" மான்சிங்கின் முகம் மலர்ந்தது. "என் பின்னால் வாருங்கள்" மான்சிங்கின் முதுகுப் பின்னால் சென்றாள் பூலான்.

ஆற்றங்கரை புதர்களின் மறைவில் டதுங்கிப் பதுங்கி இருவரும் சென்று கொண்டிருக்க, வேட்டுச் சத்தங்களும் கேட்டுக் கொண்டிருந்தன.

பூலானின் ஆட்களில் இரண்டுபேர் பொலிசாரிடம் சிக்கிக்கொண்டனர்.

அவர்களை அந்த இடத்திலேயே வைத்து உதைத்தனர். "பூலான் எங்கேடா?" பூட்ஸ் கால் அடிவயிற்றில் பாய்ந்தது.

"எங்களுக்கு தெரியாது. இங்கேதான் எங்கேயோ.." அவன் சொல்லி முடிக்க விடாமல், இன்னொருவன் புத்திசாலித்தனமாக, "நேற்றிரவு புறப்பட்டு போய்விட்டார்கள். நாளைதான் திரும்பிவருவார்கள்... ஐயோ.. அம்மா... அடிக்காதீர்கள் நான் சொல்வதுதான் உண்மை" என்றான்.

பொலிஸ்காரர்களுக்கு உற்சாகம் வடிந்துபோனது.

ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பார்த்துக் கொண்டனர்.

பூலானும், மான்சிங்கும் எட்டத்தில் புதர்மறைவில் தங்களை மறைத்துக்கொண்டு, அங்கு நடப்பவற்றை கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

தங்கள் ஆட்கள் இரண்டுபேரும் பொலிசாருக்கு என்ன கூறுகிறார்கள் என்பது அவர்களுக்கு கேட்கவில்லை. மௌனப் படம் பார்ப்பதுபோலிருந்தது.

பூலான் குழுவில் பலியான இரண்டு பேரின் உடல்களையும் தூக்கிக் கொண்டு, உயிருடன் பிடிபட்ட இரண்டு பேரின் கைகளிலும் விலங்கு மாட்டி அழைத்துக் கொண்டு பொலிஸ் கோஷ்டி புறப்பட்டது.

பூலான் குழுவில் ஏனையோர் ஓடித்தப்பியிருந்தனர். சுட்டுக்கொண்டே அவர்கள் ஓடியதால், பொலிசாரால் அவர்களை வளைத்துப் பிடிக்க முடியவில்லை.

பொலிசார் போய்விட்டார்கள் என்று தெரிந்தபின்னர் அனைவரும் வந்து சேர்ந்தனர்.

தங்கள் ஆட்களில் இரண்டுபேர் பலியானதும், மேலும் இரண்டு பேர் பொலிசாரின் கையில் சிக்கிவிட்டதும் எல்லோருக்கும் கவலையாக இருந்தது.

பலியானவர்கள் சிந்திய இரத்தக் கறை மட்டும் தரையில் கிடந்தது. பூலான் அதனையே விழி கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தாள்.

'என்னைத் தேடித்தானே இந்த வேட்டை. எனக்காகத்தானே இந்தப் பலி' என்று நினைக்கையில் விரக்தியாக இருந்தது.

தங்கள் பலியான சகாக்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தும் வழக்கம் பாபா குழுவில் இருந்தது. பூலானும் அவள் குழுவினரும் பாபா செய்வதுபோலவே தங்கள் சகாக்களுக்காக ஒரு நிமிடம் மௌனமாக தலைதாழ்த்தி நின்றனர்.

மௌனம் கலைந்ததும் பூலான் சொன்ன முதல் வார்த்தை: "பொலிசாரின் கையில் இருந்து நம் ஆட்கள் இருவரையும் மீட்டாக வேண்டும்."

மான்சிங் அதனை ஆமோதித்தான். தகவல் திரட்ட தங்கள் ஆட்களில் இருவரை அனுப்பிவைத்தான்.

சென்றவர்கள் அன்று மாலை தகவலுடன் திரும்பினர். கொல்லப்பட்ட இரண்டு உடல்களையும் அடையாளம் காண்பதற்காக வைத்திருக்கிறார்கள். பிடிபட்டவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தி,சிறைச்சாலைக்கு அனுப்பிவிட்டனர்.

சிறைச்சாலை என்றதுமே பூலானுக்கு இன்னொரு யோசனையும் தோன்றியது.

பூலானின் ஆட்களை சிறைவைத்திருந்த சிறைச்சாலையில்தான், முன்னர் பூலானும் சிறை வைக்கப்பட்டிருந்தாள்.

அந்த சிறை அதிகாரிதான் பூலானை சபலத்துடன் அணுகியவன்.

அந்த மிருகத்தையும் தண்டிப்பதோடு, தன் ஆட்களையும் மீட்டுவர திட்டமிட்டாள் பூலான்.

மான்சிங்கிடம் தன் யோசனையை கூறினாள். அவனும் சம்மதித்தான்.

சிறை அதிகாரிக்கு பூலான் தகவல் அனுப்பினாள்.

அவனை தனியாகச் சந்திக்க விரும்புவதாகவும், அதனால் அவனுக்கும் சில ஆதாயங்கள் உண்டென்றும் பூலான் தன் தகவலில் தெரிவித்திருந்தாள்.

பூலான் என்றதுமே சிறை அதிகாரிக்கு சபலம் எட்டிப்பார்த்தது. அனுபவிக்காமல் கை நழுவிய வாய்ப்பு மறுபடியும் வாய்க்கு எட்டுகிறது. தானாக வந்து மடியில் விழுகிறது. அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. உடனே சம்மதம் தெரிவித்துவிட்டான்.

அவன் சம்மதம் தெரிவித்த மூன்றாம் நாள் சிறைக்குள் இருந்த அவனது அறையில் பூலான் அவனைச் சந்தித்தாள்.

அந்தச் சிறை சிறியதாக இருந்தமையால் சிறை அதிகாரி தங்கும் அறையையும் சிறைச்சாலை வளாகத்திற்குள்ளேயே ஒதுக்கிக் கொடுத்திருந்தனர்.

அதுதான் பூலானுக்கு மிக வசதியாகிவிட்டது. பூலான் தனியாகத்தான் சென்றாள். முதலில் மான்சிங் அவளைத் தடுத்துப்பார்த்தான்.

"தனியாகப் போய் செய்யக்கூடிய காரியமல்ல இது. நாங்கள் குழுவாகப் போய் சிறையை தாக்கலாம். அல்லது சிறை அதிகாரி வெளியே செல்லும்போது அவனை மடக்கி பணயக் கைதியாக வைத்து சிறைக்குள் புகலாம்" என்று யோசனை கூறினான்.

பூலான் அந்த யோசனையை நிராகரித்தாள். "மான்சிங்! ஒருபெண் நினைத்தால் சாதிக்க முடியாதது எதுவும் 'இல்லை! பெண் என்பதால் என்னை சிறு புழுபோல நினைத்த அந்தப் பேடியிடம் நான் தன்னந்தனியாளாய் செல்கிறேன். யார் என்று காட்டிவிட்டு வருகிறேன்".

அதன்பின்னர் மான்சிங் தடுக்கவில்லை. சிறைச்சாலைக்குச் சற்றுத் தூரத்தில், ஓர் இடத்தில் மான்சிங்கும் மூன்றுபேரும் பதுங்கி இருந்துகொண்டனர். பூலான் மட்டும்தான் சென்றாள்.

பூலான் சற்று அதிகமாகவே தன்னை அழகுபடுத்தியிருந்தாள். சிறைக்குள் அதிகாரியின் அறைக்கு செல்லும்வரை ஒரு போர்வையால் தன்னை மூடிக்கொண்டே சென்றாள்.

சிறைவாயில் காவலனுக்கு சிறை அதிகாரி முன்னமே கூறிவைத்திருந்தான். அதனால் பெண் என்று முகம் சொன்னதுமே, எந்தச் சோதனையும், எந்தச் சந்தேகமும் இல்லாமல் கதவைத் திறந்தபடி ஒரு மாதிரியாக இளித்தான்.

சிறை அதிகாரியிடம் பெண்கள் வருவது புதிதல்ல. அவனது மனைவியும் பிள்ளைகளும் சொந்த ஊரில் இருந்தார்கள். அவன் இங்கே இருந்து பெண்களை மேய்ந்து கொண்டிருந்தான்.

பூலான் உள்ளே வந்ததும் சிறை அதிகாரி தன் அறைக்கதவை இறுக மூடினான். பூலான் தன் போர்வையை விலக்கினாள். காக்கி உடைதான் போட்டிருந்தாள். மேற்சட்டையின் பாதிவரை திறந்துகிடந்தது. மார்பக விளிம்புகள் எட்டிப்பார்த்தன.

சிறை அதிகாரிக்கு நாவறண்டுவிட்டது. காவியாய் சிரித்தான். பூலான் சென்று கட்டிலில் அமர்ந்து கொண்டு, அவனை கிறக்கமாய் நோக்கினாள்.

இரையை நோக்கி செல்லும் நாய்போல, பூலானை நோக்கி சென்றான் சிறை அதிகாரி. அவனது மேசையில் சிறைக் கூண்டுகளை திறப்பதற்குரிய சாவிக்கொத்து மல்லாந்து கிடந்தது.

பூலானின் கண்கள் சாவிக்கொத்தில் பதிந்து மீண்டு, பின்னர் இடப்பக்க மூலையில் சாய்ந்து கொண்டிருந்த துப்பாக்கி மீதும் பட்டுமீண்டது.

சிறை அதிகாரி தன் சட்டையை பரபரப்பாக கழற்றிப் போட்டான்.

பூலானை நெருங்கினான்.

பூலான் அவனை கண் இமைக்காமல் பார்த்தாள். அவனது வெற்று மார்பில் புதராக தெரிந்த முடிகள் வெள்ளையடித்தது போலத் தெரிந்தன.

'ஆசை மட்டும் நரைக்கவில்லை' பூலானுக்கு சிரிப்பாக இருந்தது.

அவனுக்கு கொஞ்சம் விளையாட்டுக் காட்ட நினைத்தாள்.

(தொடர்ந்து வரும்)

## கவரும் பாடகர்



டயானாவின் இறுதிச் சடங்கில் பாடியவர் பொப் பாடகர் எல்டன் ஜோன். மர்லின் மன்றோ மறைந்தபோது, பாடப்பட்ட சோகப் பாடலில் சில மாற்றங்களைச் செய்து பாடியிருந்தார். அந்த பாடல் ஒலிப்பதிவு நாடாக்கள் கோடி கோடியாக விற்பனையாகி உலக சாதனை படைத்துள்ளன.

எல்டன் ஜோன் டயானாவின் நண்பர். டயானா எல்டன் ஜோனின் ரசிகை. டயானாவுக்கு மட்டுமல்ல, பிரபலமான அழகிகளுக்கும் எல்டனின் பாடல்களில் மட்டுமல்ல, அவர் மீதும் பிடிப்புத்தான்.

அமெரிக்காவின் பிரபல மொடல் அழகி டோனடெல்லா வெர்சக் என்பவர்தான் இங்கே எல்டனின் அணைப்பில் சிரித்தபடி காட்சி தருகிறார்.

அமெரிக்காவில் பிரபல ஆடை அலங்கார நிபுணராக இருந்தவர் கியானி வெர்சக். அவருக்கு போட்டியானவர்கள் கூலிக் கொலையாளிகளை வைத்து தீர்த்துக் கட்டிவிட்டார்கள். அவர் தயாரித்த கவர்ச்சி ஆடைகள்தான் ஹொலிவூட் நடிகைகளுக்கு இரசிகர்கள் மத்தியில் கிளு கிளு வரவேற்பை ஏற்படுத்தியதாம்.

கியானி வெர்சாக்கின் நினைவாக அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் கண்காட்சி ஒன்று நடத்தினர். அக் கண்காட்சியில் காணப்பட்ட காட்சிதான் இது. கியானி வெர்சாக்கின் சகோதரிதான் எல்டனின் அணைப்பில் சிரிக்கும் மொடல் அழகி.

## பக்தியால் பத்தரை கோடி

ஐயப்ப பக்தர்கள் எண்ணிக்கை வருடா வருடம் அதிகமாகிவருகிறது.



இந்தியா வில் சபரிமலைக்கு சென்று ஐயப்பன் தரிசனம் செய்வோர் நம்நாட்டிலும் எக்கச் சக்கம்.

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு சபரிமலையில் பக்தர்கள் கூட்டம் அலைமோதுகிறது. அதனால் வருமானமும் சென்ற ஆண்டுகளைவிட பலமடங்கு அதிகம்.

இந்த ஆண்டு வருமானம் (டிசம்பர் 9ம் திகதிவரை) மொத்தம் பத்தரை கோடி ரூபாவாம். இந்திய பணமதிப்பின்படிதான் இந்தக் கணக்கு.

சபரிமலையில் படி பூஜை என்றும் நடத்தப்படும். படி பூஜைக்கு கட்டணம் இந்திய பணமதிப்பில் பத்தாயிரத்தி ஒரு ரூபா. எதிர்வரும் 2002ம் ஆண்டு வரை கட்டணம் செலுத்தி பதிவு செய்துவிட்டனர். இனிமேல் பதிவு செய்பவர்களுக்கு அதன்பின்தான் கிடைக்கும்.

இதுபோல உதயஸ்தமன பூஜைக்கு 98ம் ஆண்டு மார்ச்வரை பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான கட்டணம் 750 ரூபாய்.

## அடே பாதகா



அமெரிக்காவில் கொடுமைகளுக்கு குறைச்சல் இல்லை. அங்குள்ள வர்ஜீனியா மாநிலத்தில் 61 வயது பெண்மணியை பாலியல் பலாத்காரம் செய்தான் ஒருவன். அவனுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அவனது பெயர் பீவர்ஸ்.

பலாத்காரத்திற்கு உள்ளான பெண்மணியான லோரி, மூச்சுத்திணறி செத்துப் போனார். அவரது நகைகளையும் எடுத்துக் கொண்டான் பீவர்ஸ். அத்தோடு விட்டானா, அந்தப் பெண்மணியின் காரையும் தீயிட்டுவிட்டுச் சென்றுவிட்டான்.

கொலை செய்தும் மாட்டாமல் ருசி கண்டதால், இன்னொரு பெண்ணிடமும் கைவரிசை காட்டினான். அதனால் மாட்டிக் கொண்டான்.

நம்நாட்டில் மட்டுமல்ல, அமெரிக்காவிலும் வழக்கு விசாரணைகள் மந்தகதியில்தான் நடக்கின்றன. 1990ல் நடைபெற்ற மேற்படி குற்றத்திற்காக, சமீபத்தில்தான் மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

## அமோகமான கூட்டம்



அமெரிக்காவில் விடுதி நடத்தும் ஒருவருக்கு பயங்கரமான நஷ்டம். தொழிலை முன்னேற்ற என்ன செய்யலாம் என்று மூளையைக் குடைந்தார். குடைந்ததில் கிடைத்தது அருமையான யோசனை.

இப்போது, அவரது விடுதியில் கூட்டம் அலைமோதுகிறது. பயங்கரமான இலாபம் பார்க்கிறார். என்ன செய்தார் தெரியுமோ? பெண் பணியாளர்களை சிக்கன உடை சகிதம் வேலைக்கு அமர்த்தியுள்ளார்.

உணவு முதல் மதுபானம் வரை பரிமாறுவது அவர்கள்தான். அந்த விடுதியின் பெயர் ஹீட்டர்ஸ் ரெஸ்டாரண்ட். இதன் கிளைகள் உலகில் பல நாடுகளில் நிறுவப்பட்டுள்ளன. மொத்தம் பத்தாயிரம் கவர்ச்சியான அழகிகள் பணியாற்றுகிறார்கள். ஆண்களுக்கு நிர்வாகம் மற்றும் சமையல் அறையில் மட்டும்தான் வேலையாம்.

## முத்த விபரீதம்

ஆபிரிக்காவை ஆட்டிப்படைக்கும் நோய்களில் ஒன்று தண்டு மூளை கவிகைசவ்வழற்சி நோய். இந்த நோய் பாக்டீரியா மூலமும், வைரசாலும் பரவுகிறதாம்.



முத்தம் பரிமாறுவது மூலமும், ஒருவரது உணவை இன்னொருவர் சாப்பிடுவது மூலமும், இருமல் மற்றும் தும்மல் மூலம் இந்த நோய் ஏனையோருக்கும் பரவக்கூடு மாம். மூளை மற்றும் தண்டு விடத்தைச் சுற்றி வீக்கத்தை ஏற்படுத்தக்கூடிய இந்த நோயை தடுக்க உலக சுகாதார நிறுவனம் தீவிரம் காட்டுகிறது.

70 இலட்சம் தடுப்பூசி மருந்துகளை உலக சுகாதார நிறுவனம் ஆபிரிக்காவுக்கு கொடுக்கப்போகிறது. கடந்த ஆண்டு மட்டும் இந் நோயால் ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் பேர் பாதிக்கப்பட்டனராம்.

இன்னொரு சமாச்சாரம் யாதெனில், டிசம்பர் முதல் ஏப்ரல் மாதம் வரைதான் இந்த நோய் தீவிரமாக பரவுகிறதாம். அந்த மாதங்களில்தான் முத்த பரிமாற்றங்கள் அங்கு அதிகமோ தெரியவில்லை.

## டயானா பொம்மைகள்

டயானா மறைந்த பின்னரும் டயானா புகழ் மங்கவில்லை. மேலும் உயர்ந்து கொண்டு இருக்கிறது.

டயானா பொம்மைகள், டயானா படங்கள், டயானா முத்திரைகள் என்று உலகெங்கும் விற்பனையாகி வருகின்றன. அது தவிர, பனியன்கள், தண்ணீர் அள்ளும் பாத்திரங்கள் என்று பல பொருட்களில் டயானாவின் உருவத்தை பொறித்து விற்பனை செய்கிறார்கள்.


டயானா நினைவு நிதிக்கும் ஏகப்பட்ட நிதி சேர்ந்திருக்கிறது. டயானாவுக்கான பாடல் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. அதன் விற்பனைக்கு வானமே எல்லை என்கிறார்கள்.

இதேவேளை டயானா நினைவு நிதிக்கு உதவுவதாகச் சொல்லி, மக்களை ஏமாற்ற முயலும் வியாபாரிகளும் உள்ளனர். அவர்களிடம் எச்சரிக்கையாக இருக்குமாறு டயானா நினைவு நிதியம் கூறியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



## மர விநோதம்

← பல கிளைகளைக் கொண்ட மொட்டை மரத்தை கச்சிதமாக கமராவுக்குள் அடக்கியிருக்கிறார்கள் என்றா நினைக்கிறீர்கள்?

ஆனால் இது ஒரு ஓவியம். ஒல்லாந்து நாட்டின் தெற்கேயுள்ள டோர்ட்ரெச் என்ற சிறு நகரின் புறத்தே வாழ்ந்த வின்சென்ற் வான் கொஃப் என்ற ஓவியனின் கை வண்ணம் இது. அசத்தல் தானே!

ஓவியர் வான் கொஃப்பின் கதை சோகமானது. சுயமாகவே ஓவியங்களை வரையக் கற்றவர் அவர். ஆனால் எவரும் அவருடைய கைவண்ணங்களைப் பார்த்து இரசிக்கவோ விலை கொடுத்து வாங்கவோ முன்வரவில்லை. இதனால் வறுமையில் வாடினார். வான் கொஃப்பின் தம்பி தியோவும் ஓர் ஓவியன் தான். அவன் பாரிஸ் நகரில் வாழ்ந்தான், தனது அண்ணனுக்கு மாதாமாதம் பணம் அனுப்பி வைத்தான். அந்தப் பணம் முழுவதையும் ஓவியம் வரைவதற்கான உபகரணங்களை வாங்குவதற்கே செலவிட்டார். வெறும் ரொட்டியும் கோப்பியுமே அவர் உணவாக இருந்தது.

வான் கொஃப்பின் ஒரேயொரு ஓவியம் மட்டும் மிகச் சிறு தொகைக்கு விலை போனது. தொடர்ந்து தோல்வியைக் கண்ட இந்த ஓவிய மேதை தனது 24வது வயதில் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்துகொண்டார். வான் கொஃப் மறைந்த பின்னர்தான் அவருடைய ஓவியங்களின் சிறப்பினை கலை உலகம் மதிக்க ஆரம்பித்தது. இந்த ஓவியத்தை பல கோடி ரூபாய்கள் கொடுத்து வாங்க பலர் போட்டி போடுகிறார்கள். ஆனால் விற்க மறுத்துவிட்டார் தம்பி தியோ.

இதுதான் உலகம். வாழும்போது பாராட்டமாட்டார்கள். இறந்த பின்னர் ஏற்றிப் போற்றுவார்கள்.

## முடிக்கு மூலிகை மருந்து



↑ முடிகொட்டுகிறதே, வழுக்கைத் தலையர்களாக மாறிவிட்டோமே என்று கவலைப்படுபவர்களுக்கு ஒரு நற்செய்தி. பிரிட்டனில் லீசெஸ்டர்ஷயரில் உள்ள வீகிராஸ் மிருகக் காட்சி சாலையில் நடைபெற்ற பிரிசோதனை ஒன்றில், வழுக்கையை போக்கும் மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நம் முதாதையர்களில் ஒருவரான சிம்பன்சி குரங்காருக்கு (படத்தில் காணப்படுபவர்) தலை முடி கொட்ட ஆரம்பித்ததாம். மளமளவென்று கொட்டி மைதானம் போலாகிவிட்டது.அதுபற்றி குரங்கார் கவலைப்படாவிட்டாலும் ஜீன் என்னும் பெண்மணி கவலைப்பட்டார். அவர் ஒரு ஆராய்ச்சியாளர். ஆட்டுப்பால், மற்றும் சில கீரைவகைகளைக் கொண்டு மூலிகை கிரீம் தயாரித்து வைத்திருந்தார். அதனை சிம்பன்சி குரங்காரின் தலையில் பூசிப்பார்த்தார்.

பத்து நாட்களுக்கு ஒருதடவை சின்பன்சியை தூங்கவைத்து கிரீம் பூசப்பட்டது. ஒரு மாதத்தில் முன்னேற்றம் தெரிந்தது. படிப்படியாக தலையில் ரோமங்கள் வளர்ந்தன. நன்றாக வளர இன்னும் பலநாட்கள் ஆகும். ஆனால் வெற்றி நிச்சயம் என்கிறார் ஜீன். இது பூரண வெற்றியளித்தால் வழுக்கைத் தலையர்கள் மற்றும் இளநரையர்களுக்கு கைகொடுத்து உதவுமாம். முயற்சி திருவினையாகட்டும். முடிவளரும் குசியில் ஒய்யாரமாய் காணப்படும் இந்தச் சிம்பன்சியாரின் பெயர் ஜம்போ.

## அந்தரத்தில் சுழன்று

↓ அந்தரத்தில் பாய்ந்து கடலில் குதித்து சாகசம் செய்யும் விளையாட்டுக்கள் 19ம் நூற்றாண்டிலேயே ஆரம்பமாகிவிட்டன. துறைமுகங்களில் பலரும் வாய்பிளந்து பாத்திருக்க இச் சாகச காட்சிகள் நடத்தப்படும்.

ஊன்றி எழுந்து அப்படியே அந்தரத்தில் சில தூரம் சென்று, கடலின் நீலத் திரையைக் கிழித்துக் கொண்டு பாய்வது அசத்தல் காட்சி. ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் இந்த சாகச விளையாட்டில் அசத்தினார்கள்.

ருவண்டா நாட்டில் 1907ம் ஆண்டில் ஒரு வீராங்கனை சாகசம் செய்யும் போது எடுக்கப்பட்ட் படம்தான் இது. காற்றைக் கிழித்துக் கொண்டு செல்கிறார். அடுத்தது கடல் திரையை கிழிக்க வேண்டியதுதான்.



## விளையாட்டுப் பொம்மை



← பார்பி பொம்மைகள் உலகப் பிரசித்தம். தரமானவை. நேர்த்தியானவை. அந்தந்த நாடுகளின் நாகரிகத்துக்கு ஏற்ற பொம்மைகளையும் பார்பி நிறுவனம் தயாரித்து விற்பனை செய்வது வழக்கம். சமீபகாலமாக பிரபல நடிகைகளின் உருவங்களையும் பொம்மைகளாகத் தயாரித்து வருகிறது. படத்தில் இருப்பது பிரபல ஹொலிவூட் நடிகை மர்லின் மன்றோ பொம்மை. மர்லின் மன்றோவின் கவர்ச்சிக்கு மயங்காத ரசிகர்கள் அந்தக்காலத்தில் அரிதிலும் அரிது. 'செவன் இயர்' என்ற படத்தில் சுழன்றடிக்கும் காற்றில் பறக்கும் தன் ஆடையை பொத்திப் பிடிப்பார் மர்லின். ரசிகர்களை கிறங்க வைத்த பிரபலமான காட்சி அது. அந்தப் போஸ்தான் மர்லின் பொம்மைக்கும் பயன் படுத்தப்பட்டுள்ளது. (இதனை கொப்பி அடித்து இந்திய சினிமாக்களில் பல நடிகைகள் நடித்துவிட்டனர்) மர்லினை பிரபல புள்ளிகள் பலர் விளையாட்டுப்பொம்மையாக கருதினர். இப்போது மர்லினை உண்மையாகவே விளையாட்டுப் பொம்மையாகச் செய்துவிட்டனர். நல்ல பொருத்தம்!

## தகவல் பெட்டி



## தாத்தாவுக்கு வந்த சோதனை

← 'சண்டே ரைம்ஸ்' புகைப் படப்பிடிப்பாளர் 'கிளிக்' செய்த படம் இது. கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலே உஷார். புலிகள் எந்த ரூபத்தில், எந்த வழியால் வருவர் என்பது தெரியாது! அதனால் கிறிஸ்மஸ் தாத்தாக்களையும், அவர்களது பரிசுப் பொருட்கள் அடங்கிய பைகளையும் சந்தேகக் கண்களால் துருவவேண்டி இருக்கிறது. துரதிஷ்டம்தான்!

இனப்பிரச்சனைக்கு நியாயமான தீர்வுப் பொதியை அரசு முன்வைத்தால், ஏனைய மொழிகளைக் கண்டு கலங்கவேண்டி இருக்காது. எல்லோருக்கும் நிம்மதி!

## கால் அணி

↓ கால் பாதங்களை வெட்டி வைத்ததுபோல வடிவமைத்திருக்கிறார்கள். காலுக்கு அணிவது காலணி. கால் போன்ற இந்தக் காலணிகள் பெயருக்கு மேலும் பொருத்தமானவை.

எகிப்தின் தலைநகரான கெய்ரோவில் இந்த வித்தியாசரக காலணிகள் விற்பனைக்கு வந்துள்ளன. ஏகப்பட்ட கிராக்கி. புதுமை என்றால் பிரியம்தான்!





படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 35

# நடிகரின் மனைவி செய்த உதவி

## பிடியில் இருந்து தப்பிய நடிகர்

இரண்டு எழுத்தில் பெயர் உள்ள நடிகை அவர். தமிழ்த் திரையுலகை கட்டியாண்ட நடிகரால் அறிமுகம் செய்யப்பட்டவர். மிக இளமையான வயதிலேயே நடிக்க வந்துவிட்டார்.

தமிழ்த் திரையுலக மன்னர்களில் ஒருவரான அந்த நடிகருக்கும், அவருடன் நெருக்கமாக இருந்த 'ஜெய' நடிகைக்கு இடையே பிரிவு ஏற்பட்டிருந்த நேரம் அது.

நடிகர் மிக நல்லவர். இரக்க சுபாவம், உதவும் குணம் கொண்ட மாணிக்கம். இருந்தாலும் பெண் நண்பிகள் சகவாசத்தை மட்டும் அவரால் இறுதிவரை விட இயலவில்லை.

'ஜெய' நடிகையின் பிடியில் இருந்து நடிகரை விடுவிக்க நினைத்தார் நடிகரின் மனைவி. புதிதாக நடிக்க வந்த இரண்டெழுத்து நடிகையின் பக்கம் நடிகரின் பார்வை சென்றதை மனைவியும் கவனித்தார்.

'ஜெய' நடிகையின் பிடியில் சிக்கிக்கிடப்பதைவிட, இந்த நடிகையுடன் தன் கணவர் பழகுவது பாதகம் இல்லை என்று கருதினார் மனைவி.

அதனால் நடிகையை தன் வீட்டுக்கு அடிக்கடி அழைத்தார். நடிகர் உள்ளூரில் எந்த இடத்தில் படப்பிடிப்பில் இருந்தாலும் வீட்டில் இருந்துதான் உணவு செல்லும். பலருக்கும் கொடுத்து, தானும் உண்பது நடிகரின் பழக்கம்.

சில சமயங்களில் அந்த நடிகை வேறு படப்பிடிப்பில் இருந்தாலும், நடிகரின் மனைவி போன் செய்வார். உனக்குப் பிடித்த கறிக்குழம்பு அனுப்பியிருக்கிறேன். போய்ச் சாப்பிடு" என்று கூறி கணவர் இருக்கும் இடத்துக்கு நடிகையை அனுப்பிவைப்பார் மனைவி.

இளம் நடிகையும் நடிகருடன் மிக நெருக்கமாகவே இருந்தார். 'ஜெய' நடிகையின் பிரிவை சிறிது மறக்க இந்த நடிகையின் சமீபமும், உபசரணையும் உதவியது.

### புதிய நண்பர்கள்

இடையே பிறமொழிப் படத்தில் நடிக்கச் சென்றார் நடிகை. அங்கு பிரபல தயாரிப்பாளர் ஒருவருடன் ராசியாகிவிட்டார். இளமை கைவசம் இருந்ததால் யாரை வேண்டுமானாலும் தன் வலையில் வீழ்த்தலாம் என்பதை நடிகை உணர்ந்து கொண்டார்.

அதனால் பெரிய நடிகரை அலட்சியம் செய்ய ஆரம்பித்தார். வயதானவர் என்றும், மேலும் அந்தரங்கமாகவும் நடிகர் பற்றி தன் புதிய நண்பர்களுடன் பேசத் தலைப்பட்டார்.

இந்த விடயம் நடிகரின் காதில் எட்டியது. நடிகையை அறிமுகம் செய்யும்போது, தங்கள் நிறுவனத்தின் அனுமதி இல்லாமல், வேறு படங்களில் நடிக்கக்கூடாது என்று பத்திரத்தில் கையெழுத்து வாங்கிவைத்திருந்தனர். நடிகரின் சொந்தப் பட நிறுவனத்தின் ஒப்பந்த நடிகையாகவே அவர் சில வருடங்கள் இருக்க வேண்டும்.

நடிகை வரம்புமீறிப் போவதை அறிந்த நடிகர், நடிகையை வரவழைத்தார்.

ஒப்பந்தப் பத்திரத்தைத் தூக்கிப்போட்டார். நடிகை மிரண்டு போனார். பூட்டிய அறைக்குள் என்ன நடந்ததோ, நடிகரை சமாதானப்படுத்திவிட்டார் நடிகை. அதன்பின்னர் நடிகரின் ஓய்வுக்கால பங்களாவிற்கு நடிகை அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்தார்.

பெரிய நடிகர் சினிமாவில் அதிக அக்கறைகாட்ட முடியாத சூழல்கள் ஏற்பட்டன. அது நடிகைக்கு ரொம்ப வசதியாகப் போய்விட்டது.

### காந்த நடிகர்

அப்போது அறிமுகமாகி பிரபலமாகிக் கொண்டிருந்த 'காந்த' நடிகரை, காந்தமாகக் கவர்ந்தார் நடிகை.

திடீர்ப் பிரபலம், குவிந்த பணம் என்று புதிய சூழ்நிலையால் கலங்கிப் போயிருந்தார் காந்த நடிகர். பல நடிகைகள் அவரை தம் பக்கம் இழுத்தனர். தங்கள் பிடியில் வைத்திருக்க எத்தனையோ முயற்சிகள் செய்தனர்.

பரஸ்பர தேவைகளை பரிமாறிக் கொள்வதோடு அந்த நடிகைகளுடனான உறவுக்கு வரையறை போட்டுவிடுவார் 'காந்த' நடிகர். அந்த இரண்டெழுத்து நடிகையின் வீட்டிற்கு ஒரு நாள் சென்றுவந்தார். அந்த நடிகை என்ன செய்தாரோ, காந்த நடிகர் அப்படியே ஒட்டிக்கொண்டார்.

அவர்களின் உறவு கல்யாணம் வரை செல்வதாக இருந்தது. விஷயம் பெரிய நடிகரின் காதுக்குப் போனது. நடிகருக்கு புத்திகூறி திருமணம் நடக்காமல் தடுத்துவிட்டார். தப்பித்தார் 'காந்த' நடிகர்.

அதன்பின்னர் தொழிலதிபர் ஒருவர் நடிகையின் கவனிப்பில் மயங்கி, அவரைத் திருமணம் செய்து கொண்டார். வெளிநாடு சென்ற நடிகை அங்கும் கூத்து அடித்தார்.

இப்போது தமிழ்நாடு திரும்பி அரசியல் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார். 'ஜெய' நடிகையைவிட பெரிய நடிகருக்கு தன்மேல் தான் பிரியம் அதிகம் என்று மலரும் நினைவுகளைக் கூறிவருகிறார்.

### மந்திரக் குண்டு

நடிகை மந்த்ராவை குண்டு நடிகை என்று சில தமிழகப் பத்திரிகைகள் கேலி செய்தன. பொறுப்பாரா மந்த்ரா. பொங்கி எழுந்து அவர் கொடுத்துள்ள வாக்கு மூலம் இதுதான்:

"நான் ஒன்றும் குண்டு நடிகை இல்லை. என் இடுப்பு அளவு இருபத்தி எட்டுத்தான்" என்று போடாகப் போட்டிருக்கிறார். இடுப்பு அளவை மட்டும் வைத்து தீர்மானிக்க முடியுமா என்ன?

### 'நிலாவே வா'

'சூரியன்', 'காதலன்', 'ஜென்டில்மேன்', 'ரட்சகன்' படங்களைத் தயாரித்த மீசைக்காரர்" குஞ்சுமோன். அவர் அடுத்து தயாரிக்கும் படங்களில் ஒன்றுக்கு 'நிலாவே வா' என்று பெயர் சூட்டியுள்ளார்.

படத்தின் நாயகன் விஜய், நாயகியாக இலண்டன் அழகி ஒருத்தி இறக்குமதியாகிறார். மற்றொரு நாயகி ரக்சனா.

மணிவண்ணன், ரகுவரன், மன்சூர் அலிகான், சார்லி, ஜெயகணேஷ், வினுசக்கரவர்த்தி ஆகியோரும் நடிக்கின்றனர். கதை, திரைக்கதை, இயக்கம் ஏ.வெங்கடேசன். இயக்குநர் ஷங்கரிடம் உதவியாளராக இருந்தவர். பாடல்கள் வைரமுத்து. இசை: வித்யாசாகர்.



நாகார்ஜுன்
படம்: அன்னமாச்சார்யா

### மலையாளக் கம...

மலையாளப் படம் ஒன்றை கமல் இயக்...
ளார். இப்படத்தில் பின்னணிப் பா...
எஸ்.பி.பாலசுப்பிரமணியம் நடிக்கிறார்.
படங்களில் நடிப்பில் கலக்கியுள்ள எஸ்...
மலையாளத்தில் நடிக்கும் முதல் படம்
தான். நடிப்பது ஆத்ம திருப்தி தருகிற...
சகல இந்திய மொழிகளிலும் நடிக்கவேண்...
என்று விரும்புகிறார் எஸ்.பி.பி.

கமல் என்றதும் நடிகர் கமல் என்று நினை...
விடாதீர்கள். இவர் மலையாள பட இயக்...
கமல். பல வெற்றிப் படங்களை இயக்கி...

### பாடகர் ஜ...

நாகார்ஜுன் நடித்து தெலுங்கில் ...
விழாக் கண்டுள்ள படம் அன்னமாச்...
இதனை அதே பெயரில், தமிழில்
மாற்றி திரையிடப்போகிறார்கள்.
நாகார்ஜுனுக்கு கஸ்தூரியும்
கிருஷ்ணனும் முக்கிய ஜோ...
ரோஜாவும் நடித்துள்ளார்.
பாடகர் ஒருவரின் உள்...
கதையை வைத்து உருவ...
பட்டபடமாம். அது என்...
ஒன்றுக்கு மேற்பட்ட ஜோ...
என்றால் நாகார்ஜு...
கச்சிதமாகப் பொ...
விடுகிறது.



மன்சூர் அலிகான்-ரேவதி (துணை நடிகை)
படம்: மறு மலர்ச்சி



ஜூஹி சாவ்லா
படம்: மழை வரப்போகுது

மனிஷா கொய்ரா...

"வண்ணாத்திப் பூச்சி
வயசென்ன ஆச்சு
உள்ளூரு முழுக்க
ஒன்னப் பத்திப் ...
என்னமோ இரு...
னைக்கும் கிறு...

முகப்...

நாகா...

பட...

### காதோடு சொல்லுகிறோம்

பல வெற்றிப் படங்களை இயக்கியவர் அந்த இயக்குநர். இப்போது கஷ்ட நிலையில் இருக்கிறார். மகேந்திரமான அந்த இயக்குநருக்கு தன் பெயரில் குட்டியை இணைத்து வைத்திருக்கும் நடிகைதான் உதவுகிறார். நடிகைக்கு திருமணமான பின்னரும் இயக்குநருக்கு உதவி செய்வதை நிறுத்தவில்லை. புதுப்பட வாய்ப்பும் சமீபத்தில் வாங்கிக்கொடுத்திருக்கிறார்.

சூப்பர் நடிகரை 'காதலா காதலா' என்று அசத்திவிட்டாராம் சௌந்தர்யமான நடிகை. மீன் நடிகை மறுத்தபோது, சௌந்தர்யமான நடிகை பொறுத்த நேரத்தில் கைகொடுத்தார். அதனால் நடிகரும் நடிகைமீது பிரியமாகப் பழகினார். 'நான் உங்கள் ரசிகை' என்று நடிகரையே சுற்றிவந்த நடிகை, நடிகரே எதிர்பாராத நேரத்தில் 'இச்' கொடுத்து அசத்திவிட்டார். வழக்கமாக நடிகர்தான் 'இச்' கொடுத்து நடிகைகளை திணறடித்திருக்கிறார். அவருக்கே 'இச்' காட்டிவிட்டார் நடிகை.

'கௌ' நடிகையின் திருமணம் தாமதமாவதற்கு இந்தி நடிகர் ஒருவர்தான் காரணமாம். அவரை மறப்பதா? புதிய உறவை பிடித்துக்கொண்டு அமெரிக்காவுக்குப் பறப்பதா? என்று தடுமாற்றத்தில் இருக்கிறார் நடிகை.

தெலுங்கிலும், இந்தியிலும் இயக்குநர்களுடன் தாராளமாக நடந்து கொள்வாராம் 'ரம்ப' நடிகை. தமிழில் மட்டும் 'சுந்தர' இயக்குநருடன்தான் ஒட்டியிருந்தார். இப்போது அதுவும் இல்லை. பல இயக்குநர்கள் பெருமூச்சு விடுகிறார்கள். கால் அழகியின் கடைக்கண் பார்வைக்காக ஏங்குகிறார்கள்.

தன் பெயரில் 'பிணி' உள்ள நடிகை அவர். சில வருடங்களுக்கு முன்னர் பிஸி நடிகை. ரஜினிக்கும் ஜோடியாக நடித்தவர். பின்னர் மார்க்கெட் டல்லாகி 'அந்த' தொழிலில் இறங்கி மாட்டிக்கொண்டார். இடையே ஆளையே காணவில்லை. இப்போது மீண்டும் கோடம்பாக்க வட்டாரத்தில் காணப்படுகிறார்.

புதுக் ஹீரோக்களுடன் நடிப்பது என்றால் விருதின் பெயர் பெயர் கொண்ட நடிகைக்கு ஒரே குஷியாம் இளம் கதாநாயகர்களுடன் நடிக்க ஒப்பந்தம் செய்யச் சென்றால் உடனடியாக ஓ.கே சொல்லிவிடுகிறாராம். விருதின் பெயர் கொண்ட இந்த நடிகையின் பெயரில் தேவலோகத்தில் ஒரு அழகியும் இருப்பதாக கதைகள் உண்டு.

### தினமும் கவனி

ராமராஜனுக்கும் சங்கீதாவுக்கும் இடையே இருந்த உறவு சமீபத்தில் கத்தரிக்கப்பட்டது பார்த்திபனுக்கு பயங்கர சந்தோசம்.

ராமராஜனுக்கு இன்னொரு நட்பு கிடைத்திருக்கிறது. அது சுவாதி. விக்னேஷ் கல்யாணம் செய்து கொண்டு மனைவியுடன் பொழுதைக் கழிப்பதால், சுவாதிக்கும் பொழுது போக வேண்டும் அல்லவா. ராமராஜனின் அலுவலகத்திற்கு தினமும் வந்து போகிறாராம்.

படப்பிடிப்பு இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன அலுவலகத்தில் ஆஜராகிவிடுகிறார் சுவாதி. 'அண்ணன்' படத்தில் ராமராஜனுக்கு ஜோடி சுவாதிதான்.

மனோஜ் பாரதிராஜாவின் ...
படம்: தாஜ்மஹால்

### ஜேம்ஸ் பொண்ட்

ஜேம்ஸ் பொண்ட் பட இரசிகர்களுக்கு இனிப்பான செய்தி. 'டுமாரோ நெவர் டைஸ்' என்ற படம் ஜெர்மனியில் 18.12.97. அன்று வெளியிடப்பட்டுள்ளது.

பியர்ஸ் புரோஸ்னன் கதாநாயகனாக நடிக்கிறார். இது அவரது இரண்டாவது ஜேம்ஸ் பொண்ட் படம். கதாநாயகியாக சீன நடிகை மிக்கைலியென் நடிக்கிறார். ஜேம்ஸ் பொண்டை மயக்கும் மங்கை அவர்தான்.



படிப்பகம்

www.padippakam.com

## பெயரோ பெயர்

சமீபகாலங்களாக படங்களுக்கு சூட்டப்படும் தமிழ்ப் பெயர்கள் தமாஷாக இருப்பது தெரிந்ததே. எல்லாவற்றையும் தூக்கிச் சாப்பிடுவது போல ஒரு படத்திற்கு பெயர் வைத்துள்ளனர்.

படத்தின் பெயர் என்ன தெரியுங்களா? 'ஏங்க.. என்னை கல்யாணம் செய்துக்குங்க'. தெலுங்கில் சுமன் கதாநாயகனாக நடித்துள்ள படம்தான் தமிழில் மொழிமாற்றப்பட்டு, அந்தப் பெயரில் திரைக்குவருகிறது. சுமனுக்கு ஜோடிகள் ரம்பாவும், மந்த்ராவும்.

## ஜூஹியின் ஹீரோக்கள்

மும்பாயில் இருந்து இன்னொரு கவர்ச்சிமழை தமிழ்ப் பட உலகில் கொட்டப் போகிறது. அதுதான் ஜூஹிசாவ்லா. பிரபு தேவாவுடன் அவர் நடிக்க உள்ள படத்தின் பெயரும் 'மழைவரப்போகுது'.

ஜெய்மேத்தா என்ற தொழில் அதிபரை லவ்வுகிறார் ஜூஹி. அவரைத்தான் கல்யாணம் செய்யப்போவதாக தற்போதைய முடிவாம்.

ஜெய்மேத்தாவைக் காதலித்தாலும் சக ஹீரோக்களையும் குறும்புடன் விபரிக்க அஞ்சவில்லை. ஜூஹி சாவ்லா கூறியுள்ள விபரிப்புக்கள் கீழேதரப்படுகின்றன.

நம்பக்கூடிய நண்பர் அமீர்கான். அவரிடம் இரகசியம் பத்திரமாக இருக்கும். சஞ்சய்தத் குழப்பமான ஆள். அவருடன் பழகினால் நமக்கும் குழப்பம் வரும். அனில் கபூர் ரொம்ப பேராசைக்காரர். பெண்கள் மிக விரும்புவது சற்று முரட்டுத்தனமான ஜாக்கிஷெராப்பை. இவைதான் ஜூஹியின் விபரிப்புக்கள்.



## மினி சினி

* பிரபு நடிக்கும் 'பொன்மனம்' படத்தில் இரண்டு கதாநாயகிகளில் ஒருவராக நடித்து வரும் பிரியா ராமன், சிவாஜி புரடக்ஷன்ஸ் நிறுவனம் தயாரிக்கும் 'வாய்ஜாலம்' படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார்.
* சந்திரசுர் சிங்-தபு நடித்த 'மாச்சிஸ்' என்ற இந்திப்படம் தமிழில் 'தீப்பொறி' என்ற பெயரில் மொழிமாற்றப்படுகிறது. சென்ற ஆண்டின் சிறந்த நடிகைக்கான தேசிய விருது இப்படத்தில் நடித்தமைக்காகத்தான் தபுவுக்குக் கிடைத்தது.
* முரளி-சுவலட்சுமி நடிக்கும் 'தினந்தோறும்' படத்தை இயக்குபவர் புதிய இயக்குநர் நாகராஜ். இவர் அகத்தியனிடமும், நாசரிடமும் உதவி இயக்குநராகச் சில காலம் பணிபுரிந்தவர்.
* 'பூவே பூச்சூடவா', 'பூவிழி வாசலிலே' உட்பட பல வெற்றிப் படங்களை இயக்கிய பாசில், மலையாளத்தில் இயக்கிய படமொன்று 'முரட்டுக் காதல்' என்ற பெயரில் தமிழில் மொழி மாற்றப்படுகிறது. இதில் வினீத்-ஷோபனா நடித்துள்ளனர்.
* 'எட்டுப்பட்டி ராசா', 'பிஸ்தா' போன்ற படங்களைத் தயாரித்த பிரமிட் நடராஜன், அடுத்து வஸந்த் இயக்கத்தில் அர்ஜுன் நடிக்கும் 'பூப்பூக்கும் ஓசை' என்ற படத்தைத் தயாரிக்கவுள்ளார்.
* அஜித்குமார்-சிம்ரான் நடிக்கும் 'அவள் வருவாளா' என்ற படத்தை ராஜ்கபூர் இயக்குகிறார். இது தெலுங்கில் ரமேஷ்-மகேஸ்வரி நடித்து வெற்றி பெற்ற 'பெள்ளி' என்ற படத்தின் தமிழ்ப்பதிப்பாகும்.
* விஜயகுமாரின் மகன் அருண்குமார், சிவகுமாரின் மகன் சூர்யா ஆகியோரைத் தொடர்ந்து ரவிச்சந்திரனின் மகன் அம்சவர்த்தனும் நடிகராகவுள்ளார். அம்சவர்த்தன் கதாநாயகனாக நடிக்கும் படத்தை வி.சி.குகநாதன் இயக்கவுள்ளார்.
* இயக்குநர் இமயம் கே.பாலச்சந்தரின் 'காதல் மன்னன்' படத்தை இயக்குபவர் சரண். இவர் முன்னர் 'விகடன்' பத்திரிகை நிறுவனத்தின் வெளியீடுகளில் ஒன்றான 'ஜூனியர் போஸ்ட்' பத்திரிகையில் கேலிச்சித்திரங்கள் வரைந்தவர்.
* 'சூர்யவம்சம்' வெற்றிக்குப் பின் விக்ரமன் அடுத்து இயக்கும் படத்திற்கு 'உன்னிடத்தில் நான்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தில் கார்த்திக் கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.
* 'ஆஹா' படத்தில் கதாநாயகியாக அறிமுகமாகியிருக்கும் சுலேகாவின் உண்மையான பெயர் தேஜாலி. மராட்டிய பெண்ணான இவர் பல இந்தித் தொலைக்காட்சித் தொடர்களில் நடித்திருக்கிறார்.

## ஷில்பா ரசிகர்கள்

மிஸ்டர் ரோமியோவில் நடித்த ஷில்பா ஷெட்டியை மறந்திருக்க மாட்டீர்கள். தெலுங்கில் இவர் நடித்தபோது இரண்டு தெலுங்கு நடிகர்கள் மயங்கினார்கள்.

ஒருவர் நாகார்ஜுனா, இன்னொருவர் வெங்கடேஷ். ஷில்பாவின் நீண்ட கால்களின் அழகில் சொக்கிப் போனார்கள். படப்பிடிப்பு முடிந்து மும்பாய் புறப்பட இருந்த ஷில்பாவை மேலும் சில நாட்கள் தங்கச் சொன்னார்களாம். ஷில்பா அவர்கள் ஆசைக்கு வளைந்து கொடுக்கவில்லை.

ஆனால், பெங்களூரைச் சேர்ந்த ஒரு இளைஞருடன் சில நாட்கள் சென்னையில் தங்கி இருந்தாராம் ஷில்பா. யார் அந்த இளைஞர் என்பது மர்மமாக உள்ளது.

## 'தகுதி பெறு காதலா'

தினம்தோறும் எத்தனையோ பட்டதாரிகள் வேலைக்காக அலைந்துகொண்டுதான் இருக்கிறார்கள். ஆனாலும் தொடர்ந்து படிப்பவர்கள் குறைவதில்லை. தினம்தோறும் எத்தனையோ காதல் ஜோடிகள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். ஆனாலும் காதலித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். தினம்தோறும் எத்தனையோ பேர் இறந்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனாலும் தினமும் பிறப்பு நடந்து கொண்டுதான் இருக்கிறது.

என்ன ஒரே தத்துவமாக இருக்கிறது? என்று பார்க்கிறீர்களா. 'தினம்தோறும்' படத்தின் கதைக்கான அத்திவாரம் அதுதானாம். முரளி, சுவலட்சுமி, மணிவண்ணன் மலேசியா வாசுதேவன், வடிவுக்கரசி ஆகியோர் நடித்துவருகின்றனர்.

முரளி சுவலட்சுமியை காதலிக்கிறார். காதலுக்கு இரு வீட்டிலும் எதிர்ப்பு. "நான் உனக்காகக் காத்திருப்பேன். என் பெற்றோரிடம் சம்மதம் வாங்கப் போராடுவேன். நீ உன் தகுதியை உயர்த்திக் கொண்டு என் வீட்டாரை சம்மதிக்க வை" என்று கூறுகிறாராம் சுவலட்சுமி. முரளி காதலுக்காக போராடி வெல்கிறாரா? இல்லையா? என்பதை வெள்ளித்திரையில் அல்லது விடியோத் திரையில்தான் காணவேண்டும்.

## லியோனியின் கொள்கை

சினிமாவை கிண்டல் செய்த திண்டுக்கல் லியோனி சினிமாவில் நடித்தது சரியா? இக் கேள்விக்கு லியோனியின் பதில்;

"இன்றைய சினிமாவின் போக்கை நான் கிண்டல் செய்வதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் சினிமாவைத்திட்டி நான் புகழ்பெறவில்லை. சினிமாவில் நடிக்கும் எண்ணமும் எனக்கு இல்லை.

கங்கா கௌரி படத்தின் தயாரிப்பாளரும், இயக்குநரும் என்னை ரொம்பவும் வற்புறுத்தியதால் நடித்தேன். சமுதாயத்துக்கு பயன்படக் கூடிய பாத்திரங்கள் கிடைத்தால் தொடர்ந்து நடிக்கத்தயார்" என்கிறார் லியோனி.

'கங்கா கௌரி' படத்தின் பின்னர் லியோனிக்கு பெரிய வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. பட்டிமன்ற அரசனை, வெள்ளித்திரை வியக்கவில்லை.

## எப்போதும்தான்

காதல் மன்னன் ஜெமினியின் மகள் இந்தி நடிகை ரேகா. அமிதாப் பச்சனை காதலித்தவர். இருவரும் இன்றுவரை காதலிக்கின்றனர். அமிதாப்புக்கு திருமணமாகிய பின்னரும் காதல் தடைப்படவில்லை. ரேகா பல காதலர்களை கண்டபின்பும் அமிதாப் என்றால் உருகிவிடுகிறார்.

வயதானாலும் இன்னமும் இளம் ஹீரோக்களுடன் கிசு கிசுக்கப்படும் அளவுக்கு இளமையோடு இருக்கிறார் ரேகா. ஒளிவு மறைவில்லாமல் ரேகா சொல்வது: "நான் அமிதாப் பச்சன் என்ற நடிகரை எப்போதும் நேசிக்கிறேன்"

## மனீஷா ஆர்வம்

நானாபட்டேகருடன் காதல், மது மயக்கத்தில் உளறல் என்று சகல தப்புக் காரியங்களையும் மூட்டைகட்டி வீசிவிட்டாராம் மனிஷா.

'பம்பாய்' படத்தின் பின்னர் இந்தியில் முதலிடத்தை நெருங்கியவர் மனிஷா. மனதை அலைபாயவிட்டதால் வாய்ப்பும் போச்சு. இப்போது முதலிடத்தை பிடிக்கும் வேகத்தில் நடிப்பில் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளார்.

முதல் இடத்தை கஜோல், தபு ஆகியோர் கைப்பற்றப் போராடுகிறார்கள். பாவம், மனிஷா தாமதித்துவிட்டார்.





## சாஸ்திரி சிவாஜி

சத்யராஜ் நடிக்கும் புதிய படம் 'வந்தாங்க ஜெயிச்சாங்க'. குருதனபால் இயக்கும் இப் படத்தில் சிவாஜியை நடிக்க வைக்க முயற்சி நடக்கின்றது.

வேத மந்திரங்களைக் கற்றுத் தேர்ந்த சாஸ்திரிகளாக சிவாஜியை நடிக்க வைக்க எண்ணமாம். சிவாஜியுடன் 'ஜல்லிக்கட்டு', 'முத்துக்கள் மூன்று', 'புதியவானம்' ஆகிய படங்களில் சத்யராஜ் இணைந்து நடித்திருக்கிறார். 'முத்துக்கள் மூன்று' தவிர மற்றவை இரண்டும் வெற்றிப் படங்கள்.

## சுஷ்மிதா என் காதலி

'ரட்சகன்' படத்தில் முன்னாள் உலக அழகி சுஷ்மிதா சென்னுடன் இணைந்து நடித்தார் நாகார்ஜுன். இருவரும் கமெராவின் பின்னாலும் நெருக்கமாகிவிட்டனர்.

படத்தில் உதட்டோடு உதடு சேரும் முத்தக்காட்சிகளில் சுஷ்மிதாவும் நாகார்ஜுனும் ஈடுபாட்டோடு நடித்திருக்கின்றனர். அது சினிமா முத்தமல்ல அதையும் தாண்டி உறுதியானது.

'ரட்சகன்' படத்தின் பின்னரும் நட்பு தொடர்வதாக கிசுகிசுக்கள் பரவியுள்ளன. இதுபற்றி நாகார்ஜுன் சொல்லியிருப்பது யாதெனில் "சுஷ்மிதா என் காதலிதான். தாயைக்கூடத்தான் காதலிக்கிறோம். காதல் என்றால் அன்பு. காதலி என்றால் அன்புக்கு உரியவர் என்று அர்த்தம். சுஷ்மிதா என் அன்புக்குரியவள். அதற்கு மேல் ஒன்றுமில்லை. கற்பனை செய்யாதீர்கள் ப்ளீஸ்" என்று கூறியுள்ளார் நாகார்ஜுன்.

கைகோர்த்துத் திரிவதும், நட்சத்திர விடுதியின் மங்கல் ஒளியில் ஒருவர் மீது ஒருவர் சாய்வதும் கற்பனையா? என்று பதிலடி கொடுத்திருக்கிறது ஒரு மும்பாய் பத்திரிகை.

## மாபெரும் 'தாஜ்மஹால்' புதிய நாயகன்

பாரதிராஜாவின் மகன் மனோஜ். அவர் முதன் முதலாக நடிக்கும் படம் சாதாரணப் படமல்ல. பிரமாண்டமான படம்.

படத்தின் பெயர் 'தாஜ்மஹால்'. மகனை இயக்கப்போகிறார் பாரதிராஜா படத்தின் வசனம் யார் தெரியுமா? மணிரத்னம். படத்தின் கதையை எழுதியிருப்பவர் 'மின்சாரக்கனவு' இயக்குநர் ராஜீவ் மேனன். இசை: ஏ.ஆர்.ரகுமான். கதாநாயகி இன்னமும் முடிவாகவில்லை.

பாரிய பொருட்செலவில் மனோஜின் இமேஜை தூக்கி நிறுத்தப் போகிறார் பாரதிராஜா.

இன்றுள்ள இளம் ஹீரோக்களுக்கு சரியான போட்டி, இளம் ரசிகைகளின் கனவுக் கன்னன் ரெடி. பராக் பராக். மனோஜ் படம் இங்கு பிரசுரமாகியுள்ளது. ஆள் எப்படி? அம்சம்தானே!



படிப்பகம்

www.padippakam.com

# திடுக்கிட வைக்கும் உண்மைகள்!



'பெண்ணிடம் தோற்றமும் வளர்ச்சியும்' என்றொரு நூல் அண்மையில் இந்தியாவில் வெளியாகியுள்ளது. சென்ற நூற்றாண்டு வரை இந்தியப் பெண்கள் எவ்வளவு மோசமாக நடத்தப்பட்டு வந்தனர் என்பதை விளக்கியுள்ளது இந்த நூல்.

ஒரு பக்கம் பெண்களுக்குக் கற்பு நெறியை வலியுறுத்திக்கொண்டே, இன்னொரு பக்கம் தேவதாசி முறையை அமைத்து, ஆண்கள் தங்கள் நியாயமற்ற இச்சைகளைத் தீர்த்துக் கொண்டனர்.

இந்தியாவின் முதல் சனத்தொகை கணக்கெடுப்பு 1871ல் எடுக்கப்பட்டது. அப்பொழுது கல்வி அறிவு பெற்ற பெண்கள் 0.5 சதவீதமே இருந்தனர். அதாவது நூற்றுக்கு ஒருவர்கூட இல்லை.

பின்னர் 1891ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்திய சனத்தொகை 29 கோடிப்பேர். இதில் 14 கோடிப்பேர் பெண்கள். அதில் இரண்டரைக் கோடிப் பெண்கள் விதவைகள். இதில் வயதான விதவைகளைச் சேர்க்கவில்லை. குழந்தைத் திருமணங்களால் ஏற்பட்ட கொடுமை இது! இதில்–

1 வயது விதவை – 597 பேர்
1–2 வயது விதவை – 492 பேர்
2–3 வயது விதவை– 1257 பேர்
3–4 வயது விதவை– 2827 பேர்

இப்படிப் போகிறது இந்தக் கணக்கு. எவ்வளவு கேவலம். ஒரு ஆண் பல பெண்களை மணக்கும் பழக்கமும் இருந்தது. ஒரு குடும்பத்தில் திருமணமாகிச் செல்லும் பெண் எந்தவகையிலாவது தனது கணவனது, பிற உறவினர்களது விருப்பத்திற்கு மாறாக நடந்தால், கணவன் தன் விருப்பத்திற்கு இணங்க, வேறு பெண்களைத் திருமணம் செய்து கொள்ள முடியும். பல கணவன்மார்கள் தங்கள் மலட்டுத்தனத்தைப் பெண் மீது சுமத்தி, வேறு பெண்களை மணம் புரிவர்.

கணவனை இழந்த பெண்ணை, காப்பாற்றும் பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள, அவளையும் கணவனுடன் உடன்கட்டை ஏற்றிக் கொன்றனர்.

உடன்கட்டை ஏறுபவள் தான் உத்தமி என்றொரு கருத்தை சமூகத்தில் இவர்கள் பரப்பிவைத்து, அதன் மூலம் பெண்ணை இதற்கு நிர்ப்பந்தப்படுத்தி வைத்திருந்தனர். இது போன்ற திடுக்கிட வைக்கும் உண்மைகளை அந்த நூல் தந்துள்ளது.

# வளரும் குழந்தை



கருமுட்டையும், விந்தும் இணைவதைத்தான் கருவுறுதல் என்கிறோம்.

கருவுறுதல் நடைபெற்ற இரண்டு, மூன்று மணி நேரத்திற்குப் பிறகு, இந்தக் கரு முட்டையானது இரண்டாகப் பிரிகிறது. இரண்டு நான்காகின்றது. நான்கு எட்டாகின்றது. 3 நாட்களுக்குப் பிறகு 32 செல்லாகின்றது. இந்த நிகழ்ச்சி கருப்பையில் நடைபெறுகின்றது.

28 நாட்களுக்குப் பிறகு முக்கிய உறுப்புக்களான கருவின் இதயம், மூளை, தண்டு வடம், நரம்பு மண்டலம் தோன்ற ஆரம்பிக்கின்றது. இப்போது கருவின் நீளம் 5 மில்லி மீட்டர் இருக்கும்.

3 மாதங்களுக்குப் பிறகு கருவானது மனித வடிவத்திற்கு வந்து விடும். ஆண், பெண் எனப் பிரித்துணர முடியும். தலையின் இருபக்கமும் கண்கள் காணப்படும். சிறிய விரல்கள் காணப்படும். இப்போது கரு 4 சென்டி மீட்டர் இருக்கும்.

5 மாதங்களுக்குப் பிறகு மூக்கு, வாய், கண், நன்கு வளர்ச்சியடைந்து காணப்படும். இப்போது கருவானது 25சென்டி மீட்டர் நீளமாக இருக்கும்.

266 நாட்களுக்குப் பிறகு கரு முழுவதுமாக வளர்ச்சியடைந்து காணப்படும்.

குழந்தை பிறந்த சில நிமிடத்திற்குப் பிறகு வர்ணங்களைப் பார்க்கும். வெளிச்சத்தை உணரும். தொட்டால் உணர்ந்து கொள்ளும் தன்மை ஏற்படும்.

# சுகமான தூக்கம்



தூக்கமில்லாமல் தவித்துத் தன்னிடம் வருபவர்களுக்கு இப்படி ஒரு வைத்தியம் செய்தார் டாக்டர் ஒருவர்.

தினமும் இரவு அவர்களது கவலைகள் எல்லாவற்றையும் ஒன்றன்பின் ஒன்றாக ஒரு பேப்பரில் எழுதி முடித்துவிட்டுப் படுக்கச் சொன்னார். டாக்டரின் இந்த ஆலோசனைக்கு நல்ல பலனும் கிடைத்தது.

மனதிலுள்ள எல்லாவற்றையும் கொட்டி விட்டோம் என்ற ஒரு சின்ன திருப்தியே இதற்குக் காரணம்.

உங்கள் சகாவிடம் நீங்கள் பகிர்ந்து கொண்ட கவலைகளை அவர் வெளியில் சொல்லி விடுவாரோ? என பயப்படுவதை விட பேப்பரில் எழுதி வைத்து விட்டு நிம்மதியாகத் தூங்க முயற்சித்துத்தான் பாருங்களேன்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

வாரம் ஒரு பட்டுச் சேலை CX

பெயர்:.....................
முகவரி:.....................
.....................
தொழில்:.....................
கையொப்பம்:.....................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 03-01-1998

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 15

புவனா

பக்கிங்ஹாம் மாளிகைக்கு டயானா சென்றடைந்தபோது இரவாகிவிட்டது. தன்னை வரவேற்க சாள்ஸ் காத்திருப்பார் என்று எதிர்பார்த்தவளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.



எல்லாமே புதுமுகங்கள். தனித்த தீவு ஒன்றில் தன்னந்தனியனாய் விடப்பட்டது போன்று இருந்தது.

அவள் கண்கள் சாள்ஸைத் தேடி அலைந்தன. தேடித் தேடி கண்கள் களைத்துப் போனதுதான் பலன். சாள்ஸ்சின் தலைக்கறுப்பைக் கூட காணவில்லை.

மாளிகைக்குள் கால் எடுத்து வைத்தவுடனேயே முதல் ஏமாற்றம் அதுதான்.

அந்த முதல் ஏமாற்றம் முற்றும் ஏமாற்றமாய் மாறப் போகிறது என்பதை அப்போது மட்டும் அறியும் சக்தி இருந்திருந்தால் டயானா திரும்பி ஓடியிருப்பாள்.

டயானாவுக்கு ஒதுக்கப்பட்ட அறை ஆடம்பரமாக இருந்தது. பிரமாண்டமாக இருந்தது. அந்த ஆடம்பரமும், பிரமாண்டமும் டயானாவை பயமுறுத்தின.

என் தகுதிக்கு மீறி ஆசைப்பட்டு விட்டேனோ? என்றுகூட நினைத்தாள்.

இரவு தனிமையில் தூங்க என்னவோ போலிருந்தது. புதிய இடம் என்பதால் தூக்கம் தழுவ மறுத்தது.

## தொலைபேசிக் காதல்

நள்ளிரவை நெருங்கும்போது டயானாவின் அறையில் இருந்த தொலைபேசி சிணுங்கியது.

'யார் இந்த நேரத்தில்?' டயானாவுக்கு இலேசான ஆச்சரியம். மறுமுனையில் இளவரசர் சாள்ஸ்.

அவர் குரலைக் கேட்டதும், திசை தெரியாத காட்டில் தெரிந்த குரல் ஒன்றை கேட்டதுபோல இருந்தது. ஓ..வென்று அழவேண்டும் போன்றும் இருந்தது.

டயானா மௌனமாக இருந்தமையால் மறுமுனையில் சாள்ஸ்: "கோபிக்காதே டியர்,. உன்னை வரவேற்க வருவதற்கு எப்படியெல்லாம் துடித்தேன் தெரியுமா? உன்னை உன் அறையிலேயே வந்து சந்திக்க எத்தனை ஆசை தெரியுமா? சந்தித்தால் என்னாகும் தெரியுமா? ஆனால் முடியாதே!"

'ஏன்?' என்று கேட்கத் துடித்தாள், கேட்கவில்லை. சாள்ஸ் சொல்லட்டும் என அமைதி காத்தாள்.

"சம்பிரதாயப்படி இனி திருமணத்தின் பின்னர்தான் எங்களுக்கு தனிமை கிட்டும். அதுவரை சந்திக்கக்கூட முடியாது."

'கண்டறியாத சம்பிரதாயம்' என்று வாய்வரை வந்துவிட்டதை அடக்கிக்கொண்டாள் டயானா.

"கோபமா டியர். பச்சை நிற மிடி உனக்கு எத்தனை அழகாக இருந்தது தெரியுமா? எப்படித் தெரியும் என்றா நினைக்கிறாய்? நேரில் சந்திக்கத்தானே தடை. நீ மாளிகைக்கு வந்தது முதல் உன்னை இரகசியமாக கண்காணித்துக் கொண்டுதான் இருக்கிறேன்."

டயானாவுக்கு மனதில் கொஞ்சம் பாரம் குறைந்தது போன்றுதான் இருந்தது. அதன் பின்னர் சாள்ஸ் பேசிய அந்தரங்கமான கிளு கிளுப்பான பேச்சுக்களால் டயானா நிறைய வெட்கப்பட்டாள். நிறையவே சிணுங்கினாள். ஃபோன் மூலமே டயானாவை சூடேற்றினார் இளவரசர் சாள்ஸ்.

அந்த வித்தையெல்லாம் கமீலாவிடம் சாள்ஸ் கற்றுக்கொண்டது. சாள்ஸ்சை நேரில் சந்திக்க முடியாவிட்டால் ஃபோனில் பேசியே கிளுகிளுப்பை கொடுத்து விடுவாள் கமீலா.

கமீலாவிடம் கற்ற வித்தையைத்தான் டயானாவிடம் பரிசீலித்துப் பார்த்தார் சாள்ஸ். பின்னர் ஒரு கட்டத்தில் இதனை தன் தோழி ஒருத்தியிடம் கூறிச்சிரித்தாராம் டயானா.

அரச குடும்ப மாளிகையில் இருப்பவர்கள் அணியக்கூடிய ஆடைகள் டயானாவிடம் இருக்கவில்லை.

'வோக்' என்ற பெயரில் பெண்களுக்கான சஞ்சிகை ஒன்று வெளிவந்து கொண்டிருந்தது. அதில் டயானாவின் சிநேகிதி ஒருத்தி பணிபுரிந்தாள். அவளிடம் தனக்கு ஆடைகள் தைக்க வேண்டியிருப்பதை கூறினாள் டயானா.

அரச குடும்ப மருமகளுக்கு ஆடை தைக்கவா ஆளில்லை? பலவிதமான ஆடை அலங்கார நிபுணர்கள் படை ஒன்றுடன் டயானாவிடம் சென்றாள் சிநேகிதி.

1991 ஜூலை 29ம் திகதி இளவரசர் சாள்ஸ்–டயானா திருமணம் கோலாகலமாக நடைபெற இருப்பதாக பிரிட்டிஷ் அரச குடும்பம் உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

## திருமண நாள்

1991 ஜூலை 29ம் திகதி அதிகாலையில் டயானா எழுந்துவிட்டாள். காலையில் எழுந்தவுடன் ஜன்னலைத் திறந்து சுத்தமான குளிர்ந்த காற்றை சுவாசிப்பது டயானாவுக்கு பிடிக்கும்.

அன்று அதிகாலையில் ஜன்னலைத் திறந்தபோது, மாளிகையின் முன்னால் உள்ள வீதிகளில் கண்ட காட்சி பிரமிக்கத்தக்கதாக இருந்தது.

வீதியின் இருபுறமும் மக்கள் கூட்டம் கூட்டமாக நின்றனர். தங்கள் எதிர்கால இளவரசியை பத்திரிகைகள் மூலம் கண்ட மக்களுக்கு, அவளை நேரில் காணமுன்னரே பிடித்துக்கொண்டது.

என்ன காரணமோ தெரியாது, டயானாவின் படங்களை பத்திரிகைகளில் பார்த்தவுடனேயே "இவள் எங்களில் ஒருத்தி" என்ற எண்ணம் பிரிட்டிஷ் மக்களிடம் ஏற்பட்டு விட்டது.

டயானா இந்த உலகை விட்டுப் பிரியும்



# அசரவைத்த திருமணம்

வரை அந்த எண்ணம் பிரிட்டிஷ் மக்களிடம் குறைவின்றி இருந்தது.

டயானாவை மணமகளாக அலங்கரிக்க டேவிட், எமானுவேல் ஆகியோர் வந்தனர்.

டயானாவின் தந்தை அந்தச் சமயத்தில் நோயால் பீடிக்கப்பட்டிருந்தார். அப்படியிருந்தும் எப்படியோ வந்து சேர்ந்தார்.

பிரிட்டிஷ் அரச குடும்பத்தில் தன் மகள் மருமகளாகச் செல்வதை நினைத்தும், தன் மகள் எதிர்கால மகாராணியாகப் போவதை நினைத்தும் டயானாவின் தந்தை பெருமை கொண்டிருந்தார்.

அந்தப் பெருமை எல்லாம் ஒருநாள் சுக்குநூறாகும் என்று யார்தான் கண்டார்கள்.

டயானாவை அழைத்துக்கொண்டு அர்ச் பவுல் தேவாலயத்துக்கு தந்தையார் செல்ல வேண்டும்.

அதற்காக கண்ணாடி கோச்சு வண்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கோச்சு வண்டியில் டயானா ஏறியபோது, அவளது திருமண உடையின் பின்புறம் பொருத்தப்பட்டிருந்த மிக நீளமான தொங்கு துணியை வண்டிக்குள் பத்திரமாக புகுத்த முடியவில்லை. எப்படியோ சுருட்டித் திணித்துக் கொண்டு புறப்பட்டனர்.

அந்த நீளமான வெண்பட்டுத்துணி கசங்கிப்போய்விட்டது. தன்னைப் போன்று டயானாவும் கசங்கப்போகும் நாள் வெகு தொலைவில் இல்லை என்று பட்டு நினைத்திருக்குமோ?

தேவாலயத்தில் சடங்குகளை கண்டர்பரி அதி மேற்றிராணியார் நடத்திவைத்தார்.

மிகப் பிரமாதமாக நடைபெற்ற அத்திருமணத்தை காணாத கண்கள் என்ன கண்களோ? என்று கூறுமளவுக்கு பல கோடி மக்கள் நேரிலும், தொலைக்காட்சிகள் வழியாகவும் கண்டு களித்தனர்.

இளவரசரும், இளவரசியும் மென்மையாக முத்தமிட்டுக் கொண்ட போது அக் காட்சியைக் கண்டவர்கள் சிலிர்த்தனர்.

பொருத்தமான ஜோடி,
மிகப் பொருத்தமான ஜோடி,
மிகமிகப் பொருத்தமான ஜோடி!

கண்டோர் வாயெல்லாம் அப்படித்தான் முணுமுணுத்தன. கண்பட்டு விடும் என்று திருமண ஜோடியை மூடிவைத்தா கொண்டு செல்ல முடியும்?!

கண்கள் பட்டன. கண்கள் தழுவின. கண்கள் வியந்தன.

டயானாவுக்கு மக்களின் ஆரவாரமும், அபிமானமும் மகிழ்ச்சியாக இருந்தது.

திருமண ஊர்வலத்தின்போதும், பக்கிங்ஹாம் அரண்மனை உப்பரிகையில் நின்றும் மக்களை நோக்கி டயானா கையசைத்தபோது, மக்கள் உற்சாகத்தில் பூரித்துப் போயினர்.

இளவரசர் சாள்ஸ்சும் கையசைத்தார். அதில் வெறும் சம்பிரதாயம்தான் தெரிந்தது. மக்களை களி கொள்ள வைக்கும் தன்மை இல்லை.

அதற்கு முன்னரும் அரச குடும்ப திருமணங்கள் பல நடந்திருக்கின்றன.

மக்கள் வேடிக்கை பார்க்க கூடுவர். டயானாவின் திருமணத்தின்போதுதான் தங்கள் இல்லத் திருமணம் போலவே மக்கள் மனம்திறந்து குதூகலித்தனர்.

சலிப்பூட்டும் சம்பிரதாயங்களின் ஒட்டுமொத்தமான குவியலாக இருந்த அரச குடும்பத்தில், மக்களை வசீகரிக்கும் ஒரு புத்தம் புது ரோஜா போய்ச் சேர்ந்து கொண்டது.

கம கம வென்று நறுமணம் கமழும் பன்னீரில் தோய்ந்து, வானில் இருந்து நழுவி பூமிக்கு வந்த தேவதைபோல வெள்ளையான மணமகள் உடையுடன் டயானா காணப்பட்டார்.

## தேனிலவு

தேனிலவைக் களிக்க ரயிலில் புறப்பட்டனர் சாள்ஸ்சும், டயானாவும்.

மவுண்பேட்டன் பிரபுவுக்குச் சொந்தமான தோட்டத்தில்தான் தேனிலவைக் களிப்பது என்று திட்டம்.

அதுவரை பொறுமை இல்லை. ரயில் புறப்பட்டவுடனேயே சாள்ஸ் அவசரப்பட்டார்.

தேனிலவு ரயிலில் ஆரம்பமானது. அந்த நாளுக்காக எத்தனை நாள் படபடப்புடன் காத்திருந்தாள் டயானா.

டயானாவை கவருவதற்காகவே திருமணத்திற்கு ஒருவாரம் முன்னர் இருந்தே தன் உடலை தயார்படுத்த சாள்ஸ் செய்த முயற்சிகள்தான் எத்தனை?! எத்தனை?!

டயானா களைப்புற்று தூங்கும் அழகை ரசித்துக் கொண்டிருந்தார் சாள்ஸ். தற்செயலாக கண்விழித்த டயானா பயந்து போனாள்.

தூக்க கலக்கத்தில் பார்த்தபோது சாள்ஸ்சின் முகம் திருடனின் முகம்போலத் தெரிந்ததாம். இதைச் சொல்லிச் சொல்லி டயானா சிரிக்க, சாள்ஸ் அசடு வழிந்தாராம்.

முதல் நான்கு நாட்கள் மவுண்பேட்டன் பிரபுவின் தோட்டத்தில் களித்தனர். அங்கிருந்து புறப்பட்டு அரச குடும்பக் கப்பலான



'பிரிட்டானியா'வில் மத்திய தரைக் கடலுக்கு சென்றனர்.

கப்பலில் பயணம் செய்வதும், கப்பலில் காதல் விளையாட்டுகளில் ஈடுபடுவதும் அரச குடும்பத்தினருக்கு பிடித்தமான காரியங்கள்.

இயற்கை அழகில் மனதைப் பறிகொடுக்கும் பழக்கமுள்ள டயானாவுக்கு கடல் மீது பயணம் செய்வது மகிழ்ச்சியை கொடுத்தது.

குளிர்ந்த காற்றும், குதூகலமும் இருவரையும் ஒரு நிமிடம்கூட பிரியவிடாமல் கட்டிப் போட்டிருக்க, மோகமும், முத்தமும், சிணுங்கல் சத்தமுமாக தேனிலவு நாட்கள் தேனாக இனித்தன.

டயானா காட்டிய உற்சாகமும், இளமையான துள்ளலும் சாள்ஸ்சுக்கு மட்டும் மனதின் ஓரத்தில் தாழ்வு மனப்பான்மை என்ற குரங்கை சீண்டிவிட்டுக் கொண்டிருந்தது.

தேன் நிலவு நாட்கள் முடிந்தபோது, சாள்ஸ் கேட்ட அந்தக் கேள்வியை டயானா எதிர்பார்க்கவில்லை.

"நான் உனக்கு தகுதியானவனா? உனக்கு திருப்திதானே?"

டயானா நெற்றிப் பொட்டில் அடிபட்டதுபோல பார்த்தாள்.

பிற்கால விரிசலுக்கான முதல் வினா 'பிரிட்டானியா' கப்பலிலேயே கிளம்பி விட்டது.

(அடுத்த வாரமும் வரும்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? பலாங்கொடை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான்

என்.கே.வேணி,
25/10, சேர்ச் வீதி, பலாங்கொடை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசிலைப் பெறலாம்.




படிப்பகம்

www.padippakam.com

# பிடித்துக்காய் ஒரு பாடல்

**கியூபாவின் புரட்சித் தலைவர் பிடல் காஸ்ரோவுக்காக கெரில்லா தளபதி சேகுவேரா எழுதிய பாடல் இது:**



'நீ சொன்னாய்
சூரியன் உதிக்கத்தான் செய்யும் என்று
நீ நேசிக்கும் பசுமை வண்ணம் கொண்ட
முதலையை விடுவிக்க வேண்டி,

புலிப்படங்களில் காணாத பாதைகளினூடே
நாம் புறப்பட்டுப் போகிறோம்.
விடி வெள்ளிகள் ஒளிவீசித் திகழ்கின்றன.

நம் தலைகளினால்
அவமதிப்புகளை முட்டித் தகர்த்தெறிந்து
நாம் போய்கொண்டிருக்கிறோம்!
ஒன்றால் நமக்கு வெற்றி கிடைக்கும்;
அன்றேல் மரணத்தின் அப்புறத்திற்கு
நாம் கடந்து செல்லுவோம்!

வெடியோசை முதலில் வெடித்துக்
கிளம்பும்போது
காடு முழுவதும் அதிர்ந்து வியந்து உணரும்;
தூய நட்புணர்வுடன்
அப்போது நாங்கள் உன்னுடன் சேர்ந்து
தோன்றுவோம்

உனது முழக்கம் நாற்றிசைக் காற்றையும்
நானான்காய்ப் பிளக்கும்!

நீதி, உணவு, ஆட்சிச் செப்பம், விடுதலை...
அதே முழக்கத்தின் எதிரொலிகளாய் ஆகும்!

அப்போது நாங்கள் உன்னுடன் சேர்ந்து
தோன்றுவோம்!

முற்றதிகாரிகளுக்கு எதிராகத்
திட்டமிட்ட தாக்குதல்
பகல் முடிவில் முடிவுறும்
இறுதி முழுப்போருக்கு ஆயத்தராக
அப்போது நாங்கள்
உன்னுடன் சேர்ந்து தோன்றுவோம்!

கியூபாவின் அம்பு பாய்ந்து துள்ளும்
காட்டுவிலங்கு, உடலின் புண்ணை
நக்கிக் கிடக்கும்!

நேசம்பூண்ட நெஞ்சங்களுடன்
அப்போது நாங்கள் உன்னுடன்
சேர்ந்து தோன்றுவோம்!

பரிசுப் பொருள்களை ஏந்தி
எம்பி எம்பி நடக்கும்
எழிற்கோல மேனி இழிஞர்களால்
எங்களின் பொருள்களை ஊறுபடுத்த
இயலவில்லை!

எங்களுக்கு வேண்டியன
பாறை போன்ற இறுக்கம்,
அவர்களின் துப்பாக்கிகள்
வெடிகுண்டுகள்... இவையே!

இரும்பு எங்களின் வழி அடக்குமெனில்
அமெரிக்க வரலாற்றுச் செலவில்
எங்களின் கெரில்லா எலும்புகளை மூட
மெக்குத் தருக-

கியூபக் கண்ணீரால்
ஒரு மூடு துணி!

# என் கவிகள்

உரித்தெறியத்
துடிக்கும் போதும்
திரௌபதியின் சேலையாய்
திரும்பத் திரும்ப
ஊறிவரும் உன்
நினைவுகளால் ஊற்றெடுக்கும்
என் கவிகள்!
**
நீ
உட்கார்ந்து போன
இதயச் சுவட்டில்
எரியும் சிக்கலுக்கு
வரிவரியாய் வகிடெடுக்கும்
என் கவிகள்!
**
உன் விலகளின்
குத்தல்களால்
ஊசி தைத்த பலூனாய்
உடைந்து போகாமல்-என்
உயிருக்குள் அன்றாடம்
காற்றூதும்
என் கவிகள்!
**
பகைவனாய் வரும்
பகல்களில்
உலகை நான் சுற்றினாலும்,
உள்ளுணர்வு
உன்னைச் சுற்றுவதாய்
அடிக்கடி நினைவூட்டும்
என் கவிகள்!
**
இரவுகளில்
கதிரவன் மேற்கேறினாலும்,
தெற்கிறங்கா
என்னிமைகளுடன்
விடியும் வரை
குடியிருக்கும்
என் கவிகள்!

பர்ஸான்-யடவத்த, நீர்கொள்ள.

# அந்த நாள் ஞாபகம்



எம்.ஜி.ஆர். பிரபாவுடன்



தொப்பியில்லாத எம்.ஜி.ஆர். ↓

**டிசம்பர் 24 மக்கள் திலகத்தின் நினைவு நாள்.**

↑ 'கூண்டுக்கிளி' படத்தில் எம்.ஜி.ஆர். சிவாஜியுடன்.



# பாதுகாப்பு....?

வாக்குப் பெரும்பான்மை
பலத்தில் வெற்றி பெற்று
ஆட்சியில் அமர்ந்துவிட்ட
ஜனநாயகத் தலைவருக்குத்
தேவை பாதுகாப்பு!
***
வேலிகள், காப்பரண்கள்
சோதனைச் சாவடிகள்
சற்று மதிற் சுவர்கள்
துணையுடன் காத்து நிற்கும்
இராணுவம் தேடுவதும்
பாதுகாப்பு!
***
இராணுவக் கெடுபிடிகள்
இருசாரார் அடிதடிகள்
இடைநடுவே அகப்பட்டுப்
புழுப் போலத் துடிக்கும்
பொதுமக்கள் தேடுவதும்
பாதுகாப்பு!
***
ஒரே நாடு, ஒரே மக்கள்
இருவருக்கொருவர் தருமோ
பாதுகாப்பு?
***
மொத்தத்தில்-இங்கே
யார், யாரிடமிருந்து
யாரைப் பாதுகாப்பது?
***

திருமதி.ராஜேஸ்வரி கிருஷ்ணன்.

# ஏமாற்று

சூரியனுக்காகவே
வளைந்துகொடுத்த
சூரிய காந்திகள்
வாடிப்போயின!
*
சூரியன் வாடவில்லை
வருந்தவுமில்லை.
அவனுக்குத் தலையசைக்க
புதுமலர்கள் பூக்கும்!
*
அரியணையின்
பார்வையிலே
நாமும்
சூரியகாந்திகள்தான்!

உரும்பராய் சிவன்சுதன்

# தேன் கிண்ணம்

## தலைக்கனம்

மேலலைந்தால்
மேகம்;
கீழிருந்தால்
மழை நீர்!
•••
மேலிருந்தால்
மாடி;
கீழிருந்தால்
தரை!
•••
மரத்திலிருந்தால்
கிளை;
கீழ் விழுந்தால்
விறகு!
•••
கூரையிலிருந்தால்
ஓட்டை;
தரையிலிருந்தால்
பொந்து!
•••
தலைக்கனம்
தலையிலிருந்தால்-
ஹிட்லர்;
காலிலிருந்தால்
தெரேசா!!
•••

எஸ்.பிரபா.

# உலகின் முடிவு

காட்டிடையே
வெட்டிப் போட்ட
மரக் குற்றியாக
உணர்வுகள் அற்றிருப்போம்!

சுற்றி வர உறவுகள்
யாரும் எதுவும்
கேட்க மாட்டார்.

ஒவ்வொரு
மழைத்துளியின்
வரவிற்கும் இதழசைத்து
வரவேற்பு கொடுக்கும்!

தனிமையில்
பூத்த
பூ
எம்மினம்

மழையுடன் முயங்கும்
நிலம் போல
முரண்டு பிடித்து;
விட்டுக் கொடுக்கும்

தணிந்து போகும்
எம்மினம்.



இலைநீர் வேர்நீர்
உறிஞ்சும்
சூரியனின் முன்
என்ன செய்யும்
புற்கள்?

மன்னியுங்கள்
மனிதர்களே!
தாக்குப்பிடிக்க
முடியாது போனாலும்
விதைகளை பரப்பி
விடைபெறுவது நாம்!

உங்களை போல
அல்ல!

சுபா வரன்- கண்டி.

# இந்த வாரம் உங்கள் பலன்

(28.12.1997 தொடக்கம் 03.01.1998 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

## மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- முயற்சி தடை, பணச் செலவு. | பி.ப. | 1 | மணி |
| **திங்கள்**- தொழில் கஷ்டம், மறைமுக எதிர்ப்பு. | பி.ப. | 2 | மணி |
| **செவ்வாய்**- பெரியோர் சுகம், கௌரவ மிகுதி. | பகல் | 12 | மணி |
| **புதன்**- தொழில் மந்தம், முயற்சித் தடை. | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு. | பி.ப. | 3 | மணி |
| **வெள்ளி**- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. | 1 | மணி |
| **சனி**- முயற்சி பலிதம், பணவரவு. | பகல் | 12 | மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4**

## மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் மந்தம், பணவரவு குன்றும். | பகல் | 11 | மணி |
| **திங்கள்**- பிரயாணமிகுதி, தொழில் கஷ்டம். | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- பெரியோர் நட்பு, பலவித பேறு. | மு.ப. | 10 | மணி |
| **புதன்**- கடன் தொல்லை. கௌரவக் குறைவு. | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| **வெள்ளி**- இனசன விரோதம், மனக்குறை மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| **சனி**- பயனுள்ள செயல், பணக் கஷ்டம். | பகல் | 11 | மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8**

## இடபம்: சுப நேரம்

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- இனசன நன்மை, காரிய சித்தி. | பகல் | 12 | மணி |
| **திங்கள்**- வீண் துயர், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 2 | மணி |
| **செவ்வாய்**- புதிய முயற்சி, தொழில் விருத்தி. | பி.ப. | 1 | மணி |
| **புதன்**- பெரியோர் நட்பு, மனக்குறை நீங்கும். | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- அந்நியர் உதவி, காரியானுகூலம். | பகல் | 12 | மணி |
| **வெள்ளி**- முயற்சி பலிதம், பணவரவு. | பி.ப. | 1 | மணி |
| **சனி**- வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6**

## மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- உயர்ந்த நட்பு, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| **திங்கள்**- தொழில் கஷ்டம், பெரியோர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| **செவ்வாய்**- வீண் விரோதம், மனக் கவலை. | பி.ப. | 2 | மணி |
| **புதன்**- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி | பகல் | 11 | மணி |
| **வியாழன்**- பிரயாண மிகுதி, கௌரவக் குறைவு. | பி.ப. | 2 | மணி |
| **வெள்ளி**- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 11 | மணி |
| **சனி**- வீண் அலைச்சல், பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5**

## கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் கஷ்டம், மனக்குறை நீங்கும். | பகல் | 12 | மணி |
| **திங்கள்**- தொழில் சிறப்பு, பயனுள்ள செயல். | பி.ப. | 2 | மணி |
| **செவ்வாய்**- வெளியிடப் பயணம், முயற்சி பலிதம். | பி.ப. | 1 | மணி |
| **புதன்**- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- இனசன மகிழ்ச்சி, சுபகாரிய நன்மை. | மு.ப. | 10 | மணி |
| **வெள்ளி**- தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. | 2 | மணி |
| **சனி**- பிரயாண மிகுதி, செலவதிகம். | பகல் | 12 | மணி |

**அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-8**

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| தனு | - சூரியன். |
| மகரம் | - வியாழன், வெள்ளி, செவ்வாய். |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - சனி. |
| சிம்மம் | - இராகு. |
| விருட்சிகம் | - புதன். |

★ சந்திரன்- விருட்சிகம், தனு, மகரம், கும்பம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

## கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து 'நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பகல் | 11 | மணி |
| **திங்கள்**- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| **செவ்வாய்**- வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு. | மு.ப. | 10 | மணி |
| **புதன்**- பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. | 1 | மணி |
| **வெள்ளி**- பெரியோர் நட்பு, கௌரவ மிகுதி. | மு.ப. | 10 | மணி |
| **சனி**- தொழில் கஷ்டம், உயர்ச்சித் தடை. | பி.ப. | 1 | மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2**

## மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் சுகம், காரியத் தடை. | பி.ப. | 1 | மணி |
| **திங்கள்**- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| **புதன்** - பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- தொழில் கஷ்டம், மனக் கவலை. | பகல் | 11 | மணி |
| **வெள்ளி**- இனசன நன்மை, ஆடம்பர வாழ்க்கை. | பகல் | 12 | மணி |
| **சனி**- முயற்சி பலிதம், அந்நியர் சகவாசம். | பி.ப. | 2 | மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5**

## சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் சகாயம், இனசன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | மு.ப. | 10 | மணி |
| **புதன்**- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- கடன் தொல்லை, கௌரவக் குறைவு. | பகல் | 11 | மணி |
| **வெள்ளி**- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| **சனி**- பயனற்ற செயல், துயர் நீங்கும். | மு.ப. | 10 | மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4**

## தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- பயனற்ற செயல், தொழில் விருத்தி. | பகல் | 11 | மணி |
| **திங்கள்**- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| **செவ்வாய்**- வீண் துயர், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 3 | மணி |
| **புதன்**- அந்நியர் நட்பு, பணச் செலவு. | பகல் | 12 | மணி |
| **வியாழன்**- இனசன நன்மை, கௌரவக் குறைவு. | பி.ப. | 2 | மணி |
| **வெள்ளி**- தொழில் மந்தம், கடன் படல். | பகல் | 12 | மணி |
| **சனி**- புதிய முயற்சி, பலவித பேறு. | பி.ப. | 1 | மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4**

## விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- பிரயாண மிகுதி, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| **திங்கள்**- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| **செவ்வாய்**- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| **புதன்**- பெரியோர் சகாயம், அந்நியர் நட்பு. | பகல் | 11 | மணி |
| **வியாழன்**- வீண் குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| **வெள்ளி**- தொழில் சிறப்பு, பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| **சனி**- தேகசுகம் பாதிப்பு, கடன் தொல்லை. | பி.ப. | 2 | மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7**

## துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் நட்பு, கௌரவ மிகுதி. | பகல் | 12 | மணி |
| **திங்கள்**- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. | 1 | மணி |
| **செவ்வாய்**- முயற்சி பலிதம், கடன் சுமை. | மு.ப. | 10 | மணி |
| **புதன்**- வீண் விரயம், மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| **வெள்ளி**- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| **சனி**- இனசன நன்மை, உயர்ந்த நிலை. | மு.ப. | 10 | மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4**

## கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- அந்நியர் நட்பு, மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |
| **திங்கள்**- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 1 | மணி |
| **செவ்வாய்**- மனக்குறை நீங்கும், பெரியோர் சுகம். | பகல் | 11 | மணி |
| **புதன்**- முயற்சி பலிதம், தொழில் நன்மை. | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- காரியானுகூலம், இனசன நன்மை. | பி.ப. | 1 | மணி |
| **வெள்ளி**- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் | 11 | மணி |
| **சனி**- வீண் முயற்சி, உயர்ந்த நட்பு. | பி.ப. | 2 | மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7**



படிப்பகம்





பன்றியைப் போலிங்கு மண்ணிடைச் -சேற்றில்
படுத்துப் புரளாதே?
வென்றியை நாடியில் வானத்தில் ஓட
விரும்பி விரைந்திடுமே!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# மாணவன் விரும்பிய பாடம்

பாடசாலை ஒன்றின் வகுப்பறைக்கு வந்தார் அப்பாடசாலையின் தலைமை ஆசிரியர்.

அங்கே வந்து, ஒரு மாணவனிடம், "ரொபேட்! எழும்பு," என்றார்.

அந்த மாணவன் எழுந்து நின்றான். அவனிடம்,

"நீ இலத்தீன் மொழியில் மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கிறாய். அதைக் கற்றுக் கொள்வதில் போதிய ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லை. ஏன் இப்படி இருக்கிறாய்? படிப்பில் கெட்டிக்காரனான நீ, இப்படி இருப்பதை நான் விரும்பவில்லை" என்று சொன்னார் தலைமை ஆசிரியர்.

"சேர், எனக்கு இலத்தீன் மொழியைப் படிக்க விருப்பமில்லை," என்று சொன்னான் அந்த மாணவன்.

"இலத்தீன் மொழி எவ்வளவு பழமையான மொழி தெரியுமா? உயர்ந்த கருத்துக்கள், இலக்கியங்கள் அதில்தான் இருக்கின்றன. அதைக் கற்றுக் கொண்டால் நீ அறிவிற் சிறந்தவனாக வருவாய். அத்தகைய அரிய மொழியைப் படிக்க மாட்டேன் என்று சொல்கிறாயே?" என்றார் தலைமை ஆசிரியர்.

"மன்னிக்க வேண்டும் சேர், எனக்கு அந்த மொழியைக் கற்க ஆர்வமில்லை." என்றான் அந்த மாணவன்.

இதைக் கேட்ட தலைமை ஆசிரியருக்குக் கோபம் வந்தது.

"இலத்தீன் மொழியைக் கற்க மாட்டேன் என்கிறாயே, அப்போ எந்த மொழியைத் தான் கற்கப் போகிறாய்?" என்று கேட்டார்.

"சேர், நான் ஜெர்மன் மொழியைக் கற்றுக் கொள்ளப் போகிறேன். அதில்தான் விஞ்ஞான நூல்களும், கணித நூல்களும் நிறைய இருக்கின்றன. நான் ஒரு விஞ்ஞானியாக வர விரும்புவதால் என் வாழ்க்கைக்கு விஞ்ஞானமும், கணிதமும் அவசியம்." என்று கூறினான்.

தலைமை ஆசிரியர் ஒன்றும் பேசாமல் சென்றுவிட்டார்.

அதன் பின் அந்த மாணவன் ஜெர்மன் மொழியைக் கற்றான். உலகமே வியக்கும் அளவுக்கு விஞ்ஞானியானான்.

அவன்தான் விமானிகளுக்கும், மாலுமிகளுக்கும் திசை அறிய உதவும் ரேடாரைக் கண்டுபிடித்த ரொபேட் அலெக்சாண்டர் வட்சன் வட்.




படிக்கும் போதே, எதைப்படித்தால் வாழ்க்கைக்கு உதவும் என்ற எண்ணத்துடன் படிக்க ஆரம்பித்தால் வாழ்க்கையில் உங்களுக்கு வெற்றி நிச்சயம்.

## அதிசயம்—ஆனால் உண்மை!

**செருப்புச் செடி:**



← ஹெய்ட்டி நாட்டிலுள்ள பல்போஸ்டைலிஸ் பரடாக்ஸா என்னும் செடி கம்பளியிலான காலணிகளைப் போல தோற்றமளிக்கின்றது.




**சிவப்பு உப்பு:**

↑ மொராக்கோ நாட்டு மலையில் இந்த சிவப்பு உப்பு வெட்டி எடுக்கப்படுகிறது. இது வட ஆபிரிக்கா முழுவதற்கும் கழுதைகள் மூலம் அனுப்பப்படுகிறது.



**வாழ்த்து மடல்கள்:**

↑ ஸ்கொட்லாந்து நாட்டைச் சேர்ந்த ஜோசப் டட்டி என்பவர் வளர்த்த பெக்கிரேக் என்னும் நாய்க்கு ஒவ்வொரு ஆண்டும் 300 கிறிஸ்துமஸ் வாழ்த்து மடல்கள் வந்தனவாம்.



**சாட்டை மீன்:**

← நியூகினியில் காணப்படும் சங்லன் என்னும் மீனின் முதுகில் அதன் உடலைவிட மூன்று மடங்கு பெரிய சாட்டை போன்ற அமைப்பு உண்டு.

## வாரம் ஒரு நாடு

### மேற்கு சமோவா



தலைநகர்– ஏபியா
பரப்பு– 2835 சதுரகிலோ மீட்டர்
மக்கள் தொகை– 2.04 இலட்சம்
மொழி– சமோவன், ஆங்கிலம்
எழுத்தறிவு– 38%
சமயம்– கிறிஸ்தவம்
நாணயம்– தலா
தனிநபர் வருமானம்– 940 டொலர்.

**அமைவிடம்:**

மேற்கு சமோவா, நான்கு தீவுகள் கொண்ட தென் பசிபிக் கடலில் அமைந்த நாடு. ஸவாய், உபோலு ஆகிய இரு பெரிய தீவுகள் உள்ளது.

**வரலாறு:**

மேற்கு சமோவா 1962ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி சுதந்திரமடைந்தது. பொது நலவாய நாடுகள் கூட்டமைப்பில் இது அங்கம் வகிக்கின்றது.

**பொருளாதாரம்:**

நாட்டின் பொரளாதாரம் விவசாயத்தைச் சார்ந்திருக்கின்றது. கொக்கோ, கொப்பரை, வாழைப்பழம் போன்றவை முக்கிய உற்பத்திப் பொருட்கள். மீன்பிடித்தொழிலும் நடைபெறுகின்றது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 03.01.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 225
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 223

பரிசுக்குரியவர்:
எம். வின்சன்,
தமிழ் (கலவன்) மகா வித்தியாலயம், கிரான்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| செல்வராஜா அருண்ராஜா, செனிமேரீஸ் மகா வித்தியாலயம், பொகவந்தலாவ. | து. பவித்ரா, மட்/ இந்துக்கல்லூரி, வாழைச்சேனை. |
| ஆர். அபிராஜ், கமு/விநாயகர் மகா வித்., கோளாவில்-1, அக்கரைப்பற்று. | ஹனீப் முஹம்மட், திருத்துவக் கல்லூரி, கண்டி. |
| ஜே. ஜோய் வேஜினியா, தமிழ் மகா வித்தியாலயம், செங்கலடி. | தம்பையா மதுராந்தன், மெதடிஸ்த மத்திய கல்லூரி, மட்டக்களப்பு. |
| சவ்னா ஜமால்டீன், புளுமெண்டல் மகா வித்தியாலயம், கொழும்பு-14. | ஜே. கிஷோக், தமிழ் மத்திய கல்லூரி, வவுனியா. |
| அ. டிசாந்தனி, ப/எலதலுவ தமிழ் வித்தியாலயம், ஹாலி-எல. | கே. ஸல்பி, அல்-மின்ஹாஜ் முஸ்லிம் வித்தியாலயம், திருகோணமலை. |

## விடுகதைகளும் விடைகளும்

1. மழையில் பிறந்தான், வெயிலில் உலர்ந்தான்.
அவன் யார்?
2. ஒரு சாண் உடம்பில் உள்ளதெல்லாம் பற்கள்.
அது என்ன?
3. திறந்த பெட்டியை மூட முடியாது.
அது என்ன?
4. குண்டு முழி ராசாவுக்கு குடல் எல்லாம் பல்.
அது என்ன?.
5. கறுப்புப் பாறைக்கு வெள்ளை வேர்.
அது என்ன?
6. இரத்தத்திலே வளர்வது இரத்தம் இல்லாதது.
அது என்ன?
7. வெள்ளை நிறத்தான், வயிறு பெருத்தான், சிதறி வெடித்தான்.
அவன் யார்?
8. தாவி ஓடி வந்தாலும் தாகம் தீர்க்கமாட்டான்.
அவன் யார்?

**விடைகள்**

1. காளான் 2. சீப்பு 3. தேங்காய்
4. மாதுளம்பழம் 5. யானைத்தந்தம்
6. நகம் 7. பஞ்சு 8. கடல்

தொகுப்பு: ஏ. அகல்யா.

## கழுகுச் சின்னம்

பெரும்பாலான நாடுகளுக்கு சின்னம் தாங்கிய கொடிகள் உண்டு. கழுகைச் சின்னமாக பல நாடுகள் தங்கள் கொடிகளில் பொறித்துள்ளன. ஸ்பெயின், ஜேர்மனி, அல்பேனியா, ஒஸ்ரியா போன்ற நாடுகளைச் சொல்லலாம். ரோமானிய ஆட்சியில் கழுகு சின்னமாய்ப் பொறிக்கப்பட்டிருந்தது. சார்லே மார்னே என்ற ரோம் மன்னன்தான் இந்தச் சின்னத்தை முதலில் அறிமுகப்படுத்தினார்.



இதைச் சில ஐரோப்பிய நாடுகள் ஒற்றைக் கழுகு, இரட்டைக் கழுகு என்று சின்னங்கள் அமைத்துக் கொண்டன. ஐக்கிய அமெரிக்க நாட்டின் சின்னமும் கழுகுதான்.

## போப்பாண்டவர்

• **போப்பாண்டவர் என்பவர் யார்?**

உலகம் முழுவதும் உள்ள கோடிக் கணக்கான ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களின் தலைவர்தான் போப்பாண்டவர். இவர் ரோமில் உள்ள உலகிலேயே மிகச் சிறிய நாடான வத்திக்கானை ஆட்சி செய்கிறார்.



• **போப்பாண்டவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?**

ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த கர்தினால்கள் எனப்படும் குருமார்கள் அடங்கிய குழுவில் இருந்து போப்பாண்டவராக ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

• **போப்பாண்டவரின் ஆட்சிக்காலம் எவ்வளவு?**

ஒருமுறை தேர்வு செய்யப்பட்ட போப்பாண்டவர்,அவர் இறக்கும் வரை போப்பாண்டவராக இருப்பார். அவர்களாகவே விரும்பினால் போப்பாண்டவர் பதவியை இராஜினாமா செய்யலாம்.

• **இதுவரையில் எத்தனை போப்பாண்டவர்கள் இருந்துள்ளனர்?**

தற்போது இருக்கும் போப்பாண்டவரான பரிசுத்த இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் 264வது போப்பாண்டவராவார். கிறிஸ்துவின் சீடர்களில் ஒருவரான பேதுரு என்பவரே முதல் போப்பாண்டவர்.

• **தற்போதைய போப்பாண்டவர் எப்போது தேர்ந்தெடுக்கப்பட்டார்?**

போலந்து நாட்டைச் சேர்ந்த இவர் 1978ம் ஆண்டில் போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## சிரிப்பூட்டும் வாயு

**1799ம்** ஆண்டில் ஹம்ப்ரி டேவி என்ற விஞ்ஞானி நைட்ரஸ் ஒட்சைட் என்ற வாயுவைக் கண்டுபிடித்து, அதன் விளைவுகளை ஆராய்ச்சி செய்தார்.



நைட்ரஸ் ஒட்சைட் வாயுவைச் சுவாசித்தால் ஒரு வித மயக்க நிலையில் சிரிப்போ, அல்லது அழுகையோ வருவதைக் கண்டுபிடித்தார். அதனால்தான் இந்த வாயுவுக்குச் சிரிப்பூட்டும் வாயு என்ற பெயர் வந்தது.

பின்னர் இதைச் சுவாசித்தால் வலியை மறந்த மயக்க நிலை ஏற்படுவது கண்டறியப்பட்டது.

## குட்டிச் செய்திகள்

கஸ்பியன் கடல் என்பது உண்மையில் ஒரு பெரிய ஏரிதான். இதற்கு எந்தக் கடலுடனும் தொடர்பு இல்லை. இந்த ஏரியின் நீர் உப்புத் தன்மையாக இருப்பதால்தான் இதைக் கடல் என்றழைக்கின்றனர்.

அட்டகாமா பாலைவனம் சிலி நாட்டில் உள்ளது. இங்கே 1570ம் ஆண்டு முதல் 1970ம் ஆண்டு வரை ஒரு துளி மழை கூடப் பெய்யவில்லை.

உலகின் மிகப் பெரிய வெந்நீர் ஊற்று நியூஸிலாந்து நாட்டில் இருக்கிறது. இதன் ஆழம் 80 அடி. இந்த வெந்நீர் ஊற்று 1500 அடி உயரத்திற்கு நீரைப் பாய்ச்சுகின்றது.

ஐரோப்பாக் கண்டத்தின் பரப்பளவிற்கு இணையான அளவு கொண்ட ஒரே பனிக்கட்டிகூட அண்டார்டிக்கா கண்டத்தில் இருக்கிறது.

1844ம் ஆண்டு முதல் முறையாக ஹோரஸ்வெல்ஸ் என்ற பல் மருத்துவர் தன் நோயாளியின் பல்லைப் பிடுங்க நைட்ரஸ் ஒட்சைட்டைப் பயன்படுத்தினார்.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# இனி என் முறை

**புதிய தொடர் 3**

எழுத்துச் சித்தர் பாலகுமாரன் தனது வழக்கமான பாணியில் இருந்து விலகி சஸ்பென்ஸ் கலந்து எழுதிய விறு விறு நாவல்.

எழுத்துச் சித்தர் பாலகுமாரன்



கார் கிளம்பி எட்வர்ட் எலியட்ஸ் சாலையில் ஓடிற்று. நட்சத்திர ஓட்டலுக்குள் நுழைந்தது.

"திலீபா, இப்ப எப்படி இருக்கு?"

"சரியாயிடுச்சு."

"நீச்சல் கத்துக்கிறியா?"

"பீச்சுல வேணாம்."

"இந்த ஓட்டல்ல ஒரு குளம் இருக்கு. அதுல கத்துக்கிறியா?"

"இப்பவா?"

"நாளைக்கு. அடுத்த வாரம். வாரம் இரண்டு நாள், மூணு நாள் கத்துக்கிறியா?"

பிள்ளை பேசாமலிருந்தான்.

"நாளைலேர்ந்து கத்துக்க. கோச் இருப்பாங்க. முதல்ல ட்யூப் கட்டி விடுவாங்க. பயமில்லாம கத்துக்கலாம்."

"ரொம்ப ஆழமா?"

"கேள்வியப் பார். முழங்கால் ஜலத்துல நீச்சல் அடிக்க முடியாது. ஆசை இருக்கா இல்லியா சொல்லு."

"ஆசை தான்."

"அமுதா நீ எல்லாருக்கும் ஏதாவது ஆர்டர் பண்ணு. நான் பையனுக்கு ஸ்விம்மிங் பூல் காட்டிட்டு வரேன். வாடா திலீப்."

படியேறிப் போனார்கள். மூணாவது மாடியில் நீச்சல் குளம் இருந்தது. ஓட்டலில் இரண்டு தனித் தனி கட்டடங்களை இணைக்கும் நடைபாதையில் மேலே திறந்த வானமும் நடுவே ஆறடி ஆழமுமான சிறிய நீச்சல் குளம் இருந்தது.

"இங்க சொல்லித் தராங்க. ஆள் வச்சு. சேர்த்துடலாமா திலீபா."

"ஆறு அடியா... மூழ்கிட மாட்டேனா?"

"பிளாஸ்டிக் டியூப் போட்டு வுட்றுவாங்க. அப்புறம் மொள்ள மொள்ள கால் கை அசைச்சு ஸ்விம்மிங் கத்துக் குடுப்பாங்க."

"யாரும் காணலியே?"

"பகல்ல க்ளாஸ் நடக்கும். சனி ஞாயிறு இரண்டு நாள் போறியா?"

"சரிப்பா."

"விடாம செய்யணும். பயப்படக் கூடாது."

பிள்ளை பயத்துடன் தலை ஆட்டினான். தகப்பனின் கையைப் பிடித்துக் கொண்டே நீச்சல் குளத்திலிருந்துவந்தான்.

"அமுதா என்ன ஆர்டர் பண்ணின?"

"உங்களுக்கு சிக்கன் ரோல். எனக்கு பிஸா. திலீபனுக்கு மட்டன் ஃப்ரைட் ரைஸ்."

"இவன் ஏன்டீ இவ்வளவு பயப்படறான்?"

"சின்ன புள்ள தானே."

"இல்லை. டிரைவ் இல்லை. கத்துக்கணும்கற ஆசைகூட இல்லை. இவ்வளவு சாஃப்டா ஆம்பளைப் பையன் இருக்கக் கூடாது. பெண் குழந்தைகளே சகலமும் கத்துக்கணும்னு வெளிய வரப்போ, நீ அவனை படிப்பு மட்டும் கவனிச்சு புண்ணியமில்லை அமுதா. வெளி உலகம் பழக்கணும். உடம்பு பலம் வேணும்."

"நல்லாதான் சாப்பிடறான். தினம் முட்டை வேற குடுக்கிறேன்."

"ஸ்விம்மிங் சேர்த்து வுட்டுட்டு போறேன். வாரம் மூணு நாள் நீதான் இவனைக் கூட்டிட்டு வரணும். இருந்து முடிஞ்சதும் அழைச்சுட்டு போவணும்."

"பள்ளிக் கூடம் வண்டில போய்ட்டு வர்றதே சிரமமா இருக்கு. இது வேறயா. இரண்டு மைல் போயிட்டு வரவா.... வீட்டு வேலை."

"பையனுக்காக செய்."

"போரடிக்கும்."

"நான் இல்லேன்னாலும் போரடிக்குதுங்கறே. பையனுக்கு உதவி பண்ணுன்னாலும் போருங்கறே. நீயும் நீச்சல் கத்துக்கயேன்."

"வேண்டியது தான். இத்தனை வயசுக்கப்புறம்."

"கத்துக்கறதுக்கு வயசு என்ன?"

"புடவையோட முங்கறதுக்கு இதென்ன ராமேஸ்வரமா? ஸ்விம் ஸூட்போட்டுக்கிட்டு ஒரு ஓட்டல் குளத்துல..."

"ஒரு தப்பும் இல்ல."

"நம்மால முடியாது. ஸாரி."

"அப்ப பையனை என்கரேஜ் பண்ணு. அவன் கூட நாலு நாள் போனா உனக்கும் ஆசை வரும். இது பப்ளிக் குளம் இல்லை. ஸ்டார் ஓட்டல். ஆளுங்க கம்மி. லேடீஸ் கூட நிச்சயம் நீச்சலடிப்பாங்க. டேய் நீ என்னடா சொல்றே...?"

"அம்மா வந்தா போறேன்."

"எதுக்கு?"

"நீச்சலடிக்க."

"போடா என்னால முடியாது நீச்சல் எல்லாம்."

"நாளைக் காலைல முத வேலை உன்னை இங்க கொண்டாந்து சேர்க்கறது தான். அம்மா துணைக்கு வரும். ஓகே."

இராத்திரி–

"திலீப் தூங்கியாச்சா?"

"ம்ம்."

"டெல்லி நியூஸ் பார்த்துட்டுத்தான் வருவீங்களா?"

"தமிழில் அரைகுறையாய் ஒரு நியூஸ் கேட்டேன். அது மறுபடி டெல்லில சொல் வாங்களான்னு பார்க்கறேன்."

"என்ன?"

"ஒரு வக்கீல் கொலை சம்பந்தமா ஒரு பெரிய புள்ளிய அரெஸ்ட் பண்ணியிருக்காங்க. இது எங்க வேலை. லோக்கல் பொலிஸ் இது செய்திருக்க முடியாது. பேர் சரியா காதுல வாங்கலை."

"ம்... எப்ப பார்த்தாலும் கொலை, கொள்ளை, சண்டை, துப்பாக்கிச் சூடு. போர். வாங்களேன்."

"கொஞ்சம் இருப்பா... கண்ணுல்ல என்ன செம மூடா?"

"மூட்தான்."

"ஓட்டல்லயே கவனிச்சேன். கண்ணுலயே தெரிஞ்சுது."

"இப்படி கொஞ்சிக்கிட்டு உக்கார்ந்திருக்கறதே ரொம்ப சுகமாயிடுது."

"சுகம் தான்."

"டீவி பார்க்கணும்கறீங்களே."

"தொழில் கண்ணம்மா."

"லீவுல வந்துட்டு, தொழில் என்ன தொழில்?"

"உள்ள எங்கயோ ஒரு பட்சி தப்பா குரல் குடுக்குது. அதுதான் உட்காந்துக் கிட்டிருக்கேன்."

"காரே பூரேன்னு ஹிந்தில பேசறாங்க. ஷவுண்ட் கட் பண்ணிரட்டுமா. நியூஸ் போவுது பெரிசு பண்ணிக்கலாம்"

எழுந்து வால்யூம் குமிழைத் திருகி அமைதியாக்கினாள். டீவி ஊமைப் படமாய் இருந்தது. எதிரே வந்து நின்று கொண்டாள்.

அமுதாவின் உள்ளே ஒரு அமுதா நெட்டுயிர்த்தாள்.

சூடு பரவ தயாரானாள். கீழ் உதடு கடித்து கண் சொருகி புருஷ வாசனையை முகர்ந்தாள். உள்ளே ஒரு பெண் குதிரை ஓடிற்று. ஆண் குதிரை துரத்திற்று. சடாரென்று பெண் குதிரை திரும்பி ஆட்டம் காட்டியது. வேண்டாம் போ என்று காலால் உதைத்து சிணுங்கியது. ஆண் குதிரை முன்னே வந்து மடக்கியது. கழுத்தையும் கடைவாய் வரைக்கும் உதடு துடிக்க முகர்ந்து பார்த்தது. வெறியில் பல் தெரிய சிரித்தது. இடுப்பெல்லாம் உரசியது. உரசல் சூட்டில் பெண் குதிரை அவஸ்தைபட, ஆண் குதிரை பல்லால் பெண்ணின் பிடரி கடித்தது. பெண் குதிரை பொறுமை இழந்தது.

"வாப்பா உள்ள போயிடலாம்." எழுந்து அவன் கைகளைப் பற்றி இழுத்தாள். அவன் எழுந்தான்.

ஃபோன் மணி அடித்தது.

"யாரு இந்நேரம்?" அமுதா ஃபோன் எடுத்தாள். "திஸ் இஸ் எய்ட் சிக்ஸ் செவன் ஃபோர் நைன் டு."

எதிர் முனையில் கனத்த குரல் கேட்டது:

"ஸி.பி.ஐ. டெல்லி எஸ்.பி. மிஸ்டர் செல்வராஜ் இருக்காரா?"

"ஒன் செகண்ட், ப்ளீஸ். உங்களுக்கு. டெல்லி."

"ஹலோ"–செல்வா ஃபோன் வாங்கினான்.

"யெஸ் ஸார். ஃபைன் சார். டெல் மி சார்." டெலிஃபோன் பேச்சை வெகு நேரம் கவலையுடன் வாங்கிக் கொண்டான்.

"யெஸ் சார். குட்நைட். ஐல்பி தேர் இன் த மார்னிங் சார்."

"அப்பா... இப்ப இடைஞ்சல் இல்லை. காலைல தான் ஏதோ இடைஞ்சல்." அமுதா நிம்மதியானாள்.

"அமுதா"

"என்னங்க."

"கிளம்பணும்"

"டெல்லிக்கா?"

"இல்லை. பெங்களூர்"

"காலைல தானே?"

"இல்லை, இப்ப."

"இப்ப எப்படி?"

"பை மிலிடரி ஃப்ளைட்."

"எதுக்கு?"

"வேலை."

"ப்ச்சு." உடம்பு சூடு சட்டென்று கலைந்து போயிற்று. தொப்பென்று சோபாவில் உட்கார்ந்தாள். முழங்கால் தூக்கி முகம் புதைத்துக் கொண்டாள்.

"அமுதா"

......

"அமுதா"

..........

"நாளைக்கு ஈவினிங்கு வந்துருவேன். டேய் என்னைப் பார்" முகம் நிமிர்த்த கண்களின் ஓரம் ஜலம் பெருகி நின்றது.

"ஸாரி அமுதா, நிச்சயமா நாளைக்கு ஈவினிங்"

"எப்ப வேணா வாங்க. நான் எதுக்கும் ஆசைப்படலை. போயிட்டு வாங்க."

உள்ளே போய் பீரோ திறந்தாள். அவன் துணிகளை எடுத்து பெட்டியில் அடுக்கத் துவங்கினாள். அவன் டீவி குரலை பெரிதாக்கினான்.

"பெங்களூரில் ஒரு வக்கீல் கொலை சம்பந்தமாக ஜனாதிபதிக்கு அவர் மனைவி கொடுத்த புகாரின் பேரில் நகரில் இரண்டு முக்கிய புள்ளிகள் கைது செய்யப்பட்டார்கள். சட்ட சபையில் இது பற்றி எதிர்க் கட்சியினர் கேட்ட கேள்விக்கு கர்நாடக முதலமைச்சர் இது மத்திய அரசு சம்பந்தப்பட்ட விஷயம். இது பற்றி தனக்குத் தகவல் எதுவுமில்லை என்று சொன்னார். எதிர் கட்சியினர் முதல்வரின் சமாதானம் ஏற்காது வெளிநடப்பு செய்தனர்."

வேலை நடப்பு புரிந்துவிட்டது. அவர்களை சென்னைக்குக் கொண்டு வர வேண்டும். பெங்களூரில் வைப்பது அவர்களுக்கும் சி.பி.ஐ.க்கும் ஆபத்து. எஸ்கார்ட் வேலை. காலையில் போகலாம். உடனே வா என்று கட்டளை போடுகிறார்கள்.

தொலைபேசியில் லோகல் ஆபீஸுக்கு தொடர்பு கொண்டான். உடை மாற்றிக் கொண்டான். ரிவால்வரை துடைத்து பின் இடுப்பில் சொருகிக் கொண்டான்.

அமுதா ஷேவிங் செட் எடுத்து வைத்தாள். சகலமும் வைத்து மேலே வெள்ளை டர்க்கி டவலால் போர்த்தினாள். பெட்டி அழுத்தி மூடினாள்.

"பிள்ளை கிட்ட எழுப்பி சொல்லிட்டுப் போங்க. காலைல என்னைப் பிடுங்கி எடுப்பான்."

செல்வா, உலுக்க கை வைத்து, சட்டென்று "வேணாம் அமுதா" குனிந்து பையனை முத்தமிட்டான். கான்வாஸ் ஷூ மாட்டினான்.

"ஒரு வேளை நாளைக்கு ஈவினிங் என்னால வர முடியலைன்னா." அமுதா முகம் திருப்பிக் கொண்டாள். கன்னத்தில் கண்ணீர் இறங்கிற்று.

"என்ன இது. ரொம்ப தப்பு அமுதா. எனக்கு கஷ்டமாயிடும். ப்ளீஸ். இப்படி பண்ணாத." அருகே நெருங்க முகம் துடைத்துக் கொண்டாள்.

அவளை இழுத்து முத்தமிட்டான். "கொடு" என்று கேட்டான்.

அமுதா நெருங்கி இறுக்கி புருஷனை முத்தமிட்டாள்.

"ஜாக்கிரதை, தாயி. எல்லா ஊரும் கெட்டு கிடக்கு. அலர்ட்டா இரு."

"சரி."

"கோவமில்லையே?"

"போயிட்டு நல்லபடியா வாங்க."

வெளிக்கதவு திறந்து தோட்டக் கதவு, பூட்டை திறந்து கார் கதவில் சாவி பொருத்தி உள்ளே பை விசிறிப் போட்டு கிளம்பினான்.

"கார் ஏர் போர்ட்ல ஹேண்ட் ஓவர் பண்ண சொல்லிட்டாங்க. உன்னைக் கேட்டா அப்படியே சொல்லிடு."

"சரி."

சாவி திருக, கார் உயிர்பெற்றது.

"பை."

"பை."

நகர்ந்தது. சிகப்பு விளக்கு வலப் பக்கம் மின்ன, திரும்பி மறைந்தது. அமுதா தோட்டக் கதவு மூடினாள். உள்ளே வந்து இரும்புக் கதவு சாத்தினாள். மரக்கதவுகளை அடைத்தாள். பூட்டினாள். திரும்பி கதவில் முதுகு பதிய சாய்ந்து கொண்டாள். உடம்பு கொதித்தது.

ஒரு ஆள் மெல்ல அந்த வீட்டைக் கடந்து போனான். கதவு இலக்கத்தை டார்ச் அடித்துப் பார்த்தான். மனதில் குறித்துக் கொண்டான். அணைத்துவிட்டு நகர்ந்தான். கார் போன திக்கில் நிதானமாய் நடந்தான்.

(தொடர்ந்து வரும்)

---

## கடித இலக்கியம்



கியூபாவின் அமைச்சர் பதவியை துறந்துவிட்டு பொலிவியாவிலும் போராடப் புறப்பட்டார் சேகுவேரா. அவரது கெரில்லா படையில் இணைந்து சென்றவர்களில் ஒருவர் ஜீஸஸ் பெலிக்ஸ். சர்க்கரைத் தொழில் துறையின் துணை அமைச்சர் பதவி உட்பட பல உயர் பதவிகளை உதறிவிட்டு அவர் 'சே'யுடன் சென்றார். தன் மகனுக்கு அவர் எழுதிய கடிதம் இது. இக்காலத்தில் இவையெல்லாம் ஆச்சரியம்தான்!

### "கடுமையான சோதனைகள் வந்தாலும் உண்மையைப் பற்றி நில்"

அன்பு மகனே!

நான் பல காரணங்களால் இந்தக் கடிதத்தை உனக்கு எழுதுகிறேன். இப்போது நம்மைச் சுற்றிலும் முற்றிலும் அசாதாரணமான சூழ்நிலை நிலவுகிறது.

நீ வளர்ந்து பெரிய பிள்ளையாகி இந்தக் கடிதத்தை படிக்கிறபோது, நான் எடுத்த முடிவைப் பற்றி உன்னால் புரிந்து கொள்ள முடியும்.

இன்று உனது நான்காவது பிறந்த நாள். நீதான் எனது எதிர்கால நம்பிக்கை. நான் உன்னோடு இருந்த சில மாதங்களில், நீ எனக்கு பெருமளவு மகிழ்ச்சி தந்தாய்.

நீ எனது ஒரே மகன். ஆகவே உனக்குத் தெரிவிக்காமல், நான் மரண அபாயம் மிக்க யுத்தத்தில் பங்கேற்கும் புரட்சிகரக் கடமையை நிறைவேற்றப் புறப்பட்டால், அவை சந்ததியாகிய உன்னிடம், எனது எண்ணங்களில் சில வற்றையேனும் கூறாதுவிட்டால், அது மன்னிக்க முடியாத குற்றமாகிவிடும்.

வரலாற்றின் போக்கை நிர்மாணிக்கும் ஒரு காலகட்டத்தில் வாழும் அபூர்வ வாய்ப்பு எனக்கு கிட்டியது. மானுட வரலாற்றில் மகத்தான யுகத்தை நமது தாய்நாட்டில் நமது மக்கள் உருவாக்கி வருகிறார்கள்.

முற்றிலும் பாதகமான சூழ்நிலைகளில் புரட்சி கட்டப்பட்டு வருகிறது. தன் மீது தொடுக்கப்பட்ட ஒவ்வொரு தாக்குதலையும், அச்சுறுத்தலையும் முறியடித்து அந்தப் புரட்சி வெற்றி பெற்று வருகிறது.

மக்களது இரத்தத்தை உறிஞ்சிக் கொழுக்கும் ஏகாதிபத்தியத்தில் இருந்து விடுபெறும் வழியை பிற நாடுகளுக்குக் காட்டும் ஒரு உதாரணமாக கியூபா திகழ்கிறது.

எனது மகனே! எனக்கு நெருக்கமானவர்களில் உன்மீது அதிகமான அன்பு வைத்துள்ளேன். உன்னோடு இருந்து, உன்னை வளர்த்து நீ மனிதனாகவும், புரட்சிக்காரனாகவும் இருப்பதைக் காண நான் விரும்புகிறேன். ஆனால் அது சாத்தியம் இல்லை.

நான் எடுத்த முடிவின் காரணத்தால் உன்னைவிட்டுப் பிரிய வேண்டியுள்ளது.

நீ எனது முடிவைப் புரிந்து கொள்வாய் என்றும், இந்த முடிவை மேற்கொண்டதற்காக என்னை ஒரு போதும் விமர்சிக்க மாட்டாய் என்றும் நம்புகிறேன்.

ஒவ்வொரு தந்தையும் எண்ணுவது போல நீ என்னைக் குறித்துப் பெருமைப் படுவாய் என்று நம்புகிறேன்.

ஒரு தந்தை தன் மகனுக்கு வழங்கும் ஏனைய சின்ன சின்ன மகிழ்ச்சிகளை என்னால் உனக்கு வழங்கமுடியாது. ஆகவே நான் மேற்கொண்ட இந்த முடிவு உனக்கு மகிழ்ச்சியளிக்கட்டும்.

நீ உனது பாடங்களை ஊன்றிப் பயில வேண்டும் என்றும், புரட்சிகரக் கடமைகளை ஆற்றும் திறனுடைய மனிதனாக உன்னை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்று கூறவிரும்புகிறேன்.

எப்போதும் எச்சரிக்கையாய் இருந்து உறுதியுடனும், உற்சாகத்துடனும் நீ தாய் நாட்டின் புரட்சியை பாதுகாத்து நிற்க வேண்டும். உலக மக்களால் மிக உன்னதமானது என வர்ணிக்கப்படும் இந்தப் புரட்சி, நமது மக்களின் இரத்தத்தை விலையாகக் கொடுத்துப் பெறப்பட்டது.

நீ எப்போதும் நேர்மையாளனாகவும், அன்பானவனாகவும், திடசித்தம் உடையவனாகவும் இருப்பாய் என்று நான் நம்புகிறேன்.

எத்தனை கடுமையான சோதனைகள் வந்தாலும் நீ உண்மையைப் பற்றி நில். விமர்சனங்களை ஏற்றுக்கொள்.

ஆனால் உனது கருத்துச் சரிதான் என்று நீ உணர்கிறபோது அதை ஆதரித்து உறுதியாக நில்.

பணிந்து நிற்பதையும், கெஞ்சிக் குழைவதையும் ஒதுக்கித்தள்ளு. உன்னைப் பற்றி நீயே உயர்வாக எண்ணாதே. எப்போதும் கடுமையாக சுயவிமர்சனம் செய்துகொள்.

இந்தக் கடிதத்தை படிக்கிறபோது, அநேகமாக நீ ஜோஸ் மார்ட்டியின் அற்புதமான கவிதை வரிகளைத் தெரிந்திருப்பாய்.

யுகோ ஓய் எஸ்ட்ரெல்லா என்றொரு கவிதை அவர் எழுதியிருக்கிறார். அதைப்படி. அதன் பொருளை யோசி.

வாழ்க்கையில் உனது பாதையை நீயே தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்.

சுடர்விட்டு ஒளிவீசும் இருளைக் கொல்லும் நட்சத்திரத்தையே நீ எப்போதும் தேர்ந்தெடுப்பாய் என நான் நம்புகிறேன்.

உனது தாய்நாட்டின் பெருமைமிகு மகனாகத் திகழ்.

புரட்சிக்காரனாய் இரு.

அன்புடன் அணைக்கும் தந்தை
ஜீஸஸ்.



படிப்பகம்

www.padippakam.com




அந்த டிஸ்கோதே ஹாலில் ஆண்களும், பெண்களும் நிறைய பேர் இருந்தார்கள். ஒரு இசைக் குழு மேற்கத்திய சங்கீதத்தை வாசித்துக் கொண்டிருந்தது.

எல்லாத்திசைகளில் இருந்தும் வர்ண வெளிச்சக் கதிர்கள் ஹாலில் பாய்ந்து ஜோடிகளை ஊடுருவின.

ஈஸ்வர் இருந்த வாசல் பகுதியில் இருந்து மிக தூரத்தில் மதுமிதா... தெரிந்து, தெரிந்து மறைந்தாள். வேறு வேறு ஜோடிகள் தங்கள் நடனத்தால் இடம் நகர்ந்ததில், மதுமிதாவையே இப்போது தேட வேண்டியிருந்தது.

ஈஸ்வர் பார்த்த ஒரு வினாடியில் அவருக்கு, அந்த மதுமிதாவின் காதலன் முதுகைத்தான் காட்டிக் கொண்டிருந்ததால், அவனைப் பற்றி உயரமானவன், நளினமாக, நாகரிகமாக உடுத்தியவன் என்கிற சில உபரித் தகவல்கள் மட்டுமே மனதில் பதிந்தன. அந்த ஹாலின் உள்ளே செல்ல முயற்சித்தபோது, ஈஸ்வர் தடுக்கப்பட்டார்.

"எக்ஸ்க்யூஸ் மீ சார்.... இங்கே ஜோடியா வர்றவங்களுக்கு மட்டும்தான் அனுமதி" என்று சொல்லப்பட்டார்.

அசடு வழிய சிரித்தபடி ஹாலுக்கு வெளியே அவர் வர, கதவு தானாக மூடிக்கொண்டு, இசைக் கசிவைக் கைது செய்தது.

துர்க்கா அவருக்கு இட்ட உத்தரவு மதுமிதாவின் காதலன் யாரென்று அறிந்து வருவது.

அதைத் தெரிந்து கொள்ளாமல் போனால், 'நீங்க எதுக்குத்தான் லாயக்கு' என்று துவங்கி ஒரு மணி நேரத்திற்கு அர்ச்சனை நடக்கும்.

அந்த அர்ச்சனை எரிச்சல் ஒரு பக்கம் இருந்தாலும், மதுமிதா யாரை நேசிக்கிறாள் என்று தெரிந்து கொள்கிற ஆர்வம் அவருக்கே இருந்தது.

இது மிக முக்கியமான விஷயம்!

எல்லோருடைய கண்களிலும் மண்ணைத்தூவி விட்டு இரகசியமாகத் திருமணம் செய்து கொள்ளப்போகிறாள்.

அப்படி எதுவும் நடந்துவிட்டால் நிறைய பாதிப்புக்கள் இருக்கின்றன. திருமணத்திற்குப் பிறகு அவள் இன்னொருவனுக்குச் சொந்தம். அவள் மட்டுமா சொந்தம்? அவள் சுயமாகத் தன் உழைப்பால் சம்பாதித்த சொத்துக்கள், நகைகள் எல்லாமும்தான் சொந்தம்.

பிறகு... கணவனுக்கு விருப்பம் இல்லை என்று நடிப்பதை நிறுத்திக் கொள்கிறேன் என்பாள்.

மிகுந்த எச்சரிக்கையோடுதான் செயற்பட்டுக் கொண்டிருக்கிறாள் மதுமிதா. சொந்தப்படம் தயாரிக்க வேண்டும் என்கிற ஈஸ்வரின் யோசனையை துர்க்கா இரசித்த அளவிற்கு மதுமிதா இரசிக்கவில்லை.

நான்கு வருடங்கள் முன்பு அந்த யோசனை சொல்லப்பட்டு, பிறகு வற்புறுத்தப்பட்டு, வேறு வழியில்லாமல் சம்மதம் கொடுத்தாள் மதுமிதா.

'ஆனால் அதில் நான் நடிக்க மாட்டேன்' என்று குண்டு தூக்கிப் போட்டாள்.

கதாநாயகிக்குக் கொடுக்கும் சம்பளம் மிச்சம், கால்ஷீட் பிரச்சனைகள் இருக்காது என்று எடுத்துச் சொல்லி, சம்மதிக்க வைத்தார்கள்.

மதுமிதாவை மையப்படுத்தி அமைக்கப்பட்ட திரைக்கதை. தயாரிப்புச் செலவில் ஈஸ்வர் புகுந்து விளையாடினார். புரொடக்ஷன் மேனேஜர்கள், கேஷியரை எல்லாம் கைக்குள் போட்டுக் கொண்டு, தனியாக வங்கிக் கணக்கில் அந்தப் படத்தில் அடித்த தொகை பன்னிரெண்டு இலட்சம் போட்டு வைத்திருக்கிறார்.

படம் பார்த்துவிட்டு விநியோகஸ்தர்கள் அடிமாட்டு விலைக்குக் கேட்டார்கள். ஒரு வருடம் இழுபறியாகி, ஒரு வழியாக வியாபாரம் முடித்த பிறகு கணக்குப் போட்டுப் பார்த்ததில் நிகர நஷ்டம் இருபத்தி ஏழு இலட்சம் (அந்த பன்னிரெண்டு இலட்சம் கணக்குகள் வந்திருந்தால், நஷ்டம் பதினைந்து இலட்சமாகக் குறைந்திருக்கும்)

"சொந்தப் படம் எடுக்கிற வேலை வேணாம்னு சொன்னேனே கேட்டீங்களா? நான் எத்தனை படத்தில் ராத்திரி பகலா கஷ்டப்பட்டு சம்பாரிச்ச காசு! இப்படி ஒரே படத்துல வாரி விட்டுட்டீங்களே!" என்று மதுமிதா கத்தினாள்.

அதற்குப் பிறகு, இரண்டு வருடங்கள் சும்மா இருந்து விட்டு மறுபடி கொஞ்சம் பணம் ஊறியதில்....

இந்த வருட ஆரம்பத்தில் ஈஸ்வர் துர்க்காவிடம் பேச்சை ஆரம்பித்தார்.

"துர்க்கா, அனுபவம்ன்றது என்ன? பட்டுத் தெரிஞ்சுக்கறது தானே? ஒரு படம் எடுத்ததில பண நஷ்டம் ஏற்பட்டிருந்தாலும், நமக்குக் கிடைச்ச அனுபவம் இலாபம் தானே?"

"எதுக்கு இதைச் சொல்றீங்க?"

"இப்ப நமக்கு எதைச் செய்யக்கூடாதுன்னு ரொம்ப நல்லாத் தெரியும். இப்ப நம்ம மதுமிதா முந்தி விட இன்னும் பாபுலர்."

"என்ன சொல்ல வர்றீங்க?"

"இப்போ மட்டும் நாம ஒரு பூஜை போட்டோம்னு வையி, பூஜை அன்னிக்கே அவுட்ரைட்ல வியாபாரம் முடிச்சிடலாம். கைலேர்ந்து ஒரு பத்துப் பைசா கூடப் போட வேண்டியதில்லை. பூஜை அட்வான்ஸ்லயே முதல் ஷெட்யூல் ஷூட்டிங் ஆரம்பிச்சிடலாம்."

"மறுபடி படம் எடுக்கலாம்னு சொல்றீங்களா?"

"இதைப் புரிஞ்சுக்க உனக்கு இவ்வளவு நேரமாகுதா? மதுமிதா ஷூட்டிங்ல பிஸியா இருக்கா. நல்லாத்தான் இருக்கு வருமானம். உனக்கும், எனக்கும் என்ன வேலை இங்கே? நம்ம நிர்வாகத் திறமைக்குத் தீனி போட வேண்டாமா? வெறும் நடிப்பை மட்டும் நம்பிட்டிருந்தது அந்தக் காலம். திடீர்னு புதுசா நாலு பேர் ஃபீல்டுல வந்து, நம்ம மதுவோட மார்க்கெட் அடி வாங்கி, வீட்ல உட்கார வெச்சிட்டாங்கன்னா? அதை யோசிச்சுப் பாரு! அப்பவும் நமக்கு எந்த வருமானமும் குறையக் கூடாது. எந்த வசதியும் பாதிக்கக் கூடாது. அதுக்கு இப்படி ஏதாவது ஏற்பாடு பண்ணிக்க வேணாமா?"

"மதுமிதா ஒத்துக்க மாட்டாங்க!"

"நான் சொன்னா ஒத்துக்க மாட்டா... நீ சொன்னா ஒரு வாரம் மூஞ்சை தூக்கி வெச்சிட்டிருப்பா. அப்புறம், 'உங்க இஷ்டம்'னு சொல்லிடுவா. அவளுக்கு எதிர்கால பிளானிங் எதுவும் கிடையாது."

"ஏற்கனவே இருபத்தி ஏழு இலட்சம் நஷ்டங்க."

"அது அப்போ! நமக்கு அனுபவம் இல்லாததால எல்லாரும் ஏமாத்தினாங்க. பத்தாயிரம்கூட மதிக்க முடியாத செட்டுக்கு நாலரை இலட்சம்னு பில்லு போட்டு வாங்கினாங்க. அந்த மாதிரி நிறைய நடந்துடிச்சு. இப்ப நமக்கு இன் அண்ட் அவுட் தெரியுமே!"

"கைலேர்ந்து எதுவும் போட வேண்டியதில்லைன்னு சொல்றீங்களா?"

"இன்விடேஷன் அடிக்கிற செலவும், பூஜை செலவும் மட்டும்தான் நம்ம முதலீடு. மத்தபடி முழுக்க டிஸ்டிரிப்யூட்டர்ஸ் பணத்திலே இந்த ப்ராஜக்ட்டை முடிச்சிக் காமிக்கிறேன், பாரு."

துர்க்கா சமயம் பார்த்து, மதுமிதாவிடம் சொல்ல, அவள் மிகத் தீவிரமாக எதிர்த்தாள். மறுபடி வம்பை விலை கொடுத்து வாங்க வேண்டாம் என்றாள்.

ஒரு மாதமாக மாற்றி மாற்றி எடுத்துச் சொல்லி; அவளை வலுக்கட்டாயமாகச் சம்மதிக்க வைத்தார்கள்.

தமிழ், தெலுங்கு என்று இரண்டு மொழிகளில் பிரம்மாண்டமாக படத்தின் திட்டத்தை உருவாக்கினார் ஈஸ்வர்.

"இந்தப் படத்தில் நான் நடிக்கவில்லை" என்று கண்டிப்பாகச் சொல்லி மறுத்து விட்டாள் மதுமிதா.

> **கேள்வி:** திருமணத்திற்குப் பிறகு உங்கள் கணவர் அனுமதித்தால் தொடர்ந்து நடிப்பீர்களா?
> **பதில்:** நடிக்கிற சூழ்நிலையும், விருப்பமும் இருந்தால் நடிப்பேன். இல்லாவிட்டால் இல்லை. அதற்கான முதிர்ச்சி என்னிடம் இருக்கும்போது, அதை அவர் முடிவு செய்ய வேண்டும் என்று ஏன் எதிர்பார்க்கிறீர்கள்?
> —நடிகை ஊர்வசி ஒரு பேட்டியில்....
> 'வண்ணத்திரை' 2–8 மே 97 இதழில்

அதனால் தமிழ், தெலுங்கு இரண்டு இரசிகர்களும் ஏற்றுக் கொள்ளும் ஒரு முன்னணி நடிகா, முன்னணி நடிகையை புக் செய்தார்கள். பூஜை போடப்பட்டது.

ஈஸ்வர் எதிர்பார்த்தபடி எல்லாம் டிஸ்ட்ரிபியூட்டர்கள் பணத்தைக் கொண்டுவந்து கொடுத்து விடவில்லை.

ஒரு ஷெட்யூல் முடிந்ததும் ரஷ் பார்த்துவிட்டு, அட்வான்ஸ் தருவதாகச் சொல்லிவிட்டதால், ஃபைனான்சியர்களின் தயவை நாடி, பத்திரங்களை வைத்து, ஷூட்டிங் நடந்து கொண்டிருக்கிறது.



ஈஸ்வர் இதுவரையில் எட்டரை இலட்சம் தன் கணக்கில் வங்கியில் போட்டிருக்கிறார்.

மதுமிதா திருமணம் செய்து கொண்டால், இந்தப் புதிய படத்தின் தொடர்ச்சி பாதிக்கப்படும். தனிக் கணக்கின் வளர்ச்சியும் பாதிக்கப்படும். ஈஸ்வர் மனதில் வைத்திருக்கின்ற வேறு பல எதிர்காலத் திட்டங்களும் பாதிக்கப்படும்!

ஆகவே, ஈஸ்வருக்கு தனிப்பட்ட முறையிலும் மதுமிதாவின் காதலனை அறிந்து கொள்கின்ற ஆர்வம் இருந்தது.

டிஸ்கொதே ஹாலுக்கு வெளியே வராந்தாவில் மெதுவாக நடந்தார் ஈஸ்வர்.

எவ்வளவு நேரமானால் என்ன? திரும்பும் போது, ஹொட்டலின் வாசல் வழியாகத்தானே மதுமிதா வெளியேற வேண்டும்? அப்போது அவளருகில் அவனும் கண்டிப்பாக வருவான். அப்போது பார்த்துக் கொண்டால் போயிற்று.

ஈஸ்வர் அந்த ஹொட்டலின் ரிஷப்ஷன் பகுதிக்கு வந்தார். அங்கே கொத்துக் கொத்தாக நிறைய ஸோபாக்கள் போடப்பட்டிருந்தன.

அதில் ஒரு ஸோபாவில் வந்து அமர்ந்து கால் மேல் கால் போட்டுக் கொண்டார். அங்கிருந்த ஆங்கில நாளிதழை எடுத்து மடியில் போட்டுக் கொண்டார். படித்துக் கொண்டே காத்திருந்தார்.

ஒரு மணி நேரம் கழித்து கும்பலாக நிறையப் பேர் வெளிவாசல் நோக்கி நடக்க, கண்களைக் கூர்மைப்படுத்தினார். மதுமிதா அவர்களுக்கு நடுவில் நடந்து கொண்டிருந்தாள்.

ஆனால் அவள் யாருடனும் பேசாமல், யாரையும் தொடராமல் தனியாகச் சென்று கொண்டிருக்க, ஏமாற்றமடைந்தார்.

எழுந்து அவளைத் தொடர்ந்தார்.

அவள் தனியாகச் சென்று தன் காரில் அமர்ந்து புறப்பட, தன் உள்ளங்கையில் குத்திக் கொண்டார்.

'உள்ளேயே அவனைக் கழற்றி விட்டு விட்டாயா? நீ அவ்வளவு சாமர்த்திய சாலியா? சரி, இனிமேல் என் சாமர்த்தியத்தைப் பார்', கறுவிக் கொண்டார் ஈஸ்வர்.

(தொடரும்)

## பட்டுக்கோட்டை பிரபாகர்

---

## அனுபவம் புதுமை புதிய பகுதி

> எம்.ஜி.ஆர். என்ற மூன்றெழுத்து தொண்டர்களை கவர்ந்திழுத்தது. அவர்மீது உயிரையே வைத்திருந்தனர் மக்கள். அதற்கு ஏராளம் உதாரணங்கள் கூறலாம். அதில் ஒரு துளி இது.

## தலைவா கவலைப் படாதே!

சென்னை மவுண்ட் ரோடு தபால் தந்தி அலுவலகம், மாலை ஆறு மணி, வியர்வையால் நனைந்து, காய்ந்து விடைத்து நிற்கும் சட்டை, உள் டவுசர் வெளியில் தெரிய மடித்துக்கட்டிய லுங்கி, முகத்தில் சோகம், எப்படியும் மீட்டுவிடலாம் என்கிற நம்பிக்கை இழையோடும் கண்கள், இதற்கு முன் எத்தனையோ முறை உன்னை எமனிடம் இருந்து நாங்கள் மீட்டு வரவில்லையா, இந்த முறை மட்டும் உன்னை விட்டு விடுவோமா என்கிற சவால்தனம். இருந்தும் ஏதாவது உனக்கு ஆகிவிட்டால் எங்களைப் போன்ற ஏழை எளியவர்களுக்கு திசை ஏது, திக்கு ஏது, என்கிற ஏக்கம், பதறறம், பரபரப்பு...

ஒரு வழியாய் மனதை திடப்படுத்திக் கொண்டு உள்டவுசர் பாக்கெட்டில் இருந்த ஒரு ரூபாய், இரண்டு ரூபாய், பத்து ரூபாய் என்று கசங்கிச் சுருண்டு கிடந்த ரூபாய் நோட்டுக்களை தந்திக் கவுண்டரில் அள்ளிப் போட்டுக் கொண்டே... அந்த ரிக்ஷா ஓட்டி,

"இவ்வளவு தான்யா இன்னிக்குக் கலெக்ஷன் இதை எடுத்துக்க"

"யோவ் நீ என்ன இடம் மாறி வந்துட்டியா, நான் இல்லை உன் ரிக்ஷா ஓனர்"

"அய்யே துட்டு உனக்கில்லைப்பா, தந்தி கொடுக்க"

"எந்த ஊருக்கு"

"அமெரிக்காவிலுள்ள ப்ருக்ளின் ஆஸ்பத்திரிக்கு, "தலைவா கவலைப்படாதே, நாங்கள் உயிருடன் இருக்கும் வரை எத்தனை எமன்கள் சேர்ந்து வந்தாலும் உன்னை எங்களிடம் இருந்து பிரிக்க முடியாது." இதுக்கு எவ்வளவுப்பா காசு?"

"95 ரூபாய் சார்ஜ் ஆகுது"

"இந்தா எடுத்துக்க"

அதிகாரி அந்த அழுக்கு நோட்டுக்களை எண்ணிப் பார்க்கிறார், 78 ரூபாய் தான் இருக்கிறது. "இன்னும் 17 ரூபாய் வேண்டும்"

மீண்டும் பாக்கெட்டுக்குள் கையை விட்டுத் துழாவுகிறான். தம்படிகூட இல்லை, பாக்கெட் முனையில் ஏதாவது பதுங்கியிருந்தாலும் பதுங்கியிருக்கும் என்ற நம்பிக்கையில் தொங்கும் பாக்கெட்டையே டவுசருக்கு வெளியே இழுத்துப் பார்க்கிறான். பத்துப் பைசாகூட இல்லை.

பயணம் செய்கிறபோது பணத்துடன் பர்ஸை தொலைத்தவன் போல், தடுமாறி நின்றதை பார்த்து அவனுக்கு பின்னால் நின்ற க்யூ-

"யோவ் காசு இல்லைன்னா எடத்தைக் காலி பண்ணுயா. நாங்க தந்தி கொடுக்க வேணாம்."

நிலை தடுமாறிய ரிக்ஷாக்காரன் "அண்ணாத்தே கொஞ்சம் பொறுத்திரு. நாலு சவாரியில நீ கேட்ட துட்டை கொண்டு வந்துடுறேன், நீ வூட்டுக்கு போயிடாதே, ஆபிஸை எத்தனை மணிக்கு மூடுவே!"

"எப்பவும் மூடமாட்டோம். இந்தக் கவுண்டர் 24 மணி நேரமும் திறந்துதான் இருக்கும்."

"அதுபோதும் இன்னும் அரை அவால வந்துடுறேன்."

நேரத்தை வீணாக்காமல் ரிக்ஷாக்காரன், வெளியேறுகிறான்.

"நீங்க எந்த ஊருக்கும்மா தந்தி கொடுக்கணும்."

காலிப் பூக்கூடையுடன் க்யூவில் நின்ற பூக்காரப் பெண்மணியிடம் கேட்கிறார் தந்தி அலுவலர்.

"ப்ருக்ளின் ஆஸ்பத்திரிக்கு"

அடுத்து நீங்க, "ப்ருக்ளின் ஆஸ்பத்திரிக்கு" அடுத்து நீங்க, இப்படி நூறு பேருக்கு மேற்பட்ட கைவண்டி இழுப்போர், நடைபாதை கடைக் காரர், பூ விற்போர் என்று எல்லோருமே ப்ருக்ளின் ஆஸ்பத்திரியின் பெயரையே ஒழுங்காக உச்சரிக்க முடியாத பாமரத்தனமான நிலையில், ஒரு நாள் முழுக்க வியர்வை சிந்திய காசை வீட்டுக்கு எடுத்துச் செல்லாமல், ஒரு தலைவனின் உயிருக்காகத் தன்னை வருத்தி தவம் கிடக்கிறார்களே!

இப்படிப்பட்ட தலைவனைப் பெற்ற தமிழகம் என்ன தவம் செய்ததோ என்று தந்தி அலுவலர் வியக்கிறார்.

அரை மணி நேரத்திற்குள் வருவதாகச் சென்ற ரிக்ஷாக்காரர் ஒரு மணிநேரம் கழித்து வருகிறார்.

"இந்தா அண்ணாத்தே நீ கேட்ட 17 ரூபாய்" என்று,

நான்கு ஐந்து ரூபாய் நோட்டுக்களை கொடுக்கிறான்.

பரிவுடன் பதிவு செய்து கொண்ட தந்தி அலுவலர்.

"ஏம்பா நான் கேக்குறேன்னு தப்பா நினைக்காதே. நீ தந்தி கொடுக்கறதுனால என்ன பிரயோஜனம். தலைவர்களெல்லாம் நிறையச் சம்பாதிச்சு ரொம்ப உயர்ந்து இருக்காங்களே, உங்களை மாதிரித் தொண்டர்கள் எல்லாம் மூடத்தனமா ஏன் இப்படி செயல்படுறீங்க!

அவுங்கள்ளாம் உனக்கு ஒரு டீயாவது வாங்கி கொடுத்திருப்பாங்களா?"

வேறு ஒரு நேரமாக இருந்திருந்தால் தந்தி அலுவலர் தாறுமாறாக்கப் பட்டிருப்பார். நல்லவேளை ரிக்ஷாக்காரன் பொறுமையாய்ச் செயல்பட்டான்.

"சார் இதுவரைக்கும் ஒரு டீயாவது வாங்கி கொடுத்திருப்பாங்களான்னு கேட்டீங்க, மத்த தலைவனைப்பத்தி எனக்குத் தெரியாது. ஆனா என் தலைவன் அப்படிப்பட்டவன் இல்லை. உங்களுக்குத் தெரியுமா? என் குடும்பம் மூணுவேளை சோறு துண்றதே என் தலைவனாலதான்."

"என்னப்பா சொல்றே?"

"ஆமா சார்! இந்த ரிக்ஷா என் தலைவன் வாங்கிக்கொடுத்தது. அந்தத் தலைவனுக்காக என் குடும்பம் ஒரு நாள் பட்டினி கிடந்தா செத்தா போயிடும்."

அதிகம் பேசவில்லை ரிக்ஷாக்காரன் விருட்டென்று கிளம்பிவிட்டான்.

தந்தி அலுவலரோ திகைத்து நிற்கிறார். அப்பொழுது விவிதபாரதியில், "தர்மம் தலைகாக்கும். தக்க சமயத்தில் உயிர் காக்கும்" பாடல் ஒலித்துக்கொண்டிருந்தது.





படிப்பகம்

www.padippakam.com

# ஒளி விழா



**ச. முருகானந்தன்**

நத்தார்ப் பண்டிகை வரப் போகிறது. ஊர் எல்லாம் இப்பொழுதே குதூகலம் ஆரம்பித்துவிட்டது. கடைகளில் வண்ண வண்ண கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்கள் கண்ணைப் பறித்தன. மனுக்குலத்தில் இரட்சகரான இயேசுபிரான் அவதரித்த நாளை உலகெங்குமுள்ள கிறிஸ்தவர்கள் ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறார்கள்.

ஐயனார்புரம் ஆரம்பப் பாடசாலையின் ஆசிரியர்களும், அந்தப் பகுதியில் வாழும் கிறிஸ்தவப் பெற்றோர்களின் விருப்பத்திற்கு இணங்க, ஒளிவிழா நிகழ்வொன்றைப் பாடசாலையில் நடாத்திட . ஒழுங்கு செய்து கொண்டிருந்தார்கள்.

ஆங்கிலத்தில் வரவேற்புரை நிகழ்த்த அகல்யா என்ற மாணவிக்கு மேரி ரீச்சர் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்தபோது, விமலா ரீச்சர் அங்கே வந்தார்.

"ஒளி நடனத்திற்கு மாணவர்களைத் தெரிவு செய்து விட்டேன்"

"யார் யாரைத் தெரிவு செய்துள்ளீர்கள்?" மேரி ரீச்சர் நிமிர்ந்து நோக்கினார்.

"ஷாலினி...டொக்டருடைய மகள்... மற்றது அதிபருடைய மகள் லில்லி... மற்றது சீ.ஏயுடைய மகள் அஞ்சலீன், வழக்கறிஞருடைய மகள் பிரியா..." என விமலா ரீச்சர் பட்டியலை வாசித்தார்.

"அனுசுயாவைத் தெரிவு செய்யவில்லையா...? நன்றாக நடனமாடக்கூடிய பிள்ளையாயிற்றே?"

விமலா ரீச்சர் தலையைச் சொறிந்தார்... "அனுசுயா மீன்கார அந்தோனியின்ர பிள்ளை..."

"அதற்கென்ன... நாங்கள் திறமையைத் தானே பார்க்க வேண்டும்?" மேரி ரீச்சரின் சீற்றத்தில் விமலா ரீச்சர் தடுமாறினார். "அதுக்கில்லை... இந்த டான்ஸுக்கு 'பார்ட்டி புறொக்' வேணும்... அனுசுயாவுடைய பெற்றோர் வசதி குறைந்தவை.... அவ்வளவு செலவளிச்சு உடுப்புத்தைக்க மாட்டினம்...அதுதான்..."

விமலா ரீச்சரின் கூற்றிலுள்ள நியாயம் தெரிந்தது. எனினும் அனுசுயாவை விட்டுவிட மேரி ரீச்சருக்கு மனம் வரவில்லை. அனுசுயா வறிய குடும்பத்தில் பிறந்தாலும் அழகி. நாட்டியத்திற்குப் பொருத்தமானவள். கூடவே திறமைசாலி. படிப்பிலும் சரி, பிற விடயங்களிலும் சரி முதல் மாணவி. அந்தப் பாடசாலை வரலாற்றிலேயே ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் தேறிய முதலாவது மாணவி. தமிழ்த்தினப் போட்டிகளிலும், விளையாட்டுப் போட்டிகளிலும் பரிசு பெற்று, பாடசாலைக்கு பல தடவைகள் நல்ல பெயரை வாங்கித் தந்தவள்.

'எப்படியும் அனுசுயாவை ஒளிநடனத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.' என எண்ணிய மேரி ரீச்சர் அனுசுயாவைக் கூப்பிட்டார்.

"என்ன ரீச்சர்...? வரச் சொன்னீர்களாம்.."

"ஓம்... உம்மை ஒளி நடனத்திற்கு எடுக்கலாம்.. சட்டை தைக்க வேணும்... ஆயிரம் ரூபா வரும்..."

"....."

அனுசுயாவின் முகம் சுருங்கியது. அவள் பதிலேதும் சொல்லாமல் நின்றாள்.

"நாளைக்கு அம்மாவிடம் கேட்டுக் கொண்டு வாரும்..." மேரி ரீச்சர் அன்போடு கூறினார்.

அனுசுயா சிறியவளானாலும் வீட்டு நிலமை அவளுக்குப் புரியும். தினமும் குடித்துவிட்டு வரும் அப்பா, சமையலுக்கே அரிசியின்றித் திண்டாடும் அம்மா, இந்த நிலையில் கிறிஸ்மஸ் கொண்டாட்டமே வீட்டில் இருக்காது... பார்ட்டி புறொக்கைக் கற்பனை பண்ணிப் பார்க்க முடியுமா என்ன?

இருந்தும் அம்மாவிடம் கேட்டாள்.

அம்மாவின் கண்கள் பனித்தன.

"அனு... கிறிஸ்மஸ் நாளில் அணிய புத்தாடை உனக்கு வாங்கித்தரவே வழியின்றி நான் திண்டாடுறன்... இந்த நிலையில் விலையுயர்ந்த நாட்டிய உடைக்கு நாங்கள் என்ன செய்யுறது..? உனக்கு நாட்டியம் வேண்டாம்..."

அனுசுயாவுக்கிருந்த அற்ப சொற்ப நம்பிக்கையும் சிதைந்தது. நாட்டியம், நடனம், என்றால் அவளுக்கு கொள்ளை ஆசை. ஆசைகள் எல்லாம் நிறைவேற பணம் வேண்டுமே! கவலையில் அனுசுயா வாடிப் போயிருந்தாள்.

மகளின் துயரம் அம்மாவுக்குப் புரிந்தது. 'கர்த்தரே.. பலவித திறமைகளையும் எனது மகளுக்குக் கொடுத்த நீ, ஏழ்மையையும் கொடுத்து விட்டாய்... நான் எப்படிப் போனாலும் பரவாயில்லை எனது பிள்ளை... அவளது பிஞ்சு மனம் வாடாமல் பார்த்துக் கொண்டால் போதும்...' மனமுருக வேண்டினாள்.

அவள் இரவுச் சமையலில் ஈடுபட்டிருந்தபோது அனுசுயா குதூகலத்துடன் ஓடி வந்தாள். "அம்மா... இந்தப் பதக்கம் இருக்கு..." புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தபோது கல்விப் பணிப்பாளரினால் அவளுக்கு அணிவிக்கப்பட்ட பதக்கம் அது!

அம்மாவுக்கு நெஞ்சை அடைத்தது. "எனது நகைகளை எல்லாம் ஒவ்வொன்றாக விற்று அழிச்சுப்போட்டம்...இது உனக்குக் கிடைத்த பதக்கம்... இதை ஒருநாளும் விற்கக்கூடாது...இது ஒரு பரிசு... உனக்குப் பெருமை சேர்க்கிற பரிசு... கொண்டுபோய் உள்ளே வை... அப்பா கண்டால் உதையும் விற்றுக் குடிச்சிடுவார்..."

அம்மா இதைச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே மேரி ரீச்சர் அங்கே வந்தார்.

"வாங்கோ ரீச்சர்..."

"நீங்கள் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டேன். நீங்கள் கஷ்டப்படவேண்டாம். எங்கேயாவது இரவல் வாங்கி அணிந்து நடனமாடலாம்..."

அம்மாவின் முகம் மலர்ந்தது. அனுசுயாவுக்கோ இரட்டிப்பு மகிழ்ச்சி.

மறுநாள் பொறியியலாளரின் மனைவியிடம் சென்று கேட்டாள். அவளோ 'தங்களிடம் இல்லை' என்று பொய்கூறி அனுப்பி விட்டாள். அம்மாவின் மனம் வேதனைப் பட்டது. எமது தகுதிக்கு மேலான இடத்தில கேட்டது என்னுடைய பிழை என உணர்ந்தவளாக, அடுத்தவீட்டு அன்ரனற்றிடம் கேட்டாள். அவளும் வைத்துக்கொண்டு "இல்லை" என்று கூறிவிட்டாள். தனது மகளை நாட்டியத்தில் சேர்க்காத கோபம் அன்ரனற்றுக்கு.

அம்மா வெறுங்கையுடன் வந்ததைக் கண்டதும் அனுசுயாவின் அழகு வதனம் வாடிவிட்டது. மறுநாள் மேரி ரீச்சரிடம், "நான் நடனத்திற்கு வரவில்லை ரீச்சர்... சட்டை கிடைக்கயில்லை..." என்று குரல் தளதளக்கக் கூறினாள்.

"நீ கவலைப்படாத... நடனத்தைப் பழகு..." என்று ஆறுதல் கூறி அனுசுயாவை அனுப்பி வைத்த மேரி ரீச்சர் பலவாறாக யோசித்தாள்.

அன்றையதினம் இரவு அனுசுயாவின் வீட்டு வீதி வழியாக 'கரோல்' குழுவினர் வந்தார்கள். அனுசுயாவின் வீட்டிற்கு வந்த கிறிஸ்மஸ் தாத்தா துள்ளித் துள்ளி ஆடினார். அனுசுயாவும் அவரோடு சேர்ந்து குதூகலமாக ஆடினாள்.

அவர்கள் தமது கீதங்களை இசைத்த பின்னர் விடைபெற்றனர். போகும்போது கிறிஸ்மஸ் தாத்தா ஒரு பார்சலை அனுசுயாவிடம் கொடுத்தார்.

நன்றித் தாத்தா!

அவர்கள் விடைபெற்றுச் சென்றதும்,

அம்மாவும் அனுசுயாவும் ஆவலுடன் பார்சலைப் பிரித்தார்கள்.

'பார்ட்டி புறொக்!'

ஓ...அந்த அற்புதமான வேலைப்பாடுகள் நிறைந்த தங்கநிற ஆடையைக் கண்டதும் அவர்களால் தமது கண்களையே நம்ப முடியவில்லை!

மறுநாள் பாடசாலைக்குச் சென்ற அனுசுயா குதூகலத்துடன் மேரி ரீச்சரிடம் ஓடினாள். "ரீச்சர், சட்டை கிடைச்சிட்டுது... இனி நான் நல்லா நடனமாடுவன்."

"எப்படிக் கிடைச்சுது?" என்றார் சிரித்தபடி மேரி ரீச்சர்.

"கிறிஸ்மஸ் தாத்தா கொண்டுவந்து தந்தவர்...அதுசரி ரீச்சர்,எனக்கு புறொக் தேவை என்று அவருக்கு எப்படித் தெரியும்...?"

"நீர் கர்த்தரிடம் வேண்டியிருப்பீர்...அது அவருக்குக் கேட்டிருக்கும்...அதுதான் கிறிஸ்மஸ் தாத்தா ஊடாக அனுப்பியிருக்கிறார்...."

அனுசுயா நாணத்துடன் சிரித்தாள்.

எல்லோரும் ஆவலுடன் எதிர்ப்பார்த்த ஒளி விழாவும் வந்தது. ஆசிரியைகள், மாணவிகள், பெற்றோர்கள் எல்லாம் வண்ண வண்ணப் புத்தாடைகளில் பளிச்சிட்டனர். நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றாக நடந்தன.

அடுத்து அனுசுயா பங்குபற்றும் ஒளி நடனம்.

இசைக்கு ஏற்றவாறு சிந்து, பிரியங்கா, கயல், துஷ்யந்தி, அனுசுயா எல்லோரும் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்தனர். அற்புதமான ஆடையில் மிகச் சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த அனுசுயாவை, சாதாரண புடவையில் நின்றிருந்த மேரி ரீச்சர் பெருமிதத்துடன் இரசித்துக் கொண்டிருந்தார்.

"என்ன ரீச்சர், ஒளி விழாவுக்குப் புதுச் சேலை வாங்கேல்லையா.." விமலா ரீச்சரின் கேள்வியில் நிமிர்ந்த மேரி ரீச்சர். "அடுத்த முறை வாங்குவம்.." என்றார்.

விமலா ரீச்சர் எதுவும் புரியாமல் சிரித்தார். அருகே அமர்ந்திருந்த அனுசுயாவின் அம்மாவுக்குப் புரிந்துவிட்டது. மேரி ரீச்சரை நன்றியுடன் நோக்கினார். அவரோ இன்னமும் நடனத்தை இரசித்துக் கொண்டிருந்தார்.

# முடியும் சோடியும்

**"சொல்லிறது வேறு, செய்யிறது வேறு அவன் யார் நாம யார்?"**

கட, கட, கட.......

இது கல்யாணியின் தையல் மெஷின் ஓசை. ஓய்வில்லாத ஓட்டம். அதன் விசைப் பலகையில் அவள் அழகிய கால்கள் இரண்டும் துரிதகதியில் மேலும் கீழுமாய் அசைந்தாடியது. கல்யாணியின் வெண்டிக்காய் விரல்கள் துணியை லாவகமாகத் தள்ளிக் கொண்டிருந்தன. இந்த மெஷினுக்கு சொந்தக்காரி கல்யாணியேதான். மெஷின் பழைய தானாலும் அது விசுவாசமாக உழைக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை.

கல்யாணி நிமிர்ந்து கடிகாரத்தைப் பார்த்தாள். அது ஓட மறந்து நின்றது. கல்யாணி விழித்திருந்து எப்படியோ தைத்து முடித்தாக வேண்டும். ஊரெல்லாம் உறங்கிவிட்டது. கொல்லைப்பக்கமிருந்து நாயின் ஊளைச் சத்தம் இடையிடையேகேட்டது. பல்லி ஒன்று சுவரில் இருந்து ச்.ச் என்று எதையோ சொல்லியது.

கல்யாணி புறங்கையால் கண்ணைக் கசக்கிவிட்டு அவள் தங்கை நளாயினி படுத்திருந்த அறைக்குள், அடிமேல் அடிவைத்துச் சென்றாள்.

அவள் தங்கையின் தூக்கம் கலைந்துவிடுமோ என்ற கவலையும் கூடவே இருந்தது. அங்கே கல்யாணி கண்ட காட்சி அவளை நிலை குலையவைத்தது.

நளாயினி கட்டிலில் தன்கைகளால் முழங்காலை அணைத்து உட்கார்ந்திருந்தாள். கல்யாணி அவசரமாக விளக்கேற்றினாள். நளாயினியின் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது!

நளாயினி கல்யாணியைச் சற்றுமே எதிர்பார்க்கவில்லை. கல்யாணி பதறியவளாய்த் தன் தங்கையை அணைத்து, "என்னாச்சு? சுகமில்லையா? காசு தேவையா?" அடுக்கடுக்காகக் கேள்விகளை அள்ளி வீசினாள். தன் முந்தானைச் சேலையால் தங்கையின் கண்ணீரை ஒற்றி எடுத்தாள். "நளாயினி நீ ஏன் அழுறே" பரிவோடு கேட்டாள்.

"அக்கா, நம்மைப் பெத்தவங்க செத்த நாளிருந்து என்னை வளத்து படிக்க வச்சி ஆளாக்க நீ பட்ட பாடிருக்கே..." நளாயினி விம்மினாள்.

கல்யாணி ஒன்றும் புரியாமல் குழம்பினாள். "அதுக்காக நடுராத்திரியில் உக்காந்து அழுறதா? பேசாமப் படுத்துத் தூங்கு. உனக்கு ஒரு கால்கட்டுப் போட்டா எல்லாம் சரியாப் போயிடும்" சொல்லி விட்டு எழும்பப் போன கல்யாணியைப் பலவந்தமாய் இருத்தினாள் நளாயினி. அவள் தலை கவிழ்ந்து முகம் சிவந்தாள்.

"நா... ஒருத்தரக் காதலிக்கிறன்.."

"யாரந்த ஒருத்தர் சொல்லேன்" கல்யாணியின் உதட்டில் புன்னகை தவழ்ந்தது.

"அக்கா உனக்குத் தெரிஞ்சவர்தான், நீ யாரை நல்லவன், படிச்சவன், பணிவுள்ளவன், புத்திசாலி எண்டு அடிக்கடி சொல்லுவியோ..."



**ரூபராணி**

கல்யாணிக்கு நெற்றிப்பொட்டில் அடித்தது போலிருந்தது.

"ஆமா.. வண்ணாரப் பெடியன் கோபாலைப் பற்றித்தான் சொல்லுறன்."

"கோபாலத்தான் விரும்புறன். கெம்பஸ்ல படிக்கிறப்போ..." நளாயினியிடமிருந்து தட்டுத் தடுமாறி வந்த வார்த்தைகள் முற்றுப் பெறு முன்,

"ஐயோ கடவுளே...!" கல்யாணி கதறினாள்.

"அக்கா, கோபால் படிச்சவன், பட்டம் பெற்றவன் நல்லவன் அதுவும் மிகமிக நல்லவன் எண்டு நீ சொல்லிப் பெருமைப் பட்டு நான் பாத்திருக்கேனக்கா" நளாயினி பரிதாபமாகக் கூறினாள்.

"சொல்லலாம், அதுக்காக அவனைக் கலியாணம் பண்ணிக்கிறதா? சொல்லிறது வேறு, செய்யிறது வேறு அவன் யார்? நாம யார்? இந்தச் சமூகம் நம்மை மதிக்காதுடி', மிதிக்கும்."

"அக்கா இப்பெல்லாம் சாதியை யார் பாக்கிறார்" நளாயினி கேட்டுவிட்டாள்.

"யார் பாக்கிறாவா?"

"இந்தத் தெருவுக்கெல்லாம் சலவை செய்யிறவன் கோபாலின்ர அப்பன் அருணாசலம். 'சாதி ஒழிக' எண்டு படிச்சவங்க மேடையிலே சொல்லுவாங்க, ஆனா அருணாசலத்தோட பந்தி அமர்ந்து சாப்பிடுவாங்களா? நீ நினைக்கிறமாதிரி இல்ல. இந்த சமூகத்தின் பார்வையில கோளாறு இன்னுமே மாறல்ல."

நளாயினி மௌனமாய் அழுதாள்.

கல்யாணி தொடர்ந்தாள்...

"இதையும் கேள்..கோபாலிட தங்கச்சி கௌரியின்ர,கலியாணம் போனவாரம் நடந்தது ஞாபகமிருக்கா? இந்தத் தெரு விலுள்ள அத்தனைபேரும் போனோமே, அங்க யாராவது கை நனைச்சதப் பாத்தியா? உன்னையும் என்னையும் சேத்துத்தான் சொல்லிறன். அருணாசலமும் லெட்சுமியும் சாப்பிடச் சொல்லி கைகூப்பிக் கெஞ்சிக் கேட்டாங்களே, ஏதேதோ சாட்டுச் சொல்லி எல்லாரும் நழுவியது தெரியாதா?" சொல்ல வேண்டியதெல்லாவற்றையும் சொன்ன திருப்தியோடு நளாயினியை ஏறெடுத்தாள் கல்யாணி.

கோபாலுக்கும் கல்யாணிக்குமிடையில் தூண்டில் புழுவாய்த்துடித்தாள் நளாயினி, "அக்கா, அக்கா." என்று புலம்புவதைத் தவிர அவளுக்கு வேறு வழி தெரியவில்லை.

"இந்தாபார் நளாயினி, சதுர டப்பாவுக்கு வட்ட மூடிபோட்டுமூட முயற்சி பண்ணாதே. மூடியைப் போலதான் சோடியும் முக்கியம். புரியுதா?" உறுதியாகக் கூறிவிட்டு அங்கிருந்து நகர்ந்தாள் கல்யாணி.

நளாயினி அழத் தொடங்கினாள். என்ன சமூகம் இது?

கட கட கட.....

கல்யாணியின் மெஷின் ஓசை நளாயினியின் காதில் தெளிவாகக் கேட்டது. □

# காதல் 10 வகை

**காதல் ஒரு விளையாட்டு:-**

இப்படிக் கருதுபவர்கள் காதலில் ஊடல் சுகம் காண்பவர்கள். காதலன், காதலி இருவருமே இந்த மனோநிலையில் இருந்தால், இவர்களது திருமண வாழ்க்கை ஏட்டிக்குப்போட்டிதான்.

❤❤

**காதலிக்கப்படுவதைவிட காதலிப்பதே சிறந்தது:-**

கணவன், மனைவி இருவருமே ஒரு

வரை ஒருவர் காதலிப்பதற்கும், காதலிக்கப்படுவதற்கும் உரியவர்கள். இதில், ஒரேமாதிரி எண்ணம் இருவருக்கும் வந்துவிடக்கூடாது. இருவரில் ஒருவர் காதலிக்கவும் மற்றவர் காதலிக்கப்படவும் வேண்டும் என்ற எண்ணம் இருந்தால், இல்லறம் இனிக்கும்.

❤❤

**காதலுக்கு சமத்துவம் தேவை:-**

காதலில் சமத்துவம் தேவை. ஆனால் அதுவே சர்ச்சையாகி விடக்கூடாது. ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுக்கும் மனநிலையை வளர்த்துக் கொண்டால், அதுவே இல்லற இன்பத்தின் ஊற்றுக்கண்.

❤❤

**காதல் உழைப்பைக் கொண்டது:-**

அன்பு மிகுதியால் துணைவன் அல்லது துணைவியை மகிழ்விக்க கடினமாக உழைப்பது உண்டு. ஆனால் அதுவே அளவுக்கு அதிகமாகிவிட்டால் தனித்தன்மையை இழக்க நேரிடும்.

❤❤

**காதலுக்குத் தேவைப்படுவது முழுமையான உண்மை:-**

இல்லற வாழ்க்கையில் கணவனுக்கும் மனைவிக்கும் இடையே ஒளிவு மறைவு



இருக்கக்கூடாது. ஆனால் அதற்கு ஒரு எல்லைக்கோடு அவசியம். அந்த எல்லையை இருவரில் ஒருவர் மீறினாலும் கசப்பு உணர்வு ஏற்பட்டு, அதுவே இருவரது மன முறிவுக்கு காரணமாகிவிடும். எனவே காதலில் உண்மை அவசியம். அதைவிட மறைவான எண்ணங்கள் முக்கியம்.

❤❤

**செய்தி பரிமாற்றமே காதலுக்கு அடிப்படை:-**

"நான் உன்னை என் உயிருக்கும் மேலாக நேசிக்கிறேன்" என்று ஒருவரை ஒருவர் வார்த்தைகளில் பரிமாறிக் கொள்வது, காதலில் வாழ்க்கையை ஏற்படுத்தும். ஆனால் வார்த்தைகளைவிட செயல்களே காதலை நிலைப்படுத்தும் சக்தி படைத்தவை. இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு உண்டாக்கும் விஷயங்களைப் பற்றி அதிகம் பேசாமல் இருப்பது நல்லது.

❤❤

**காதல் என்பது ஒரு இரசாயன மாற்றம்:-**

'கண்டதும் காதல்' ஏற்படலாம். ஆனால், காதல் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டது அல்ல. எனவே காதலை 'இரசாயன மாறுதல்' என்று மட்டுமே நினைத்தால் காதலின் நளின உணர்வுகள் மறைந்து, சுவையற்றதாகிவிடும்.

❤❤

**காதல் ஒரு வியாதி:-**

நாம் ஒருவரை மனதார காதலிக்கும் போது, அவரை பல விஷயங்களில் சார்ந்து இருக்க வேண்டியது உண்மை. நமது வாழ்க்கையை, உணர்வுகளை அவர்கள் வசம் ஒப்படைக்கிறோம். இதுவே இல்லற வாழ்வின் ஆரோக்கியத்திற்கு காரணமாக அமையும். எனவே, காதலை வியாதி என்று புலம்புவது அர்த்தம் அற்றது.

❤❤

**காதல் ஒரு பொறுப்பு:-**

காதல் ஒரு மென்மையான உணர்வேயன்றி ஒரு பொறுப்பு அல்ல. காதலினால் திருமணம் என்னும் பெரிய பொறுப்பு ஏற்கப்படுகிறது. எனவே பொறுப்பும் காதலின் ஒருமுகம். அதுமட்டும் காதல் அல்ல.

❤❤

**வீயெஸ்**

**காதல் என்பது தியாகம்:-**

காதலில் தியாகம், விரும்பி செய்யப்பட்டால் மட்டுமே இனிமை தரும். ஒருவர் மற்றவரின் விருப்பு வெறுப்புக்களை தனதாக எண்ணி மகிழலாம். ஆனால் அதற்காக, தனது சொந்த உணர்வுகளை புறக்கணிக்கத் தேவை இல்லை. கட்டாயத்தினால் செய்யப்படும் தியாகம் கசப்பையே தரும்.



படிப்பகம்

www.padippakam.com

# இன்னும் மறக்கவில்லை!

## இலக்கிய நயம்

மாவீரன் நெப்போலியன்
வாழ்க! வாழ்க!

வானை முட்டும் கோஷங்கள்
செவியைத் தட்டாமல் போகுமா?

எல்லோர் செவியிலும்
விழுந்தது போலவே
அவள் செவியிலும்
வாழ்த்தொலி புகுந்தது!

விழி அருவியானது
ஆனந்தக் கண்ணீர்!
உருண்ட கண்ணீர்த்துளி
மார்பைத் தொட்டதும் சுட்டது!

நெப்போலியனும்தான்
அவளைத் தீயாய் சுட்டுவிட்டான்!

சுட்டுக் கொண்ட பின்தான்
தித்தித்தாலும்-அவன் உறவு
தீதான் என்று தெரிந்தது!

நாளை அவனுக்கு மணநாள்
விடிந்தால் கல்யாணம்!

அவளுடன் எழுதிய
காதல் கதைக்கு
முற்றுப்புள்ளி வைத்துவிட்டு
இன்னொருத்தியுடன்
புதிய காதல் கதைக்கு
முதல் புள்ளி வைக்கப்போகிறான்!

யாருக்கு இந்த
இரகசியம் தெரியும்?

மாவீரன் கதையில்
ஒரு கரும்புள்ளி
இருக்கிறதே!
யார் கண்ணுக்கு
அந்தப் புள்ளி தெரியும்?

கட்டியணைத்த கரத்தால்
உறவை
வெட்டிவிட்டுப் போனவன்!

முத்தமிட்ட உதட்டால்
பொய்யை
துப்பிவிட்டுப் போனவன்!

தூங்காமல்
நீண்ட இரவுகளில்
நீங்காமல் கூடியவன்!

தாங்காமல்
துவண்ட போதும்
தூங்கவிடாமல் துரத்தியவன்!

ஏங்காமல்
ஒருநாளும் இருந்ததில்லை
என்று தினமும்
தயங்காமல் நாடியவன்!

"பால் பழம் வேண்டாம்
வேல் விழியாள் நீயிருக்கையிலே!
பஞ்சணை வேண்டாம்
கொஞ்சும் அஞ்சுகம் இருக்கையிலே!

உலகமே வேண்டாம்
குலவும் கோகிலம் இருக்கையிலே!"

சொன்னது மறந்து போனான்
சொல்லாமல் பறந்து போனான்!
கொல்லாமல் கொன்று விட்டான்!

போர் என்றால்
விளையாட்டென்றான்!

காதலும்
விளையாட்டாச்சோ?

"எழுதாத நூல்
உந்தன் மேனி" என்றான்
புரட்டிவிட்டு
ஏன் தூக்கி எறிந்துவிட்டான்?

பூ பிஞ்சானால்
காயாகும்!

மனம் நஞ்சானால்
நோயாகும்!

நோய் கொண்டோர்
சகவாசம்
கொண்டோரும்
நோயுறுவர்!

நோயுற்றாள்
நூல் போல் தேயுற்றாள்!

வீரன் என்பர்-அவன்
கோழை!



காதல் களத்தில்
புறமுதுகில் குத்தியவன்!

வாய் நிறைய பொய்பேசி
வஞ்சகத்தால் வென்றவன்!

அடைக்கலமான
அழகுப் புறாமீது
அம்பெய்து கொன்றவன்!

கூடிக் களித்த மலர்
வாடிக் கிடக்குதிங்கே!

தேன் ஊறிக் கொடுத்த இதழ்
ஏங்கிக் கிடக்குதிங்கே!

விம்மி எழுந்த தனம்
தீயில் வேகுதிங்கே!

தாங்கிச் சுமந்த மேனி
ஏங்கித் தவிக்குதிங்கே!

கூடிக் களித்த வண்டு
வேறு மலர் தேடுதங்கே!

தேன் குடித்த உதடு
வேறு இதழ் தேடுதங்கே!

தனம் தொட்ட விரல்கள்
வேறு தனம் தீண்டுதங்கே!

தணலிட்ட புழுவானாள்
தீயிலிட்ட மெழுகானாள்!

மாவீரன் நெப்போலியன்
மறுபக்கம் யாரறிவார்?

வரலாறு
அவன் பெயர் கூறுமாம்
அவன் வல்லூறாய் இருந்ததையும்
கூறுமா?

"சரசமாடிவிட்டு
சதி செய்து போனவனை.
அரசனிடம் காட்டிக் கொடு!

அரசனின் மகளை
மணந்து கொண்டால்
உயரலாம் என நினைக்கும்
உள்ளத்தால் தாழ்ந்தவனை
காட்டிக்கொடு!"

தோழிகள்
யோசனை சொல்லினர்!
செவியில் ஏறவில்லை!

"அவன் வெறுத்துப் போனாலும்
நான் வெறுத்து போகவில்லை!"

"முள்ளை
முள்ளால்தான் எடுக்க வேண்டும்!"
தோழிகள் கூறினர்

"காதலை
வாளால் அறுக்கலாமா?"
வினா தொடுத்தாள்.

"காதல் துரோகிகளை
மன்னித்தால்
காதல் வரலாறு
களங்கப்படாதா?"


"துரோகம் இல்லாத
வரலாறு கிடையாது!
காதல் வரலாறும்
அப்படித்தான்!
இனிவரும் காதலர்கள்
ஏமாறாதிருக்க
முன் உதாரணங்கள்
இந்த துரோகங்கள்தானே?"

"மாவீரன் நெப்போலியன்
வாழ்க வாழ்க!"
வெளியே வாழ்த்தொலி!

"உனக்கேனடி
ஆனந்தக் கண்ணீர்?"

"துரோகி அவன்தான்!
நான் இன்னமும் நேசிக்கிறேன்!
உடன் உதற இயலவில்லை!

## ரசிகன் தருவது



அவன் புகழ் கேட்டவுடன்
செவி குளிர்கிறது!
சிந்தை இனிக்கிறது!
நினைப்பதைவிட
மறப்பதுதான் கடினம்
முயற்சிக்கிறேன்!"

பனித்தன விழிகள்
கனத்தது மனம்.

அன்பில்லா காதலனை
ஊர் புகழக் கேட்டு
உள்ளம் மகிழும் விந்தையை
திருவள்ளுவர் தருகிறார்;

"நசை இயார் நல்கார்
எனினும் -அவர் மாட்டு
இசையும் இனிய செவிக்கு"

குறள்-1199 அதிகாரம்-120

---

கத்தர்களும், ஊழியர்களும் இவர்களைவிடச் சிறப்பாக நிர்வாகம் நடத்துகிறார்கள். விளக்குப் போட்டுக் கொண்டும்தானே இருக்கிறார்கள். அதையும் கெடுத்து குட்டிச் சுவராக்கப் போகிறார்களாக்கும்!

—●●—

★ தற்பெருமை பேசுகிறவர்களின் வாயை அடைக்க என்ன செய்யலாம்?

எஸ்.சந்திரசேகர், மாத்தளை.

'நச்' என்று கொடுக்கவேண்டும்.

கனகசிந்தாமணி என்று ஒருவர் இருந்தார். அவர் போகாத நாடில்லை; பார்க்காத ஊரில்லை.

"அமெரிக்க ஜனாதிபதியைப் பார்த்தேன்: ரசிய ஜனாதிபதியைப் பார்த்தேன்: எகிப்திய அதிபரைப் பார்த்தேன்: நான் பார்க்காத ஆளுமில்லை: பார்க்காத இடமும் இல்லை!" என்றார்.

நண்பர் சொன்னார்:

"இவ்வளவு தூரம்போய் எல்லாரையும் பார்த்தீர்களே! பக்கத்தில் உள்ள இன்னுமொரு இடத்தைப் பார்க்கவில்லையே?" என்றார்.

"எது அது?" என்று கோபமாகக் கேட்டார் கனகசிந்தாமணி.

"உங்கள் முதுகு!" என்றார் நண்பர்.

—●●—

★ சமீபத்தில் படித்ததில் உமக்குப் பிடித்த அல்லது மனதில் பதிந்த கவிதை ஒன்று இயம்புக?

செல்வி.க.பவானி, ஹட்டன்.

"எத்தனை உயரம் இமயமலை? அதில் இன்னொரு சிகரம்-உனது தலை! எத்தனை ஞானியர் பிறந்த தரை? நீ இவர்களை விஞ்சிட என்ன தடை?

பூமிப்பந்து என்ன விலை? உன் புகழைத் தந்து வாங்கும் விலை! நாமிப்பொழுது புறப்படுவோம்! வா நல்லதை எண்ணிச் செயற்படுவோம்!" தமிழகக் கவிஞர் தாரா பாரதி எழுதிய கவிதை அது. மனிதர் பின்னியிருக்கிறார்.

—●●—

★ பொய் சொல்லாமல் இருக்க முடியுமா?

செல்வி.உ.கவிதா, காரைதீவு.

பாதிரியார். ஒருவர் பள்ளிப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

எல்லா மாணவர்களையும் பார்த்து ஒரு கேள்வி கேட்டார்:

"இங்கே இதுவரை ஒருபொய் கூடச் சொல்லாத மாணவன் உண்டா?"

எல்லா மாணவர்களும் மௌனமாக நின்றனர். பாதிரியார் அமைதியாக பெருமூச்சு விட்டார். பின்னர் சொன்னார்:

"கர்த்தரே! உமக்கு வணக்கம். எங்கள் மக்கள் முதன் முறையாக மௌனத்தின் மூலம் ஒரேயொரு உண்மையைப் பேசியிருக்கிறார்கள்!"

—●●—

★ உண்மையான பலம் எதிலே, கையிலா? நம்பிக்கையிலா?

எச்.எம்.மகறூப், காத்தான்குடி.

இரண்டிலும் அல்ல. கதையைக் கேளும்:

நபிகள் நாயகம் தம் தோழர்களைப் பார்த்துக் கேட்டார்: "வலிமை உள்ளவன் யார்?"

தோழர்களில் ஒருவர் பதில் சொன்னார்: "எவன் எதிரிகளை வீழ்த்துகிறானோ அவனே வலிமையுள்ளவன்!"

நபிகள் நாயகம் அதை மறுத்தார். பின்னர் சொன்னார்:

கோபம் வந்த வேளையில் தன்னை யார் அடக்கி ஆள்கிறானோ, அவனே வலிமை உள்ளவன்!"

—●●—

## சிந்தியா பதில்கள்

★ உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்குமாறு கூட்டணி கோரியதன் மர்மம் என்ன?

தி.வீரசிங்கம், கொழும்பு-10.

தேர்தலை ஒத்திவைக்குமாறு ஜனாதிபதிக்கு 'ஃபாக்ஸ்' செய்தியாம்! அதற்கு முன்னரே தேர்தலில் போட்டியிட தயார் என்று பச்சைக் கொடி காட்டிவிட்டார்கள். பச்சைக்கொடி அரசை பகைக்காமல் இருக்க! 'ஃபாக்ஸ்' செய்தி கொடுத்ததாக பத்திரிகைகளுக்கு செய்தி தந்தது புலிகளை சாந்தப்படுத்த! 'பாம்புக்கு தலை! மீனுக்கு வால்' என்பது இதுதான்!

—●●—

★ உள்ளூராட்சித் தேர்தல் நடத்துவதற்கு யாழ்ப்பாணத்தில் ஜனநாயகம் இருக்கிறதா?

எம்.பரமலிங்கம், வவுனியா.

"குயில் பாடுவதைக் கேட்பதுதான் வாழ்க்கையிலே எனக்குப் பிடித்தமானது" என்றான் ஒரு மாணவன்.

"கிளிபேசுவதைக் கேட்பதுதான் எனக்கு விருப்பம்" என்றான் இன்னொரு மாணவன்.

"மயில் ஆடுவதைத்தான் நான் இரசிக்கிறேன்" என்றான் மூன்றாவது மாணவன்.

"இரவில் தவளைகள் கத்துவதைக் கேட்பதில்தான் எனக்கு ஆனந்தம்" என்றான் நான்காமவன்.

முதல் மூவரும் திடுக்கிட்டனர்.

"உனக்கு ஏன் அதில் ஆசை?" என்று இவனைக் கேட்டனர்.

"அது தமிழ்க் கட்சிகள் தங்களுக்குள் ஒன்றையொன்று திட்டித்தீர்ப்பதைக் கேட்பது போலிருக்கிறது" என்றான் அவன்.

யாழ்ப்பாணத்தில் நிலவுவது தவளை நாயகம்.

—●●—

★ ஷார்ஜாவில் இந்தியா-பாகிஸ்தான் இரண்டுமே தோல்வி கண்டு திரும்பினவே?

எம்.உவைஸ் ஷெரீப், கண்டி.

பாகிஸ்தான் போராடித் தோற்றது! இந்தியா தோற்கப் போராடியது போலிருந்தது!

—●●—

★ ஜெயலலிதா பாரதிய ஜனதா என்னும் மதவாதக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்துள்ளாரே, இது சரிதானா?

ஜெ.கனேசன், மட்டக்களப்பு.

நம்நாட்டில் ஆளும் கட்சியின் கிளைகளாகவே தமிழ்க்கட்சிகள் மாறிவிட்டன. அதைவிட தமிழ்நாட்டில் ஜெயலலிதாவின் கூட்டு பரவாயில்லை! நிற்க, சென்ற தேர்தலின் பின்னர் பாரதிய ஜனதா ஆட்சி அமைக்க சந்தர்ப்பம் கிடைத்தது. பாரதிய ஜனதாவுக்கு ஆதரவு அளிப்பீர்களா? என்று கேட்க, கலைஞர் சொன்ன பதில்: "அது தீண்டப்படாத கட்சியல்ல," இப்போது ஜெயலலிதாவை மட்டும் எந்த முகத்தோடு திட்டுகிறார் மு.க.?! (மு.கருணாநிதி)

—●●—

★ தமிழ்ப்பட உலகில் முதல் மூன்று இடத்தில் உள்ள நடிகைகள் யார்?

ஆர்.கேதீஸ், கொழும்பு-03.

ரம்பா, சிம்ரான், மீனா.

—●●—

★ உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு வெல்வது மூலம் தெருவுக்கு விளக்குப் போடலாம், தெருவுக்கு தார் போடலாம் என்று தமிழ்க் கட்சி ஒன்று கூறியுள்ளதே சிந்தியா?

தி.விஜயகுமார், யாழ்ப்பாணம்.

தெருவுக்கு விளக்குப் போடவும், தார் ஊற்றவும் இவர்கள் எதற்கு? அரச உத்தியோ

## யாழ்ப்பாணத்தில் தவளை நாயகம்

★ தீபாவளித் திரைப் படங்களில் இன்றுவரை வசூலில் முதலிடத்தில் இருக்கும் படம் எது?

ஆ.சிவரஞ்சித், கல்லாறு

பொற்காலம்!

—●●—

★ இந்திய அணியில் செய்யப்பட்டுள்ள அதிரடி மாற்றம் தேவைதானா?

மா.பாக்கியன், மஸ்கெலியா.

மாற்றம் தேவைதான்! அதற்காக ராகுல் திராவிட், வெங்கட பிரசாத் ஆகியோரையும் தூக்கி வீசும் அளவுக்கு அதிரடி மாற்றம் அநாவசியம்! இலங்கை அணியை ஒருநாள் போட்டித் தொடரின் முதல் போட்டியில் இந்தியா வென்றதற்கு அந்த மாற்றம் காரணமும் அல்ல!

—●●—

★ டியர் சிந்தியா! ஜடேஜாவை இந்திய அணியின் உதவிக் கப்டன் பதவியில் இருந்து நீக்கியது தவறு என்கிறேன். நீர் என்ன கூறுகிறீர்?

பூ.ரமேஷ், நீர்கொழும்பு.

மேலும் சில காலம் நீடிக்கவிட்டிருக்கலாம். இலங்கையுடனான ஒருநாள் போட்டித் தொடரில் முதல் நாள் போட்டியில் இரண்டு அற்புதமான கேட்சுகள் பிடித்து அணியின் வெற்றிக்கு திருப்பம் தேடிக் கொடுத்தது ஜடேஜாதான்!

—●●—



'காதலா காதலா'படத்தில் கமல்

★ 'காதலா காதலா'வில் கமல் என்ன புதுமை செய்யப்போகிறார்?

என்.ரவி, குருநாகல்.

'கல்யாணராமன்' ஸ்டைலில் கருகிறாராம்.

---

(ஸ்போர்ட்ஸ்)

## கபில்தேவின் நிறைவேறாத ஆசை

இந்திய அணி முன்னாள் கப்டனும், சகலதுறை ஆட்டக்காரருமான கபில்தேவ் 'கல்கி' சஞ்சிகைக்கு அளித்த பேட்டி:

**கேள்வி:** பொதுவாகவே வேகப்பந்து வீச்சாளர்களுக்கு கால் மூட்டு வலிதான் வரும். இதற்கு நேர்மாறாக ஸ்ரீநாத்தும், வெங்கடேஷ் பிரசாத்தும் தோள் வலியால் அவதிப்படுகின்றனர். நீங்களும் வேகப்பந்து வீச்சாளராக இருந்தவர் என்ற முறையில் இதற்கான காரணத்தைச் சொல்ல முடியுமா?

**கபில்தேவ்:** வேகப்பந்து வீச்சாளர்கள் பந்து வீசும் ஒவ்வொரு முறையும் இரு கால்களையும் பூமியில் நன்கு அழுத்தியாக வேண்டும். அதுவும் பவுன்ஸர் போடும் போது, பந்தை டெலிவரி செய்கிற அந்த நேரத்தில், உடம்பு பாரம் முழுவதையும், ஒரே காலில் கொண்டுவர வேண்டியிருக்கும். அதன் காரணமாகத்தான் மூட்டுவலி.

இருந்தும் இவர்களுக்கு மூட்டுவலி வராமல் தோள்வலி ஏன் வந்தது என்றால், பரந்த தோள்கள் இல்லை என்பதால்தான். வேகப்பந்து வீச்சாளர்கள் என்றால் அகன்று விரிந்த தோள்கள் அவசியம் தேவை. உலகின் தலை சிறந்த வேகப்பந்து வீச்சாளர்களான அன்டி ரொபேட்ஸ், டென்னிஸ் லில்லி, ஜெஃப் தொம்சன், மைக்கல் ஹோல்டிங், இம்ரான்கான், ஏன் எனக்கும் கூடப் பரந்த தோள்கள் இருந்தன. இவர்களுக்கு அப்படியில்லை.

'நிறையப் பயிற்சிகள் செய்து தோள்களைப் பலமுள்ளதாக ஆக்கிக்கொள்' என்று நான் ஸ்ரீநாத்திடம் சொல்லியும் இருக்கிறேன். ஆனால் கேட்கவில்லை. கூடவே அவர் சுத்த சைவமாக இருந்தது கூட அவரது தோள்வலிக்குக் காரணமாக இருந்திருக்குமோ என்று சந்தேகப்படுகிறேன். நான் இப்படிச் சொல்வது வேகப்பந்து வீச்சாளர்களுக்கு மட்டுமல்ல. அனைவருமே பயிற்சிகள் செய்து தோள்களைப் பலப்படுத்திக் கொள்வது அவசியம். சில சமயங்களில் சுழற்பந்து வீச்சாளர் கூட வேகப்பந்து வீச வேண்டி இருக்குமே!

**கேள்வி:** நீங்கள் விளையாடிய கால கட்டத்தைவிட இப்போதைய ஆட்டக்காரர்கள் அதிக போட்டிகளில் விளையாட வேண்டியிருக்கிறது. இதுகூட இவர்களின் தோள் வலிக்குக் காரணமாக இருக்கலாம் என்றும் சொல்கிறார்களே?

**கபில்தேவ்:** இதுவும் ஓர் உண்மைதான். கடந்த 96-97ம் ஆண்டில் மட்டும் இவர்கள் 200 நாட்கள் இந்தியாவுக்காக விளையாடி



யிருக்கிறார்கள்- பந்து வீசியிருக்கிறார்கள். தவிர ரஞ்சிக்கோப்பை போன்ற போட்டிகளிலும் ஆடுகிறார்கள். இயந்திரங்களுக்குக்கிடைக்கின்ற ஓய்வுகூட இவர்களுக்கு இல்லாமற் போய்விட்டது. இதற்கு கிரிக்கெட் சபையை மட்டும் குறை சொல்லிப் பயனில்லை. சச்சின் முதல் அஸார் வரை எந்த வீரர்களாவது இத்தனை போட்டிகள் வேண்டாம் என்று சொல்லுகிறார்களா? சொல்ல மாட்டார்கள். காரணம் என்ன?

பணம். நிறையப் பணம் வருகிறதே. கூடவே பயம். இவர்கள் ஆடாத நேரங்களில் இவர்களின் இடத்தை மற்றவர்கள் பிடித்து விட்டால் என்ன செய்வது என்கிற பயம். இவற்றின் காரணமாகவே, ஒரு போட்டிக்கு உடலளவில் இவர்கள் தயாராக இல்லாத நிலையிலும் அதில் விளையாடுகிறார்கள். இதற்குக் கிரிக்கெட் சபையின் டாக்டரும் உடந்தை. அவருக்கும் பணம் தேவைப்படுகிறதே.

**கேள்வி:** உலக சாதனை செய்த உங்களுக்கும் நிறைவேறாத ஆசை இருக்கிறதா?

**கபில்தேவ்:** உண்டு. 434 விக்கெட்டுக்களை எடுத்து உலக சாதனை செய்திருந்தாலும் இன்னும் ஒரேயொரு விக்கெட் எடுக்காமல் போய் விட்டோமே என்கிற வருத்தம். அதுவும் பாகிஸ்தான் வீரரின் விக்கெட். 99 பாகிஸ்தான் வீரர்களின் விக்கெட்டுக்களை எடுத்த நான் இன்னும் ஒரு பாகிஸ்தான் வீரரின் விக்கெட்டை வீழ்த்தியிருந்தால், ஒரு நாட்டின் அணிக்கெதிராக 100 விக்கெட்டுக்கள் எடுத்த சாதனையையும் செய்திருப்பேன். அது நிறைவேறாமல் போய்விட்டதே!



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 114

# எதிர்பார்ப்பும் ஏமாற்றமும்

இராமபிரானின் ஆணைப்படி, விபீடணரை இலக்குவன் இலங்காபுரியின் இணையிலா அரியணையில் வீற்றிருக்க வைத்து, அவருடைய சிரசில்-நவரத்தினங்கள் அளவுப் பரிமாணத்துடன் பதித்த தங்க முடியினைச் சூட்டினார். இராவணனின் மறைவினாலும் அவன் தர்மபத்தினி மண்டோதரியின் இறப்பினாலும் துயரடைந்த அரக்க மக்கள், தங்கள் கவலைகளை மறந்தனர். துன்பத்தின் சுவடே தெரியாமல் அனைவரும் இன்ப சாகரத்தில் மூழ்கினர்.

முடிசூட்டு விழா முடிவடைந்ததும் தனது அரியணையிலிருந்து இறங்கிய விபீடணர், இளைய பெருமாள் இலக்குவனின் தாளினைத் தொட்டு வணங்கினார். இலக்குவன் அவரைத் தூக்கி நிறுத்தி அணைத்துக் கொண்டார். இலக்குவனை இருகைகளையும் பிடித்து இழுத்துச் சென்ற விபீடணர் அவரைத் தனது சிம்மாசனத்தில் அமரச் செய்தார்.

"பெருமதிப்புக்குரிய இளையபெருமாளே! யான் அண்ணன் இராமச்சந்திர மூர்த்தியின் தாள் பணிந்து எனது நன்றிக் கடனைத் தீர்த்து வரவேண்டும். அதுவரை தாங்களே இந்நாட்டின் அரச பரிபாலனத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்!"

இவ்வாறு விபீடணர் கூறியதும் சபையிலிருந்த அரக்கப் பிரமுகர்கள் அனைவரும் பெரு வியப்புடன், பெரு மகிழ்வினை வெளிக்காட்டினார்கள்.

**விலங்கல் நாண மிடைதரு தோளினாய்**
**இலங்கை மா நகர் யான் வரும் எல்லை நீ**
**கலங்கலா நெடுங்காவல் இயற்று எனா**
**அலங்கல் வீரன் அடி இணை எய்தினான்.**

*(யுத்த காண்டம்-432)*

பொருள்:

*"பெருமலையும் நாணும் வண்ணம் மாபெரும் அளவுடையதும் வலிமையுடையதுமான தோள்களை யுடையவனே! யான் இராமபிரானிடம் சென்று என் நன்றிக் கடனைத்தீர்த்துவிட்டு இங்கு வந்து சேரும் வரை இந்த இலங்கை வள நாட்டின் ஆட்சிப் பொறுப்பினை, எத்தகைய கலக்கமு*

## இராஜகுமாரன்

*மில்லாமல் ஏற்று நடத்த வேண்டுகிறேன்," என்று கூறிய வண்ணம் இளவலிடம் ஆட்சிப் பொறுப்பினை ஒப்படைத்துவிட்டு வெற்றி வாகை சூடிய இராமபிரானிடம் சென்று அவர்தம் திருவடிகளில் வீழ்ந்தார்.*

## மாமன்னனுக்குரிய மரியாதை

முடிபுனைந்து கொண்ட மறுகணமே தன் இருப்பிடத்தை நாடி ஓடோடி வந்த விபீடணரைக் கண்ட இராமபிரான் தன் இருக்கையை விட்டு எழுந்தார். அவரும் வேகமாக நடந்து முன்னேறி வரலானார். தன்னைக்கண்டு இராமபிரான் எழுந்து வருவதைக் கண்ட விபீடணர் துணுக்குற்றார். அவருடைய கால்கள் மனோ வேகத்திலும் வேகமாக ஓடிவந்தன. அண்ணலை நெருங்கியதும் விபீடணர் சாஷ்டாங்கமாக இராமபிரானின் பாதங்களில் வீழ்ந்து கதறினார்.

"அண்ணலே! அர்ப்பத்தனமான செயல்களுக்கே உரித்துடைய அரக்கர் குலத்தவனான என்னைக் கண்டு, தாங்கள் தங்கள் இருக்கையை விட்டு எழுந்து ஓடிவரலாமா? தங்கள் பூப்போன்ற புனிதப் பொற்பாதம் இம்மண்ணிலே எனக்காகப் படலாமா?" என்று விம்மி விம்மி அழுதவாறு விபீடணர் கேட்டார். புன்முறுவல் பூத்த முகத்தினரான இராமபிரான் இவ்வாறு பதிலளித்தார்:

"விபீடண மாமன்னரே! நீர் எமது தம்பி தான்! ஆனால் பல்வளமும் பல்கிப் பெருகி வாழும் இலங்கை வளநாட்டின் இணையற்றத் தலைவன். என்னைப் பொறுத்தவரை, நான் ஒரு சாமானியன். என்றோ ஒரு நாள் நான் இளவரசுப் பட்டம் புனைவதற்குரிய ஆயத்தங்கள் மட்டுமே நடைபெற்றன. ஆனால் அப்பதவிக்கே இலாயக்கற்றவனாகிவிட்டேன். ஒரு மாமன்னவனுக்கு முன்னே இந்தச் சாமானியன் அமர்ந்திருப்பது நியாயமில்லை அல்லவா...?" என்று கூறி முடிப்பதற்கு முன்னரே இராமபிரானுடைய வாயிலிருந்து வேறு வார்த்தைகள் உதிர்வதற்கு முன்னரே அவருடைய வாயினைத் தன் கையினால் பொத்திக் கொண்டார் விபீடணர்.

இந்த நிலையில் விபீடணரின் கவனத்தை வேறு திசையில் திருப்பும் நோக்குடன்



இராமபிரான், அங்கு அப்போதுதான் வந்து சேர்ந்த ஆஞ்சநேயரை தன்னருகில் வருமாறு அழைத்தார். அவரும் ஓடோடி அருகில் வந்து வாய் புதைத்து நின்றார்.

"மாருதி! உமக்கு ஒரு பணி உண்டு! ஜானகியிடம் போய், இராவணன் ஆட்சி முடிந்துவிட்டது. இந்த நாட்டின் நீதியும் தர்மமும் நிலை பெற்று விளங்குவதற்குரிய ஆட்சி மலர்ந்துவிட்டது. ஆகவே என்னிடம் வருவதற்கு ஆயத்தமாகும்படி கூற வேண்டும்!" என்று கேட்டுக் கொண்டார். அண்ணலின் ஆணைக்காகவே அதுவரை காத்திருந்தவரைப் போல் பெரு மகிழ்வுற்ற ஆஞ்சநேயர், ஐயனின் தாள் பணிந்து விடைபெற்று வானில் தாவிப் பறந்தார்.

★ ★ ★

## மாதாவிடம் வந்த மாருதி

அசோக வனத்தில் சீதாப்பிராட்டியார் மட்டற்ற மகிழ்ச்சியுடன் காணப்பட்டார். விபீடணர் மகள் திரிசடைமூலம் போர்க்களப் புதினங்களைக் கேள்விப்பட்டு, தன் கணவரிடமிருந்து எப்போது அழைப்பு வரும் என்று காத்திருந்த பிராட்டியார் காதில் 'ஸ்ரீ ராம ஜெயம்' என்னும் மந்திரம் கேட்டது. தான் நினைத்தபடி தனக்கு அழைப்பு வருகிறது என்று அவருடைய மகிழ்ச்சி பன் மடங்காகப் பெருகியது.

சற்று நேரத்தில் ஆஞ்சநேயர், ஓடோடி வந்து பிராட்டியாரின் பாதங்களில் வீழ்ந்தார். "அன்னையே! அன்று நான் கூறியபடி அண்ணல் இராமச்சந்திரப் பிரபு அரக்கர் தலைவனை சங்காரம் செய்துவிட்டார். தங்களை வாட்டிய துயரம் ஒழிந்து விட்டது. ஞானக்கடலாம் அந்தப் பரம் பொருளைத் தாங்கள் சென்று அடையக் காலம் வந்து விட்டது. தாங்கள் அங்கு செல்வதற்கு ஆயத்தமாக இருக்கும்படி கூறுமாறு அண்ணல் எனக்கு ஆணையிட்டார்!" என்று பக்தி ததும்பக் கூறினார்.

பிராட்டியார் அனுமனை வாழ்த்தி விட்டு, "மாருதி! அன்று நான் என்னுயிரை மாய்த்துவிடத் துணிந்து நின்றபோது, என்னை ஓடோடி வந்து தடுத்தீர்! நீர் அன்று கூறியபடி ஒரு மாதகாலத்துள் எனக்கு விமோசனம் அளித்து விட்டீர்! ஆனால், நீரே என்னை அண்ணலிடம் அழைத்துச் செல்லலாகாது? என்னை அழைத்து வருமாறு அவர் ஏன் உம்மிடம் கூறவில்லை?" என்று வினவினார்.

இவ்வினாவுக்கு விடை அளிக்க மாருதியால் முடியவில்லை! "அன்னையே! அண்ணல் எனக்கிட்ட கட்டளைப்படிதான் நான் தங்களிடம் வந்தேன். தங்களை நான் அழைத்து வரவேண்டும் என்று அவர் என்னிடம் கூறவில்லை!" என்றார்.

• • •

ஆஞ்சநேயரின் பார்வை, அசோகவனத்தில் மூலை முடுக்குகளில் சோகமே உருவாக நின்றிருந்த அரக்கியர்களின் மீது திரும்பியது. அவருடைய முகத்தில் கோபக் கனல் வீசியது. பிராட்டியாரை நோக்கிய அவர், "அன்னையே! இக்கொடிய அரக்கியர்கள் தானே தங்களை மிகக் கொடுமையாக வதைத்தவர்கள்? இவர்களை இப்போதே நசுக்கி அழித்து விடவேண்டும். ஆணையிடுங்கள்! துன்மார்க்க நெறியில் நின்றுழலும் இக் கொடியவர்களை இந்த நொடியிலேயே நொறுக்கி விடுகிறேன்!" என்று கூறினார்.

## தண்டிக்கலாகாது

இதைக் கேட்ட பிராட்டியார், "ஆஞ்சநேயா! இவர்கள் எதுவுமே அறியாத அப்பாவிகள். தங்கள் தலைவன் இட்ட கட்டளை எத்தகைய அதர்மம் கொண்டதாக இருந்தாலும் அதனை உடனடியாக நிறைவேற்றுபவர்கள். அவர்கள் கடமையுணர்வு கொண்டவர்கள். ஆகவே அவர்களைத் தண்டிக்க நினைப்பது தர்மமாகாது. அவர்கள் ஒரு வகையில் போற்றுதற்குரியவர்கள்!" என்றார். அனுமனும் சினம் நீங்கி அமைதியானார். சீதாப்பிராட்டியார் தங்களைப் பற்றிக் கூறிய வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்த அரக்கியரும் அன்னையின் பாதங்களில் வீழ்ந்து, தங்களை மன்னிக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

இராமபிரான் விபீடணரை அழைத்து அவருக்கு ஒரு ஆணை பிறப்பித்தார். "மாமன்னரே! தாங்கள் இந்நாட்டின் மன்னர் என்ற தகுதியைப் பெற்றுள்ளமையினால் தாங்களே சென்று இராவணன் என்னும் மாமன்னனால் சிறை வைக்கப்பட்ட சீதாப் பிராட்டியாரை உரிய அலங்காரங்களுடன் அழைத்து வருக!" என்றார்.

இவ்வாறு இராமபிரான் கூறும்போது அவருடைய முகத்தில் அதுவரை காணப்படாத சோகம் படர்ந்தது. அத்துடன் அவர் சற்றுக் கடுகடுப்பாகவும் காணப்பட்டார். அன்னவரின் திடீர் மாற்றம் விபீடணரையும் அங்கு நின்றிருந்த ஏனையோரையும் சற்றுக் கலக்கியது.

விபீடணர் விரைவாகச் சென்று பிராட்டியாரை வணங்கி நின்றார். இராமபிரான் தனக்கிட்ட கட்டளையையும் கூறினார். ஆனால் அலங்காரம் செய்துகொள்ள விரும்பவில்லை. தான் அப்போதிருந்த நிலையிலேயே புறப்படச் சித்தமானார். ஆனால் தேவலோக கன்னியர்களான திலோத்தமை, அரம்பை, ஊர்வசி, மேனகை ஆகியோர் சகலவித அலங்காரப் பொருட் களுடன் அங்கு வந்து சேர்ந்தனர். அலங்காரங்கள் எதையும் பூண மறுத்த பிராட்டியாரை அந்தத் தேவ மகளிர் நீராட்டி விட்டனர்.

பிராட்டியார் மெல்ல நடந்து இராமபிரானை நெருங்கினார். பெருமகிழ்வோடு தன்னை ஆவலுடன் வரவேற்பார் என்று எண்ணினார். ஆனால் இராமபிரானின் முகத்தில் தோன்றிய விசித்திரமான உணர்வு பிராட்டியாரைத் திக்கு முக்காட வைத்து விட்டது. விம்மி விம்மி அழ ஆரம்பித்து விட்டார்.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 112

**சரியானவிடை:- இந்திரன்**

1. மு.இராஜலதா, வேவெஸ்ஸ இல1, பதுளை.
2. தே.சிந்துஜா, கருணைபுரம், வாழைச்சேனை.
3. எஸ். ருசாந்தன் நு/வ/இராகலை, த.ம.வி., ஹல்கரனோயா.
4. எஸ்.எம்.சாபிக், 25, நிகவடவன, கிபிஸ்ஸ, தம்புள்ள.
5. பரராஜசிங்கம் அரிசனா, சி.சி.ரி.எம்.எஸ். முகாம், பூந்தோட்டம், வவுனியா.

**போட்டி இல. 114** கேள்வி:- **தேவ மங்கையரின் பெயர்களைத் தருக?**

ஜனவரி 03 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி – இல.114, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

---

## கடன் உதவி கோரல்

கடந்த காலத்தில் இலாபத்தில் இயங்கிய கட்சி ஒன்றுக்கு, தேர்தலில் போட்டியிடவும் தேர்தல் வேலைகளுக்கும் ஆட்கள் தேவை. ஆள் வசதியுள்ள சக கட்சிகளும் தந்து உதவலாம். வெட்கப்படாமல் பெற்றுக்கொள்ளுவோம்ரு

ஒரே ஒரு மாத காலத் தவணையில் கடன் ஆட்கள் திருப்பித் தரப்படுவர். கடனாகப் பெறப்படும் ஒவ்வொரு நான்கு ஆட்களுக்கும் வட்டியாக, எமது ஆள் ஒருவர் தரப்படுவர்.

எனவே, எமக்கு நான்கு பேரைத் தருவது மூலம் நீங்கள் மேலும் ஒரு ஆளை சம்பாதிக்கிறீர்கள் என்பதை மறக்கவேண்டாம்.

பெருந்தொகையாக எங்களுக்கு ஆள் உதவி செய்து, கொளுத்த ஆள் இலாபம் சம்பாதிக்க அரிய வாய்ப்பு! இதனை தவறவிடாதீர்.

-தொடர்புகளுக்கு-
சீட்டணி
சூரியன் இல்லம்
(தலைமறைவு வாசஸ்தலம்)

---

## கொள்கை முரண்பாடு

**உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகளை காதிலை பூ கந்தசாமியார் கற்பனையாக சந்திக்கிறார்.**

**கா.பூ.க:** இத்தேர்தலில் தாங்கள் போட்டியிடக் காரணம்?

**த.கட்சி (இல1):** தேர்தல் நடப்பதால்தான் போட்டியிடத் தீர்மானித்தோம்!

**த.கட்சி (இல2):** இத் தேர்தல் நடத்திருக்காவிட்டாலும், போட்டியிடும் அளவுக்கு பதவி ஆசை கொண்டவர்கள் அல்ல நாங்கள் என்பதை தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்!

**த.கட்சி (இல3):** தேர்தல் நடக்கப்போவதாக அறிவித்த உடனேயே எங்கள் பொதுக் குழுவை கூட்டினோம். தேர்தல் நடந்தே தீரும் என்று திட்டவட்டமாக அறியும் வரை பொதுக்குழுவும் கூடியது, கூடியது, கூடிக்கொண்டே இருந்தது. தேர்தல் நடந்தேதீரும் என்று அரசு ஒற்றைக் காலில் நின்றதால், இத் தேர்தலில் சொந்தக்காலில் நின்று போட்டியிட பொதுக்குழு தீர்மானித்தது! அரசு மட்டும் தேர்தலை ஒத்திப்போட்டிருந்தால், இத் தேர்தலில் போட்டியிட நாம் தயாராக இருக்கவில்லை என்ற வரலாற்று சிறப்பு மிக்க தீர்மானத்தை எங்கள் பொதுக்குழு எடுத்திருக்கும்.

**த.கட்சி (இல4):** இத் தேர்தலை உண்மையாகவும், வன்மையாகவும் கண்டிக்கிறோம்! உறுதியோடு எதிர்ப்புத் தெரிவித்தும் இருக்கிறோம்! தேர்தல் நடப்பதால் நாமும் போட்டியிடுகிறோம்!, அரசு தேர்தலை நிறுத்திவைக்குமானால் தேர்தலில் போட்டியிட நாம் விரும்ப மாட்டோம்!

**த.கட்சி (இல5):** இன்றைய சூழ்நிலை தேர்தல் நடக்கிற சூழ்நிலையல்ல, ஆயினும் அரசு தேர்தலை நடத்துகிற சூழல் இருப்பதால் நாம் போட்டியிடுகிறோம்.

**கா.பூ.க:** உங்கள் கொள்ளை விளக்கம்... மன்னிக்கவும்... கொள்கை விளக்கம் புல்லரிக்க வைக்குது. ஏன் தனித்தனியாக போட்டியிடுகிறீர்கள்? என்ற கேள்விக்கே இடம் இல்லாமல், உங்கள் பதில்களில் காணப்படும் மலையளவு வித்தியாசங்கள், உங்கள் கொள்கை வேறுபாடுகளை கோடிட்டுக் காட்டுகின்றன. தமிழ்க் கட்சிகளுக்குள் கொள்கை முரண்பாடு உண்டா? ஏன், கொள்கைதான் உண்டா? என்று கேட்கும் அறிவிலிகளுக்கு, இப்பேட்டி பாரமான இரும்பால் தூக்கி மண்டையில் போட்டது போல இருக்கும்! ஹீ.ஹீ.ஹீ

(தமிழ்க் கட்சிகள் அனைத்தும் கா.பூ.கந்தசாமியாரை கட்டித் தழுவுகின்றன)

---

## -வாக்குறுதி வங்கி-
## பயன்படுத்துவீர் – பயன்பெறுவீர்

உள்ளூராட்சி தேர்தலுக்கு எத்தகைய வாக்குறுதிகளை வழங்குவது என்று யோசித்துக் கொண்டிருப்போருக்கு, ஏதோ நம்மாலான ஒரு உதவி. நம்மிடம் கைவசமுள்ள வாக்குறுதிகளில் சில இதோ:

1) சோதனைச் சாவடிகளைக் கண்டு அடிக்கடி முகம் சுளிப்பு ஏற்படாமலிருக்க, அச்சாவடிகளுக்கு முன்பாக பூஞ்செடிகளை நாட்டிவைக்க, படையினரின் அனுமதியுடன் முயற்சிக்கப்படும்.


2) குண்டுப் புரளிகள் ஏற்படாதிருப்பதற்காக கண்ணாடியிலான குப்பைத் தொட்டிகள் (படையினரின் பாதுகாப்புக்கு பங்கம் இல்லாதபடி) ஆங்காங்கே வைக்க முயற்சிக்கப்படும்.

3) கண்ணிவெடிகள் வைப்பதானால், முன்கூட்டியே உடைந்து கிடக்கும் வீதிகளை மட்டும் பாவிக்குமாறு விடுதலைப் புலிகளிடம் கோரிக்கை விடுக்கப்படும். அதன் மூலம் வீதிகளை அழகாக்கி, பொதுமக்களின் போக்குவரத்து, படையினரின் போக்குவரத்து என்பவற்றை இலகுவாக்க முயற்சிக்கப்படும்.

4) பயிற்சி பெற்ற உறுப்பினர்கள் மூலம் நுளம்பு ஒழிப்பு தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும். இப்போராட்டத்தையாவது இறுதிவரை தொடர முயற்சிக்கப்படும்.

மேற்கண்ட வாக்குறுதிகளை யார் வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம். எம் அனுமதி தேவையில்லை.

மேலும் விதம் விதமான வாக்குறுதிகள் உண்டு. எமது வங்கியில் பங்குதாரர் ஆகுங்கள்.



அரசியல்வாதிகளே! அபேட்சகர்களே! வாக்குறுதி வங்கி, உங்களின் வங்கி! உங்கள் பொன்னான எதிர் காலத்திற்காக நீங்கள் விரும்பும் பொய்களை குறைந்த வீத வட்டியுடன் தருகிறது.

உடன் தொடர்பு கொள்க

-வாக்குறுதி வங்கி-

---

## தேர்தல் பாடல்கள்
## சிறப்புத் தள்ளுபடி

அன்பார்ந்த அபேட்சகர்களே!

எம்மிடம் தேர்தல் திருவிழாவுக்கான பாடல் கசட்டுகள், பாட்டு புஸ்தகங்கள் என்பன சிறப்புத் தள்ளுபடியில் விற்பனைக்கு உண்டு. வந்து தள்ளிச் செல்லுங்கள்.

*மூன்றெழுத்தில்–எம்*
*மூச்சிருக்கும்! அது*
*போனபின்னாலும்*
*முன்னாள் உறுப்பினர்*
*என்ற பேச்சிருக்கும்*
*தேர்தல் என்றொரு*
*நாளிருக்கும்–அந்த*
*தேர்தலில் எமக்கொரு*
*இடம் கிடைக்கும்*
*பதவி! அது பதவி!*

*பொய்யே உன் அன்னை*
*புரட்டே உன் தந்தை*
*புளுகே உன் கோயில்*

*(முன்றெ)*

இவ்வாறான தரமான பாடல்கள் ஏராளமாக உள்ளன. போனால் கிடைக்காது. பொழுதுபட்டால் ஊரடங்கு காரணமாக கடை திறந்திருக்காது! உடனே வருக! கடன் தரப்படமாட்டாது. கப்பமாய் கேட்டால் இராணுவ அதிகாரியிடம் புகார் செய்யப்படும்.

**காதிலை பூ கந்தசாமி**



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/43/NEWS/97)




பெண்களின் அழகோ இரகசியம்! அதை
எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
436331







SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
323657


**புதியது பிறக்கட்டும்**
**பொய்மைகள் ஒழியட்டும்**
**புதியன சிறக்கட்டும்**
**அநீதி ஒழியட்டும்**
**நீதி நிலைக்கட்டும்**
**நிம்மதி பிறக்கட்டும்**
**வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!**

# சின்ன மரம்

பெரிசு பெரிசாக மரம் வளர்த்து விட்டு காய் எட்டவில்லை, கனி எட்டவில்லை என்று அவதிப்படும் அவசியமில்லை. பெரியளவில் வளர்ந்து பயன்தரும் பனைமரம், தென்னை மரம், மாமரம் போன்றவற்றை வீட்டுக்குள்ளேயே கைக்கு அடக்கமாக வைத்து வளர்க்க முடியும். அவ்வாறு மரம் வளர்க்கும் கலைக்கு போன்சாய் முறை என்று பெயர்.

ஜப்பான் நாட்டில் இந்த அதிசய முறையைக் கண்டு பிடித்தனர். இப்போது உலகெங்கும் பிரசித்தம். இட நெருக்கடிகள் ஏற்பட்டுவருவதால் இப்படியான புதுவித மரம் வளர்க்கும் கலைக்குத்தான் இனி மரியாதை இருக்கும். வாடகைக்கு சின்னஞ் சிறு வீட்டில் குடியிருப் போர்கூட போன்சாய் முறையில் தென்னை வளர்க்க லாம். தேங்காய் பறிக்கலாம். வீடு மாறும்போது பூந் தொட்டியுடன் தென்னை மரத்தைக் கொண்டு போகலாம்.

ஜப்பான் மொழியில் போன் என்பது பூந்தொட்டி அல்லது கொள்கலனையும், சாய் என்பது மரத்தையும் குறிக்கும். போன்சாய் முறையில் வளர்க்கப்படும் எந்த மரமும் 3 அடி உயரத்திற்கு மேல் இருக்காது அரை அடி உயரத்துக்கு குறையாது.

ஜப்பானில் போன்சாய் முறையில் வளர்க்கப்பட்ட மரங்கள் 100 ஆண்டுகள் வரைகூட இருக்கின்றனவாம்.



# படம் பார்



தரையில் மனிதன் பலியாகிச் சாய்ந்தால் அடியற்ற மரம்போல விழ்ந்தான் என்பார்கள். ஆனால் இந்த மரம் சாயவில்லை. சாய்ந்தது போலத் தெரிகிறது. அதுதான் கமரா வித்தை. சூரிய அஸ்தமனக் காட்சியை மலை உச்சியில் இருந்து படமாக்கியபோது இப்படி ரம்மியமான காட்சியாகிவிட்டது. காட்சிக்கும் பொய் அழகு.

அமெரிக்காவின் மேற்காக உள்ள வியோமிங் மற்றும் மொன்ரானா மாநிலத்தில் மூவாயிரம் உயர மலைப் பகுதியில் இருந்து கிளிக் செய்யப்பட்டது. மஞ்சளாகத் தெரிவது 'யெலோ ஸ்ரோன்' எனப்படும் மஞ்சள் ஆறு.

# விண்ணிலா

போர்க்களத்தில் புயல்களாகவும், மற்றும் சகல துறைகளிலும் முன்னணி வகிப்பவர்களாகவும் விண்கலத்தில் ஏறி வலம் வருவோராகவும் பெண்கள் சாதனை படைத்து வருகிறார்கள்.

உலகில் முதலாவது விண்வெளி வீராங்கனை வாலெண்டினா தெரஸ்கோவா. பெண்களுக்கு சம இடம் தந்த சோசலிச சோவியத் நாடு அவரை அனுப்பிவைத்தது. 1963 ஜூன் 16ல் அவர் விண் வெளி சென்றார். அதன்பின்னர் பல வீராங்கனைகள் சென்று வந்துள்ளனர். பக்கத்து ஊருக்கு பயணம் போய்வருவதுபோல ஜாலியான உணர்வுடன் விண்ணில் சுற்றிவிட்டு (வீணில் சுற்றவில்லை) வந்திருக்கிறார் கல்பனா சாவ்லா.




விண்ணுக்கு சென்றுள்ளார் நம் அயல்நாடான இந்தியாவின் பெண்மணி கல்பனா சாவ்லா. இந்தியாவில் இருந்து முதன் முதலாக விண்ணுக்கு சென்ற பெண் இவர்தான். பெண்களை வீட்டுக்குள் பூட்டிவைத்த இந்திய சமுகம், இன்று பல தூரங்களை கடந்திருக்கிறது. இது போதாது என்றாலும் முன்னேற்றம்தான்.

சமையலறையில் அடுப்புக் களாகவும், படுக்கையறையில் தீபங் களாகவும் மட்டுமே பெண்ணை ஜடமாக கருதிய காலம் நிதானமாக மலையேறத் தொடங்கியிருக்கிறது.

மொத்தமாக பத்தரை மில்லியன் கிலோமீட்டர் கல்பனா சாவ்லா பயணம்போய் திரும்பியிருக்கிறார். விண்வெளியில் பறந்தபடியே பிரதமர் குஜ்ராலுக்கு பிறந்தநாள் வாழ்த்து அனுப்பினார் இந்தப் பறக்கும் பாவை. மிக இயல்பாக ரவிஷங்கரின் சிதார் மியூசிக் கேட்டுக் கொண்டிருந்தாராம். கைகொடுங்கள் கல்பனா சாவ்லா!

# நாயகன்



ஷார்ஜாவில் நடைபெற்ற சிங்கர்-அக்காய் கிண்ணப் போட்டியில் இந்தியா திட்டமிட்டுத் தோற்பதுபோல விளையாடியது. இந்தியக் கிரிக்கெட் அணியின் வழக்கமான ரசிகர்கள் மட்டுமல்ல, ஒட்டுமொத்தமான கிரிக்கெட் ரசிகர்கள்கூட இந்திய அணியின் பொறுப்பற்ற ஆட்டத்தை திட்டித் தீர்த்தனர்.

ஆனால் அத்தனைபேரும் ஒரே ஒருத்தரை மனம் திறந்து பாராட்டினர், அவர்தான் சவுரவ் கங்குலி.

சமீபகாலமாக இந்திய அணியில் நம்பிக்கை தரும் விதமாகவும், முக்கியமாக பொறுப்பாகவும் ஆடி வருவதும் கங்குலிதான்!

சமீபத்தில் ஷார்ஜாவில் நடைபெற்ற போட்டிகளில் இந்தியா ஜெயித்திருந்தால் தொடரின் நாயகன் கங்குலிதான். இங்கிலாந்துக்கு எதிராக 29, பாகிஸ்தானுடன் 90, மேற்கிந்திய அணியுடன் 70 என்று கங்குலி புகுந்து விளையாடியும், அணிமட்டும் துவண்டு போனதுதான் சோகம்..

கங்குலியின் பொறுப்பான ஆட்டத்திற்கு என்ன காரணம்? அதை கங்குலியே சொல்கிறார்: "திருமணம்தான் காரணம். திருமணத்தின் பின்னர் எதிலும் ஒரு பொறுப்பு, நிதானம் வந்துவிட்டது." திருமதி கங்குலிக்கு பாராட்டுக்கள்!

# 12வது பிறந்த தினம்

சராசந்தன்–காஞ்சனா தம்பதியினரின் செல்வப் புதல்வன் ஜீவிதன் தனது பன்னிரெண்டாவது பிறந்த தினத்தை 01.11.1997 அன்று தனது அன்புத் தங்கை டமிஷ்காவுடன் மன்னார் இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். அப்பா, அம்மா, உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் செல்வன் ஜீவிதனை எல்லாம் வல்ல சித்தி விநாயகப் பெருமான் அருள் பெற்று, பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வசந்த வாழ்க்கை வாழ வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

தகவல்:–
மு. சராசந்தன்,
மன்னார்.



செல்வன் ஜீவிதன்
01.11.1997